# ஐந்தப்பம் இருமீன்

வேதாகமச் சத்தியங்களின் நாற்பது தொகுப்புகள்

R. ஸ்டான்லி



# ஐந்தப்பம்
# இருமீன்

**R. ஸ்டான்லி,** B.E, M.Tech.,
*திருமறைப் போதகராய்*
*மாறிய ஒரு கட்டிடப் பொறியியலர்*

*வெளியிடுவோர்:*
**ஆசீர்வாத இளைஞர் இயக்கம்**
சர்ச் காலனி, வேலூர் 632 006
*தொலைபேசி: 00 91 416 2242943, 2248943*
*<hq@bymonline.org>   www.bymonline.org*

**FIVE LOAVES & TWO FISH** (Tamil)

Copyright 1998 R. STANLEY
13 Church Colony,
Vellore 632 006, India
*<stanleyonbible@hotmail.com>*

First Edition : May 1998
Second Edition : August 1998
This Edition : December 2014

The cover photo by the author
was taken in Sanaa, Yemen Arab Republic.

Available in Tamil also.

Typeset by K. Gunasekaran,
Retired Missionary, BYM

*Permission must be obtained
from the author for any type of reproduction
of the articles from this book.*

Writers and editors may freely reprint the outlines from this book provided they mention the source and send a copy of the published material to the author.

Printed by
Bapuji Printers, Chennai

## அட்டவணை


0. ஐந்தப்பம் இருமீன் 5
1. எனக்கெல்லாம் அவரே! 6
2. அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே! 8
3. எண்ணிப்பார் நீ பெற்ற பாக்கியங்கள்! 12
4. உயிர்த்தெழுதலின் ஆசீர்வாதங்கள் 14
5. உடலுறுப்புகள் அர்ப்பணம் 16
6. ஜெப நினைவூட்டிகள் 19
7. ஜெபிப்பது எப்படி? 23
8. ஜெபத்தில் நோக்கம் 25
9. சமாதானத்தின் தேவன் 28
10. ஆதிநிலை ஆசீர்வாதங்கள் 30
11. ‘‘தேவனே, என்னை ஆராய்ந்து பாரும்!’’ 32
12. மும்மூன்று உதாரணச் சத்தியங்கள் 37
13. இளைஞனாயிருக்கிறேன் என்று சொல்லாதே! 39
14. வாலிபர் தேவை! 41
15. ஓர் இளைஞர் முகாமிற்கு ஜெபம் 44
16. மாணவருக்குப் பரீட்சை டானிக்! 47
17. உனக்கு வேதம் கூறுவது... 49
18. புனித மலையில் ஏறுவது எப்படி? 56
19. நான் மட்டும் பிசாசாயிருந்தால்... 59
20. ஆவியானவரை நான் என்ன செய்யவேண்டும்? 64
21. ஆவியானவர் எப்போது துக்கப்படுகிறார்? 68
22. அந்நிய பாஷையில் பேசுதல் 70
23. சபை அன்றும் இன்றும்! 74





24. அப்போஸ்தலர் நடபடிகளில் வல்லமை 78
25. நிறைவு! நிறைவு! நிறைவு! 79
26. சபையில் எவ்விதம் நடந்துகொள்ளவேண்டும்? 82
27. சபை மேய்ப்பருக்குத் தற்பரிசோதனை 84
28. ஊழியருக்குப் பத்துக் கட்டளைகள் 86
29. திருவசனத்தை எப்படிப் பிரசங்கிக்கவேண்டும்? 88
30. திருவசனம் நம்மைத் திருத்தட்டும்! 90
31. இயேசு விடும் மிஷனரிச் சவால்! 95
32. உங்களுக்கு அக்கறையில்லையா? 97
33. ஆத்தும ஆதாயகன் 99
34. மிஷனரி பாக்கிய வசனங்கள் 103
35. நான் ஒரு மிஷனரிக் கிறிஸ்தவன்தானா? 104
36. மிஷனரிகளுக்குத் தடுப்பு ஜெபம் 106
37. கிறிஸ்துமஸ் தியானங்கள் 108
38. அனுதினக் கிறிஸ்தவன் 112
39. மலைப் பிரசங்க உடன்படிக்கை 114
40. காலமோ செல்லுதே! 118

0

# ஐந்தப்பம் இருமீன்

''கொடுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியிலே போடுவார்கள்'' (லூக் 6:38).

''எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்'' (நீதி 11:25).

எந்த அளவிற்கு நாம் நிறருக்குப் பகிர்ந்து கொடுக்கிறோமோ அதற்கும் அதிகமாகவே நமக்குக் கொடுக்கப்படும் என்பதே இவ்விரு வசனங்களின் கருத்தாகும். எனது 35 ஆண்டு திருவசன ஊஷியத்தில் இவ்வுண்மையைத் தவறாது எழுத்தின்படியாய் நான் அனுபவித்து வருகிறேன். இத்தனை ஆண்டுகளில் நான் எத்தனையோ பிரசங்கங் களைச் செய்திருந்தும் நான் பிரசங்கித்தவைகளைவிட இன்னும் பிரசங்கியாது நான் வைத்திருக்கும் குறிப்புகளே ஏராளம். அவற்றில் சிலவற்றை ஆசீர்வாத இளைஞர் இயக்கம் 1972 முதல் வெளியிட்டு வரும் *''ஆசீர்வாதம்''* (Blessing) எனும் பத்திரிகையில் பக்கங்கள் மீந்திருக்கும்போது அவ்வப்போது இணைத்தேன். அவற்றின் ஒரு தொகுப்பே இச்சிறுநூலாகும்.

வேதத்தை ஆராயவும் அதைப் பிறருக்குப் போஷிக்கவும் விரும்பும் எவருக்கும் இந்நூலில் சத்தான உணவுண்டு. இங்குள்ள 40 அத்தி யாயங்களை 400 பிரசங்கங்களாய்ப் பெருக்கவும் முடியும். எனவே தான் இத்தொகுப்பிற்கு ''ஐந்தப்பம் இருமீன்'' எனப் பெயரிட்டுள் ளேன்.

உண்டு மகிழுங்கள் !

ஒன்றுமில்லாதவர்களுக்குப் பங்குகளை அனுப்புங்கள்!



1

# எனக்கெல்லாம் அவரே !

வேதத்தில் ஆங்காங்கே காணப்படும் யேகோவாவின் காரணப் பெயர்களின் ஆசீர்வாதங்கள் யாவும் ஒரே ஓர் அத்தியாயத்தில் அடுத்தடுத்து வருகின்றன. அதுதான் எவரும் விரும்பும் 23ஆம் சங்கீதம்.

*1.* ***யேகோவா-ரோகி*** */ Jehova-Rohi*
*மேய்க்கிறவராகிய கர்த்தர்* (சங் 23:1)

''கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்'' (வச 1)

*2.* ***யேகோவா-யீரே*** */ Jehova-Jireh*
*பார்த்துப் பராமரிக்கிறவராகிய கர்த்தர்* (ஆதி 22:14)

''நான் தாழ்ச்சியடையேன்'' (வச 1)
''அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து'' (வச 2)
''என் பாத்திரம் நிரம்பி வழிகிறது'' (வச 5)
''என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்'' (வச 6)

*3.* ***யேகோவா-ஷாலோம்*** */ Jehova-Shalom*
*சமாதான காரணராகிய கர்த்தர்* (நியா 6:23,24)

''அமர்ந்த தண்ணீர்களண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார்'' (வச 2)

*4.* ***யேகோவா-ரப்பா*** */ Jehova-Rapha*
*குணமாக்குகிறவராகிய கர்த்தர்* (யாத் 15:26)

''அவர் என் ஆத்துமாவைத் தேற்றி''
(அதாவது, எனக்குப் புத்துயிர் அஹீத்து) (வச 3)
''என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர்'' (வச 5)

5. ***யேகோவா-சிட்கெனு*** / *Jehova-Tsidkenu*
*நீதியாயிருக்கிற (நீதிமானாக்குகிற) கர்த்தர்* (எரே 23:5,6)

''தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை
நீதியின் பாதைகளில் நடத்துகிறார்'' (வச 3)

6. ***யேகோவா-மேக்காடேஷெம்*** / *Jehova-Mekaddeshem*
*பரிசுத்தமாக்குகிறவராகிய கர்த்தர்* (லேவி 20:8)

''என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்'' (வச 3)

7. ***யேகோவா-மக்கே*** / *Jehova-Makkeh*
*அடிக்கிறவராகிய கர்த்தர்* (எசேக் 7:9)

''மரண இருளின் பள்ளத்தாக்கு'' (வச 4)

8. ***யேகோவா-நிசி*** / *Jehova-Nissi*
*வெற்றி தருகிறவராகிய (வெற்றிக்கொடியான) கர்த்தர்*
(யாத் 17:14-16)

''என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை
ஆயத்தப்படுத்தி'' (வச 5)
''(என்னைப் பாதுகாக்கும் ) உமது கோலும்
(எதிரியை விரட்டும்) உமது தடியும் என்னைத் தேற்றும்''
(வச 4)

9. ***யேகோவா-ஷம்மா*** / *Jehova-Shammah*
*பிரசன்னம் அருளுகிறவராகிய கர்த்தர்* (எசேக் 48:10,35)

''தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்'' (வச 4)
''நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய்
நிலைத்திருப்பேன்'' (வச 6)

இவ்வசனங்களைத் திரும்பத் திரும்ப வாசித்து
ஆடுங்கள்...
பாடுங்கள்...
மகிழ்கொண்டாடுங்கள்!



# 2
# அவர் செய்த சகல உபகாரங்களைஜம் மறவாதே!

''என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; என் முழு உள்ளமே, அவரு டைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி. என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி, உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி, நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்; கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வாலவயது போலாகிறது'' (சங் 103:1-5).

### *1. அவர் உன்னை மன்னிக்கிறார்!*

''நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்'' (1 யோ 1:9)

''உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப் போல் வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப் போலாகும்'' (ஏசா 1:18).

''நாங்கள் அவருடைய சத்தத்துக்குச் செவி கொடாமற்போனோம், ஆனாலும் எங்கள் தேவனாகிய ஆண்டவரிடத்தில் இரக்கங்களும் மன்னிப்புகளும் உண்டு'' (தானி 9:9,10)

''அவர் நம்முடைய பாவங்களுக்குத் தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார். மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார்'' (சங் 103:10,12)

''நம்முடைய பாவங்களையெல்லாம் சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டுவிடுவார்'' (மீகா 7:19)

''நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் நினையாமலிருப்பேன்'' (எபி 8:12)

''மகனே, திடன்கொள், உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப் பட்டன'' (மத் 9:2)

**2. அவர் உன்னைக் குணமாக்குகிறார்!**

''நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்'' (யாத் 15:26)

''அவர்தாமே நம்முடைய பலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார்'' (மத் 8:17).

''அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்'' (ஏசா 53:5)

''பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லா வற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்'' (3 யோ 2)

''ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளை களுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத் திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர் களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? (மத் 7:11)

''மனிதரால் இது கூடாததுதான், தேவனால் இது கூடாததல்ல; தேவனாலே எல்லாம் கூடும்'' (மாற் 10:27)

''நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்'' (மாற் 9:23)

''எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட. இதோ, நீ சுகமானாய்'' (யோ 5:8,14)

**3. அவர் உன்னை மீட்டுக்கொள்ளுகிறார்!**

''பயங்கரமான குழியிலும் உளையான சேற்றிலுமிருந்து என்னைத் தூக்கியெடுத்து, என் கால்களைக் கன்மலையின் மேல் நிறுத்தி'' (சங் 40:2)

''அழிவுள்ள பொருட்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்கள்'' (1 பேது 1:18,19)



''உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது'' (கொலோ 3:3)

''நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை. ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை. அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார்; அவைகளை என் பிதா வின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது'' (யோ 10:28,29)

''என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும் நான் அறிந்திருக்கிறேன்'' (யோபு 19:25)

''வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நி தானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவர்'' (யூதா 24)

**4. அவர் உன்னை முடிசூட்டுகிறார்!**

''மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர். உம்மு டைய கரத்தின் செயல்களின்மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து, சக லத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்'' (சங் 8:5,6)

''சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர் கள்; பூலோகமெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள்'' (யாத் 19:5,6)

''அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்; அவர்களைப் பிரபுக்களோடே உட் காரவும், மகிமையுள்ள சிங்காசனத்தைச் சுதந்தரிக்கவும் பண்ணுகிறார்'' (1 சாமு 2:8)

''நம்மிடத்தில் அன்புகூர்ந்து ... நம்மை ராஜாக்களும் ஆசாரியர் களுமாக்கின அவருக்கு மகிமையும் ... உண்டாயிருப்பதாக'' (வெளி 1:6)

''நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்'' (எபே 1:3)

### 5. அவர் உன்னைத் திருப்தியாக்குகிறார்!

''உன் வாயை விரிவாய்த் திற, நான் அதை நிரப்புவேன்'' (சங் 81:10)

''நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரி பூரணப்படவும் வந்தேன்'' (யோ 10:10)

''தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக் காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லா வற்றையும் நமக்கு அருளாதிருப்பது எப்படி?'' (ரோ 8:32)

''கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன் ... என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப் படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது. என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்'' (சங் 23:1,5,6)



# 3
# எண்ணிப்பார் நீ பெற்ற பாக்கியங்கள்!

✝ கிறிஸ்து உயிர்த்தெழுந்திராவிட்டால்,
நாம் இன்னும் நமது பாவங்களிலேயே இருந்திருப்போம்!
(1 கொரி 15:17)

✝ தேவன் நம்மைத் தெரிந்தெடுத்துத் தம்மிடம் இழுத்திராவிட்டால்,
நாம் ஒருபோதும் அவரது பிள்ளைகளாகியிருக்கமாட்டோம்!
(யோ 6:44; 15:16; ரோ 8:28-30)

✝ யாரோ ஒருவர் நமக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்திராவிட்டால்,
நாம் ஒருபோதும் கிறிஸ்துவை விசுவாசித்திருக்கமாட்டோம்!
(ரோ 10:13,14; அப் 8:30,31)

✝ கர்த்தர் நம்மோடு பொறுமையாய் இருந்திராவிட்டால்,
நாம் ஒருபோதும் மன்னிக்கப்பட்டிருக்கமாட்டோம்!
(மத் 18:26,27; ரோ 2:4)

✝ தேவன் கிருபை இரக்கம் உள்ளவராய் இருந்திராவிட்டால்,
நாம் நிர்மூலமாகியிருப்போம்!
(புல 3:22-24)

✝ கிறிஸ்து பரலோகத்திற்கு ஏறியிராவிட்டால்,
நாம் ஒருபோதும் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கமாட்டோம்!
(யோ 16:7)

✝ தேவ வசனம் நமது மகிழ்ச்சியாயிராவிட்டால்,
நாம் நமது துக்கத்தில் அமிழ்ந்துபோயிருப்போம்!
(சங் 119:92)

✝ தேவன் சபைச் சரித்திரத்தில் ஒரு கூட்டத்தை மீதியாக வைத்திராவிட்டால்,
நாம் சோதாம் கொமோராவைப் போலாகியிருப்போம்!
(ஏசா 1:9)

✞ கர்த்தர் நமது பக்கத்தில் இருந்திராவிட்டால்,
நாம் நமது எதிரிகளால் விழுங்கப்பட்டிருப்போம்!
(சங் 124:1-5)

✞ தேவன் நம்மைச் சுற்றி வேலியடைத்து ஒரு வரம்பை வைத்திராவிட்டால்,
நாம் பிசாசினால் அழிக்கப்பட்டிருப்போம்!
(யோபு 1:10; 38:11; 1 கொரி 10:13)

✞ பரிசுத்த ஆவியானவர் நம்மைச் சபையில் நாட்டியிராவிட்டால்,
நாம் விசுவாசத்திலும் அன்பிலும் வளர்ந்துகொண்டிருக்கமாட்டோம்!
(சங் 92:13,14; எபே 3:17-19; எபி 3:12,13; 10:24,25)

✞ கிறிஸ்து நமக்கு ஊழியத் தலைவர்களைத் தந்திராவிட்டால்,
நாம் திசைமாறிச் சென்றிருப்போம்!
(எபே 4:11-13; அப் 20:28)

✞ ....................................................................................................

✞ ....................................................................................................

தேவனது ஆசீர்வாதங்களையும், அவர் நமக்காகச் செயல்பட்டிரா விட்டால் நாம் எவற்றையெல்லாம் இழந்திருப்போமென்பதையும் முழுவதும் வரிசைப்படுத்த வாழ்நாளெல்லாம் ஆராய்ந்து பார்த்தாலும் முடியாது. ஆனாலும் ''அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதபடி'' இப்பயிற்சியை மேற்கொள்ளுங்கள்.

*எண்ணிப்பார் நீ பெற்ற பாக்கியங்கள்;*
*கர்த்தர் செய்த நன்மைகள் யாவும்;*
*ஆசீர்வாதம் எண்ணு ஒவ்வொன்றாய்;*
*கர்த்தர் செய்த யாவும் வியப்பைத் தரும்!*

— இப்பல்லவியைக் கொண்ட பாடலைப் பாடிப்
பரமனைக் கொண்டாடுங்கள்,
பரவசம் கொள்ளுங்கள் !



4

# உயிர்த்தெழுதலின் ஆசீர்வாதங்கள்

சிலுவை வார்த்தைகள் ஏழில் அநேகப் பிரசங்கங்கள் கேட்டிருந் தாலும் இயேசுவானவர் உயிர்த்தெழுந்தபின் மொழிந்த வார்த்தைகளில் நாம் அதிகம் கேட்டதில்லை. சிலுவையின்றி உயிர்த்தெழுதலில்லை. ஆனால் ''நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமா னால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே'' (ரோ 5:10). உயிர்த்தெழுந்த பின் கிறிஸ்துவானவர் திருவாய் மலர்ந்த ஒவ்வொரு வார்த்தையும் கிறிஸ்துவோடு நமது புது வாழ்வின் ஓர் ஆசீர்வாதமான அம்சத்தை அடக்கியுள்ளது.

### 1. பரலோக வாழ்வு

யோவான் 20:17, ''நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினி டத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப் போகிறேன்.''

### 2. வசன வாழ்வு

லூக்கா 24:27, ''மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேத வாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக்குறித்துச் சொல்லிய வைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்.''

### 3. விசுவாச வாழ்வு

யோவான் 20:29, ''அதற்கு இயேசு: தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய்; காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்''

### 4. நேச வாழ்வு

யோவான் 21:15-17, ''யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?... என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக ... யோனாவின் குமாரனாகிய

சீமோனே, நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா? ... என் ஆடுகளை மேய்ப்பாயாக ... யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னை நேசிக்கிறாயா? ... என் ஆடுகளை மேய்ப்பாயாக.''

### 5. வல்லமை வாழ்வு

யோவான் 20:22; அப் 1:8, ''பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள் ... பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பலமடைவீர்கள்.''

### 6. சாட்சி வாழ்வு

மாற்கு 16:15; அப் 1:8, ''நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் ... பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.''

### 7. ஐக்கிய வாழ்வு

மத்தேயு 28:20, ''இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்.''

உயிர்த்தெழுந்த ஆண்டவரின் இம்மகிமையான வார்த்தைகளை மனனம் செய்து தியானிப்பது நமது வெற்றியையும் சாதக வாழ்வையும் அறிக்கையிட ஏதுவாயிருக்கும். ''இந்த வார்த்தை உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது என்றும் சொல்லுகிறது; இந்த வார்த்தை நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாச வார்த்தையே. என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்'' (ரோ 10:8,9).

> **''கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா. கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள்'' (1 கொரி 15:14,17)**



# 5
# உடலுறுப்புகள் அர்ப்பணம்

### உன் இருதயம்

- ❐ நீ உன் இருதயத்தை இயேசுவுக்குத் திறந்தளித்தாயா? (வெளி 3:20)
- ❐ அறிக்கைசெய்யாத, மறைவான பாவம் இன்னும் உன் இருதயத்தில் உண்டா? (நீதி 28:13)
- ❐ மாற்கு 7:21,22இல் கூறப்பட்டவைகளிலிருந்து உன் இருதயம் சுத்திகரிக்கப்பட்டுள்ளதா?
- ❐ உன் முழு இருதயத்தோடும் தேவனிடத்தில் அன்பு கூருகிறாயா? (மத் 22:37)
- ❐ இதயப்பூர்வமாக எல்லாருடைய தப்பிதங்களையும் மன்னித்துவிட்டாயா? (மத் 6:15)
- ❐ நீ மேட்டிமையுள்ளவனா? (நீதி 16:5)
- ❐ உன்னிடம் பொறாமை உண்டா? (நீதி 14:30)
- ❐ நீ தவறிழைத்த ஒவ்வொருவரிடமும் சென்று உன்னைத் தாழ்த்தி ஒப்புரவாகிவிட்டாயா? (மத் 5:23-24)

### உன் உடல்

- ❐ நீ உன் உடலைத் தேவனுக்குப் பிரியமான உயிருள்ள பலியாக ஒப்புக்கொடுத்திருக்கிறாயா? (ரோ 12:1)
- ❐ பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாகிய உன் உடலை அருவருப்பான பழக்கங்களினால் கெடுத்துக்கொண்டிருக்கிறாயா? (1 கொரி 6:18-19)
- ❐ நீ பெருந்தீனிக்காரனா? சோம்பேறியா? (நீதி 21:25)
- ❐ உன் உடையலங்காரம் தேவனைப் பிரியப்படுத்தி, மற்றவர்களுக்கு மாதிரியாக இருக்கிறதா? (ரோ 12:2)

### உன் கண்கள்

- ❐ தேவனுக்கு முன்பாக நீ உன் கண்களோடு செய்த உடன்படிக்கையைக் காத்து வருகிறாயா? (யோபு 31:1)

- ❒ இச்சையான பார்வையிலிருந்து உன் கண்கள் விலகியிருக்கின்றனவா? (மத் 5:28; 6:22,23)
- ❒ அவைகள் நேராக நோக்குகின்றனவா? (நீதி 4:25)
- ❒ துன்பப்படுகிறவர்களையும், வருத்தப்படுகிற மக்களையும் உன் கண்கள் இரக்கத்தோடு பார்க்கின்றனவா? (மத் 25:35-40)

**உன் வாய்**

- ❒ அடங்காத உன் நாவை தேவனுக்கு அர்ப்பணித்துள்ளாயா? (யாக் 1:26; 3:8)
- ❒ அவருக்கு உன் வாயின் வார்த்தைகள் பிரியமாயிருக்கின்றனவா? (சங் 19:14)
- ❒ நீ பொய் சொல்லுகிறாயா? மிகைப்படுத்திப் பேசுகிறாயா? (மத் 5:37)
- ❒ பிறரைப் பழித்துரைத்து நியாயந்தீர்க்கிறாயா? (லூக் 6:37)
- ❒ உன்னை நீயே புகழ்ந்து பேசுகிறாயா? (நீதி 27:2)
- ❒ வீண் பேச்சு உண்டா? (மத் 12:36)
- ❒ புறங்கூறுகிறாயா? (சங் 15:3)
- ❒ வெளிப்படையாக நீ கிறிஸ்துவை அறிக்கை செய்கிறாயா? (மத் 10:32)
- ❒ உன் வார்த்தைகள் அன்பினாலும் கிருபையினாலும் நிறைந்துள்ளனவா? (கொலோ 4:6)

**உன் காதுகள்**

- ❒ மற்றவர்களைப்பற்றிய தீதான காரியங்களைக் கேட்கும்படி உன் காதுகளைத் திறந்து வைத்துள்ளாயா? (சங் 15:3)
- ❒ ஆபாசமான பாடல்களையும், துர்இச்சையைக் கிளறும் கதைகளையும் நீ கேட்கிறாயா? (1 தெச 5:22)
- ❒ திக்கற்றவர்களின் சத்தத்துக்கு உன் செவிகளை அடைத்துக் கொள்கிறாயா? (யாக் 1:27)

**உன் கைகள்**

- ❒ உன் கைகளில் சுத்தமும், நேர்மையும் உண்டா? (சங் 24:4)
- ❒ கைக்கூலி வாங்குவதும், கொடுத்தலும் உண்டா? (சங் 15:5)



- ❒ நீ நிறரைக் கொள்ளைமீட்டிருக்கிறாயா? (எசேக் 33:15)
- ❒ பண ஆசையினால் நீ உன்னை உருவக் குத்திக்கொள்ளுகிறாயா? (1 தீமோ 6:10)
- ❒ இறையரசு பரவ உன் பணத்தைத் தேவனுக்குத் தாராளமாய்க் கொடுக்கிறாயா? (2 கொரி 9:7)
- ❒ உன்னைச் சபிக்கிறவர்களையும் ஆசீர்வதிக்கும்படி உன் கரங்கள் இயேசுவின் கரங்களின் தொடர்ச்சியாயிருக்கின்றனவா? (மத் 5:44)

**உன் முழங்கால்கள்**

- ❒ உன் ஜெப வாழ்க்கை ஒழுங்காய் இருக்கிறதா? (தானி 6:10)
- ❒ காலையில் அமைமணி நேரத் தியானம் உண்டா? (நீதி 8:17)
- ❒ திறந்த வேதத்தோடு ஒவ்வொரு நாளும் எவ்வளவு நேரத்தை நீ முழங்காலில் செலவிடுகிறாய்? (மத் 26:40; சங் 119:97)
- ❒ ஆத்துமாக்களுக்காகவும், எழுப்புதலுக்காகவும் நீ கண்ணீரோடு ஜெபிக்கிறாயா? (புலம் 2:11, 19)
- ❒ உன்னை நிந்திக்கிறவர்களுக்காகவும், துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் நீ ஜெபிக்கிறாயா? (மத் 5:44)
- ❒ தேவனுடைய பிள்ளைகளோடுள்ள ஐக்கியத்தை நீ ஜீட்டு விட்டதுண்டா? (எபி 10:24,25)

**உன் கால்கள்**

- ❒ நீ தேவனுடைய சித்தத்தைப் புறக்கணித்துவிட்டு துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடக்கிறாயா? (சங் 1:1)
- ❒ ஆவிக்குரிய ஆரோக்கியத்துக்குச் சாதகமாயில்லாத இடங்களுக்கு நீ போகிறாயா? (சங் 1:1, நீதி 7:25-27)
- ❒ இயேசுவின் நற்செய்ணிப்பணிப் பேராணைக்கு நீ கீழ்ப்படிகிறாயா? (மாற் 16:15)
- ❒ பெரும்பாதைகளிலும், தெருக்களிலும், ஒதுக்கப்பட்ட மக்களிடம் செல்லுகிறாயா? (லூக் 14:23)
- ❒ சுவிசேஷம் அறிவிக்கப்படாத கிராமங்களுக்குப் போகிறாயா? கவனிப்பரற்ற ஆதிவாசிகளிடம் போகிறாயா? (ஏசா 52:7)
- ❒ பாவிகள் இருக்குமிடத்திற்கே செல்ல உன் கால்கள் எப்பொழுதும் சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் காலணியை அணிந்துள்ளனவா? (எபே 6:15)

# 6
# ஜெப நினைவூட்டிகள்

''இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்'' என்ற கட்டளையை வாசிக்கும்போதெல்லாம் விசுவாசிகளுக்குக் குழப்பம். அது சாத்தியமா? வேலையையெல்லாம் விட்டுவிட்டு ஜெப அறைக்குள்ளேயே கிடக்க முடியுமா? அப்படியல்ல. துதி விண்ணப்ப ஆவியினால் அவரது பிரசன்னத்தை எப்பொழுதும் உணர்ந்து அவரோடு எப்பொழுதும் துடிப்புள்ள தொடர்பு கொண்டிருக்கவேண்டுமென்பதே தேவன் தமது மக்களிடம் எதிர்பார்ப்பது. அடிக்கடி கண்ணில் படும் மிருகங்கள், பறவைகள், பூச்சிகள் நமக்குணர்த்தும் செய்திகளை நினைவுகூர்வது அதற்கு ஒரு வழியாகும். கீழ்க்கண்ட ஒவ்வொன்றைக் காணும்போதெல்லாம் அதைத் தழுவிய ஜெபத்தை ஏறெடுங்கள்.

### ஆடு

''பிதாவே, என்னுடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க உமது திருக்குமாரன் **இயேசுவையே** ஆட்டுக்குட்டியாக தியாகம் செய்த உமக்கு நன்றி. இந்த அன்பிற்கு நான் என்ன கைமாறு செய்வேன்? அவருடைய நாமத்தினால் வரும் பாவ மன்னிப்பை உலகெங்கும் எடுத்துக்கூற என்னை அர்ப்பதிக்கிறேன்.''

### புறா

''தேவனே, **பரிசுத்த ஆவியானவராகிய** உமது ஈவுக்காக நன்றி. அவரது மெல்லிய சத்தத்திற்கு உடனடியாய்க் கீழ்ப்படியவும், அவரைத் துக்கப்படுத்தாமலும், அணைத்துப்போடாமலும் இருக்க அருள் புரியும்.''

### சேவல்

''ஆண்டவரே, எச்சூழ்நிலையிலும் உமக்குத் திடசாட்சியாய் நிற்க என்னைப் பலப்படுத்தும். சொல்லிலோ செயலிலோ **பேதுரு** போல நான் உம்மை ஒருபோதும் மறுதலியாமலிருக்கட்டும். என் கடந்தகாலத் தோல்விகளுக்காய்த் துக்கிக்கிறேன்.''



### காகம்

''ஆண்டவரே, **எலியாவைப்** பராமரித்ததுபோல இந்த இக்கட்டான நாட்களிலும் எனக்கு அனுதின அப்பம் அருளுகிறீரே, உமக்கு நன்றி. எதற்கும் முறுமுறுக்காமலும் நாளையைக் குறித்து வீண் கவலை கொள்ளாதிருக்கவும் எனக்கு உதவும்.''

### பன்றி

''அப்பா, உமது செல்வத்தை அனுபவித்து உமது உறவில் திருப்தியாயிருக்க எனக்குக் கற்பியும். உலக உல்லாசத்தை நாடிச் சென்றால் **கெட்ட குமாரனைப்போல** பன்றிகளோடுதான் இருக்க நேரிடும் என நினைப்பூட்டும்.''

### குருவி

''வல்லவரே, குருவியைப் போன்ற அற்பமான என்மீதும் நீர் காட்டும் அக்கறைக்காகவும் பாதுகாவலுக்காகவும் உம்மைத் துதிக்கிறேன். உமது வீட்டில் எப்பொழுதும் உம்மைத் துணித்துக்கொண்டிருக்க என்னை ஊக்குவியும்.''

### கழுதை

''பெரும்பாதகங்கள் செய்யாமல் என்னைக் காப்பதற்காய் நன்றி, ஆண்டவரே. என் வழிகள் உம்மை வேதனைப்படுத்தும்போது **பாலாமிற்குக்** கழுதை பேசினதுபோல யாரைக் கொண்டாகிலும் என்னைக் கடிந்துகொள்ளும்.''

### நாய்

''இறைவா, உலகத் தீங்குகளினின்று என்னைக் காத்தமைக்கு நன்றி. நாயைப் போல நான் கக்கினதைத் தின்னத் திரும்பாமலிருக்கும்படி என்னைக் காத்துக்கொள்ளும்.''

### பாம்பு

''நித்தியரே, பரிசுத்த வேதாகமத்திற்காய் நன்றி. உமது வார்த்தையை **ஏவாள்** சந்தேகித்தது போல நானும் சந்தேகிக்க சாத்தான் என்னைச் சோதிக்கும்போது மறுப்புக்கூற உரமளியும்.''

## புழு

''என் தேவனே, நான் **தாவீதைப்போல** மக்களது இகழ்ச்சிக்கும் பரியாசத்திற்குமான புழுவாயிருக்கிறேன். எதிர்ப்பின்றி அவமானங்களை ஏற்றுக்கொள்ளக் கிருபை தாரும். நாவைக் காத்துக்கொள்ள எனக்குக் கற்பியும்.''

## எறும்பு

''ஆண்டவரே, என் சோம்பேறித்தனத்தையும் மிஞ்சிய தூக்கத்தையும் மன்னியும். எத்தனைப் பொன்னான மணிகளை வீணாக்கியிருக்கிறேன்! நீர் எனக்கு என்ன வேலை கொடுத்தாலும் சுறுசுறுப்பாய் உற்சாகத்துடன் எறும்பைப்போல செய்து முடிக்க உதவிசெய்யும். கூட்டு முயற்சியின் சக்தியை உணரச் செய்யும்.''

## மீன்

''தேவா, உலக ஆசிகளை என்மீது இறைக்கிறீர், நன்றி. சுயநலமின்றி மெலிந்தோரும் நலிந்தோரும் பயன்பெற அவற்றை நான் பயன்படுத்தட்டும். பெயர் சொல்லப்படாத **அச்சிறுவன்** தன் அப்பத்தையும் மீன்களையும் இயேசுவிடம் கொடுத்ததால் எத்தனை ஆயிரங்கள் போஷிக்கப்பட்டனர்!''

## குதிரை

''சேனைகளின் கர்த்தரே, தேவையற்ற பயங்களை என் வாழ்விலிருந்து நீக்கிப்போட்டு பிசாசைத் தைரியமாய் எதிர்க்க என்னைத் தூண்டிவிடும். இராஜாதி இராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தாவாகவும் கோலாகலமாய் **இயேசு** வெள்ளைக் குதிரையில் வருவதைக் காண என் கண்கள் காத்திருக்கின்றன.''

## மாடு

''அறுவடையின் ஆண்டவரே, உமது ஊழியரைத் தாங்க தாராள மனதைத் தாரும். போரடிக்கிற மாட்டை வாய் கட்டாயாக என்ற உமது வார்த்தையை நினைவு கூருகிறேன்.''



## கழுகு

''ஐயா, உமது வேலையைச் செய்ய என் சுயசக்தியையும் சாமர்த்தியத்தையும் நம்பியிராதிருப்பேனாக. புதுப்பிக்கப்பட்ட பலத்துடனும் தரிசனத்துடனும் கழுகைப் போல செட்டையடித்து எழும்பும்படி உமது பிரசன்னத்தில் காத்திருக்க என்னைத் துரத்திவிடும்.''

## சிலந்தி

''பரலோகப் பிதாவே, இவ்வுலக வீடு, சொத்து, ஆஸ்திகளில் எனக்கிருக்கும் நிணைப்பிலிருந்து என்னை அறுத்துவிடும். உம்மால் கட்டப்பட்ட அழியாப் பட்டணத்திற்குக் காத்திருந்த **ஆபிரகாமை** நான் பின்பற்றட்டும்.''

# 7
# ஜெபிப்பது எப்படி?

1. பிதாவை நோக்கி ஜெபிக்க வேண்டும் (மத் 6:9; எபே 3:15)
2. இயேசுவின் நாமத்தில் ஜெபிக்க வேண்டும் (யோ 16:23; எபி 7:25)
3. பரிசுத்த ஆவிக்குள் ஜெபிக்க வேண்டும் (யூதா 20; ரோ 8:26,27)
4. விசுவாசத்துடன் ஜெபிக்க வேண்டும் (எபி 11:6; யாக் 1:6,7)
5. தைரியமாய் ஜெபிக்க வேண்டும் (ரோ 8:15; எபி 4:15,16)
6. வாக்குகளை உரிமைபாராட்டி ஜெபிக்க வேண்டும் (1 இரா 8:29; 1 நாளா 7:23)
7. தாழ்மையுடன் ஜெபிக்க வேண்டும் (2 நாளா 34:27; ஏசா 57:15)
8. அறிக்கையிட்டு மனந்திரும்பி ஜெபிக்க வேண்டும் (2 நாளா 7:14; யாக் 5:16)
9. மன்னிப்புச் சிந்தையுடன் ஜெபிக்க வேண்டும் (மத் 6:12; மாற் 11:25)
10. தேவ வசனத்தின்படி ஜெபிக்க வேண்டும் (நீதி 28:9; தானி 9:2,3)
11. தேவ சித்தத்தின்படி ஜெபிக்கவேண்டும் (1 யோ 5:14; மாற் 1:40,41)
12. தன்னலமின்றி ஜெபிக்க வேண்டும் (யோபு 42:10; யாக் 4:3)
13. குறிப்பாய் ஜெபிக்க வேண்டும் (மத் 20:30-34; எபே 6:19)
14. உபவாசத்துடன் ஜெபிக்க வேண்டும் (நெகே 1:4; மத் 17:21)
15. கண்ணீருடன் ஜெபிக்க வேண்டும் (புல 2:18,19; எபி 5:7)
16. பாரத்துடன் ஜெபிக்க வேண்டும் (மத் 9:36-38; ரோ 9:1-3; 10:1)
17. ஊக்கமாய் ஜெபிக்க வேண்டும் (கொலோ 4:12; யாக் 5:16-18)
18. தனித்து ஜெபிக்க வேண்டும் (லூக் 9:18; எபே 1:16)
19. இரகசியமாய் ஜெபிக்க வேண்டும் (மத் 6:6; லூக் 6:12)
20. கூடி ஜெபிக்க வேண்டும் (தானி 2:17,18; அப் 16:13)



21. ஒருமனமாய் ஜெபிக்க வேண்டும் (மத் 18:19; அப் 1:14)
22. அமைதியாய் ஜெபிக்க வேண்டும் (1 சாமு 1:13; நெகே 2:4)
23. சத்தமாய் ஜெபிக்க வேண்டும் (அப் 4:24; எபி 5:7)
24. இடைவிடாது ஜெபிக்க வேண்டும் (1 தெச 3:10; 5:17)
25. குறித்த நேரங்களில் ஜெபிக்க வேண்டும் (தானி 6:10; அப் 3:1)
26. விழிப்புடன் ஜெபிக்க வேண்டும் (மத் 26:41; எபே 6:18)
27. நவநாவுகளில் ஜெபிக்க வேண்டும் (1 கொரி 14:2,14,15,18; அப் 10:45)
28. மகிழ்ச்சியுடன் ஜெபிக்க வேண்டும் (சங் 100:2; யோ 16:24)
29. துதித்து, நன்றிசெலுத்தி ஜெபிக்க வேண்டும் (பிலி 4:6; கொலோ 4:2)
30. ஒப்புக்கொடுத்து ஜெபிக்க வேண்டும் (லூக் 22:42; 2 கொரி 12:8,9)

உங்கள் வேதத்தில் இவ்வசனக் குறிப்புகளைப் புரட்டிப் பார்த்து கருத்தாய்த் தியானியுங்கள். இத்தத்துவங்களை உங்கள் ஜெப வாழ்க்கையில் பயிற்சியுங்கள். நிச்சயம் ஒரு புரட்சியைக் காண்பீர்கள். எங்குமுள்ள கிறிஸ்தவரோடு இவற்றைப் பகிர்ந்துகொள்ளுங்கள். ஜெபத்தின் இரகசியத்தைச் சபை கற்றுக்கொள்ளுமானால் அது எல்லாப் பிரச்னைகளுக்கும் முடிவு காணும்.

ஜெபிப்போம், ஜெப எழுப்புதலைக் காண்போம்!

## 8

# ஜெபத்தில் நோக்கம்/சங்கீதம் 51

சங்கீதப் புத்தகம் ஜெபமும் துதியும் நிறைந்த தியானப் புத்தகம். கிறிஸ்தவனொருவன் சங்கீதங்களில் முழங்காலிலும், நீதிமொழிகளில் தன் கால்களிலும் நிற்கிறான். கிரமமாய்ச் சங்கீதங்களைத் தியானித்தல் தேவனோடு நமது தியான உறவை ஆழமாக்குகிறது. எந்தப் பரிசுத்த வானுக்கும் சங்கீதம் 51 விருப்பமான ஒன்று. அறிக்கையிடுதலிலும் ஜெபத்திலுமுள்ள ஐந்து தெய்வீக நோக்கங்களை இங்கே வரையறுக் கிறேன்.

### 1. தேவன் நீதிபரராய் விளங்க (வச 1-4)

பாவ அறிக்கையின் பிரதான நோக்கம்:

அ) குற்றவுணர்விலிருந்தோ ஆக்கினைத் தீர்ப்பிலிருந்தோ மீளுவது அல்ல.

ஆ) பிரச்னை, வல்லமை இழப்பு போன்ற விளைவுகளுக்குத் தப்பவும் அல்ல.

பிரதான நோக்கம் அவரது நாமத்தை மகிமைப்படுத்துவதே! (யோசு 7:19)

என்னுடைய பாவம் தேவனது நாமத்திற்கு விளைவிப்பதென்ன?

வாழ்க்கையில் பாவத்தை வைத்துக்கொண்டு தேவனது அங்கீ காரத்தையும் ஊழியத்தில் அபிஷேகத்தையும் எதிர்பார்ப்பேனானால் அது அபயாயம்.

### 2. தேவன் மனதின் ஆழத்தில் ஞானத்தை எனக்குத் தெரியப் படுத்த (வச 5,6)

பாவத்தில் கருவுருவானதினாலே என் உள்ளான மனிதன் கெட்டிருக் கிறான் (ஆதி 6:5).

தேவனது ஞானத்தைப் பெற்றுக்கொள்ள எனது ''சுபாவமே'' மாற வேண்டும்.

2 பேதுரு 1:4 — கேடு/இச்சை/திவ்விய சுபாவம்



வீணான சிந்தனை — உணர்வில்லாத இருதயம் (ரோ 1:21)

உள்ளான மனிதன் தெய்வீக பயத்தினால் பீடிக்கப்படவேண்டும் (நீதி 1:7).

நாம் விழாமல் காக்கவே ஞானம் (நீதி 2:10-17; யூதா 24,25 ஒப்பிடுக).

உண்மை, நேர்மைக்காய் ஜெநிஜிங்கள்.

வெளிப்படைச் செயல்களைவிட சிந்தையில் பரிசுத்தமே அதிமுக்கியம்.

### 3. நொறுங்கிய எனது எலும்புகள் களிகூர (வச 7-9)

படுகாயம்.

சுத்திகரிப்பு மகிழ்சியை அருளுகிறது (சங் 40:2,3)

சுத்திகரிப்பு உறவைப் புதுப்பிக்கிறது — ''கேட்கும்படி செய்யும்;'' ''உமது முகம்'' (1 யோ 1:7; ஏசா 1:18,19 உடன் ஒப்பிடுக.)

''உறைந்த மழையிலும் வெண்மை'' — தேவன் மன்னித்து மறக்கிறார். முழுமையும் நீதிமானாக்கப்படும் அனுபவம்.

### 4. பாதகருக்கும் பாவிகளுக்கும் அவரது வழிகளை உபதேசிக்க (வச 10-15)

பாவிகளுக்குப் பயனுள்ள சாட்சியாய் மாற ஜெபம்.

அத்தியாவசியத் தேவைகள் —

1. சுத்த இருதயம் — உள்ளான பரிசுத்தம்
2. நிலைவரமான ஆவி — தேவனோடு தடுமாறாத நடை
3. அவரது சமுகத்தில் காத்திருத்தல் — தேவனுக்குச் செவிசாய்த்தல்
4. ஆவியின் ஐக்கியம் — அவரைத் துக்கப்படுத்தாதிருத்தல்
5. இரட்சிப்பின் சந்தோஷம் (வச 12,14) — இரட்சிப்பின் மகிமையில் புத்துணர்வும் உற்சாகமும்
6. ஆவியின் வல்லமை (வச 11,15) — அப் 1:8

பிறருக்கு ஊழியம் செய்யுமுன் இவற்றை ஜெபத்தில் சிந்தியுங்கள்.

### 5. தேவன் பிரியப்பட (வச 16-19)

ஜெபத்தின் பிரதான நோக்கமே தேவனைப் பிரியப்படுத்துவதுதான்.

நீதியின் பலிகள் —

1. நொறுங்குண்டிருத்தல், நருங்குண்டிருத்தல் (நீதி 28:13,14), பயபக்தி.
2. உடலின் உறுப்புகளை அர்ப்பணித்தல் — தகனபலியும் சர்வாங்க தகனபலியும் (ரோ 12:1; எபி 10:5-7)
3. ஆராதனை — காளைகள் (ஓசி 14:2ஆ; எபி 13:15)

### ஜெபமென்பது தேவனை மையமாய்க் கொள்ளுதல்:

| | |
|---|---|
| ''உமது'' கிருபை | (வச 1) |
| ''உமது'' மிகுந்த இரக்கங்கள் | (வச 2) |
| ''தேவரீர்,'' ''நீர்'' ஒருவரே | (வச 4) |
| ''உமது'' முகம் | (வச 9) |
| ''உமது'' சமுகம் | (வச 11) |
| ''உமது'' பரிசுத்த ஆவி | (வச 11) |
| ''உமது'' இரட்சிப்பு | (வச 12) |
| ''உமது'' உற்சாகமான ஆவி | (வச 12) |
| ''உமது'' வழிகள் | (வச 13) |
| ''உமது'' நீதி | (வச 14) |
| ''உமது'' புகழ் | (வச 15) |
| ''உமது'' பிரியம் | (வச 18) |
| ''உமது'' பலிபீடம் | (வச 19) |



# 9
# சமாதானத்தின் தேவன்

### நிபந்தனைகளும் வாக்குத்தத்தமும்

### 1. மன்றாட்டு ஜெபம்

''நீங்கள் தேவனை நோக்கிச் செய்யும் ஜெபங்களில், நான் போராடுவது போல நீங்களும் என்னோடுகூடப் போராடவேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிமித்தமும், ஆவியானவருடைய அன்பினிமித்தமும், உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். சமாதானத்தின் தேவன் உங்களனைவரோடுங்கூட இருப்பாராக'' (ரோ 15:32,33)

### 2. கீழ்ப்படிதலும், நிதானித்தலும்

''உங்கள் கீழ்ப்படிதல் யாவருக்கும் தெரிய வந்திருக்கிறது. ஆகையால் உங்களைக்குறித்துச் சந்தோஷப்படுகிறேன்; ஆனாலும் நீங்கள் நன்மைக்கு ஞானிகளும் தீமைக்குப் பேதைகளுமாயிருக்கவேண்டுமென்று விரும்புகிறேன். சமாதானத்ணின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப்போடுவார்'' (ரோ 16:19,20)

### 3. ஒருமனம்

''சகோதரரே, சந்தோஷமாயிருங்கள், நற்சீர் பொருந்துங்கள், ஆறுதலடையுங்கள்; ஏகசிந்தையாயிருங்கள், சமாதானமாயிருங்கள், அப்பொழுது அன்புக்கும் சமாதானத்துக்கும் காரணராகிய தேவன் உங்களோடேகூட இருப்பார்'' (2 கொரி 13:11)

### 4. சாதகச் சிந்தனை

''சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள். நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ, அவைகளையே செய்யுங்கள்; அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்'' (பிலி 4:8,9)

### 5. பரிசுத்த நடக்கை

''பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள். சமாதானத்தின் தேவன்தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆன்மா உடல் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக'' (1 தெச 5:22,23)

### 6. ஒழுக்கம்

''இந்த நிருபத்தில் சொல்லிய எங்கள் வசனத்துக்கு ஒருவன் கீழ்ப்படியாமற்போனால், அவனைக் குறித்துக்கொண்டு, அவன் வெட்கப்படும்படிக்கு அவனுடனே கலவாதிருங்கள். ஆனாலும் அவனைச் சத்துருவாக எண்ணாமல் சகோதரனாக எண்ணி, அவனுக்குப் புத்தி சொல்லுங்கள். சமாதானத்தின் கர்த்தர்தாமே எப்பொழுதும் சகலவிதத்திலும் உங்களுக்குச் சமாதானத்தைத் தந்தருளுவாராக'' (2 தெச 3:14-16)

### 7. தலைமைக்கு அடங்கியிருத்தல்

''உங்களை நடத்துகிறவர்கள் உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே; ... நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினாலே ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து ஏறி வரப்பண்ணின சமாதானத்தின் தேவன், இயேசு கிறிஸ்துவைக் கொண்டு தமக்கு முன்பாகப் பிரியமானதை உங்களில் நடப்பித்து, நீங்கள் தம்முடைய சித்தத்தின்படிச் செய்ய உங்களைச் சகலவித நற்செயலிலும் சீர்பொருந்தினவர்களாக்குவாராக; அவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென்'' (எபி 13:17,20,21)



# 10
# ஆதிநிலை ஆசீர்வாதங்கள் / எரேமியா 30

நமது கீழ்ப்படியாமையினாலும் பாவத்தினாலும் நாம் நமது ஆதிநிலை இழந்தோம். அன்புள்ள தேவனோ நாம் மனந்திரும்பி திரும்பவும் ஆதிநிலைக்கு வரும்படி நம்மை அழைக்கிறார். நாம் அவரது அழைப்பிற்கு இணங்கினால் எரேமியா 30ஆம் அத்தியாயத்திலுள்ள கீழ்க்கண்ட பத்து இரட்டை ஆசீர்வாதங்கள் நமதாகும்.

### 1. திருப்பிக்கொள்ளுதலும் திரும்பக் கட்டுதலும்

''என் மக்களின் சிறையிருப்பைத் திருப்ரி ... அவர்களைத் திரும்பி வரப்பண்ணுவேன் ... நகரம் தன் மண்மேட்டின்மேல் கட்டப்படும்'' (வச 3,18)

### 2. விடுதலையும் கட்டவிழ்ப்பும்

''அது யாக்கோபுக்கு இக்கட்டுக் காலம்; ஆனாலும் அவன் அதற்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவான் ... அவன் நுகத்தை கழுத்தின்மேல் இராதபடிக்கு உடைப்பேன் ... கட்டுகளை அறுப்பேன்'' (வச 7,8)

### 3. கர்த்தத்துவமும் தலைமைத்துவமும்

''தங்கள் தேவனாகிய கர்த்தரையும், நான் தங்களுக்கு எழுப்பப் போகிற தங்கள் ராஜாவாகிய தானிதையுமே சேவிப்பார்கள் ... அவர்களுடைய பிரபு அவர்களில் ஒருவனாயிருக்க, அவர்களுடைய அதிபதி அவர்கள் நடுவிலிருந்து தோன்றுவார்'' (வச 9,21)

### 4. அமரிக்கையும் பயமின்மையும்

''யாக்கோபு திரும்பிவந்து அமர்ந்து சுகித்திருப்பான்; அவனைத் தத்தளிக்கப்பண்ணுகிறவனில்லை'' (வச 10)

### 5. சிட்சையும் திருத்துதலும்

''உன்னை நான் நிர்மூலமாக்காமலும் முற்றிலும் தண்டியாமல் விடாமலும், மட்டாய்த் தண்டிப்பேன்'' (வச 11)

### 6. ஆற்றுதலும் ஆரோக்கியமும்

''நான் உனக்கு ஆரோக்கியம் வரப்பண்ணி, உன் காயங்களை ஆற்றுவேன்'' (வச 17)

### 7. ஸ்தோத்திரமும் ஆடல்பாடலும்

''அவைகளிலிருந்து ஸ்தோத்திரமும் ஆடல்பாடலின் சத்தமும் புறப்படும்'' (வச 19அ)

### 8. வர்த்திக்கப்பண்ணுதலும் மகிமைப்படுத்துதலும்

''அவர்களை வர்த்திக்கப்பண்ணுவேன், அவர்கள் குறுகிப் போவதில்லை; அவர்களை மகிமைப்படுத்துவேன், அவர்கள் சிறுமைப் படுவதில்லை'' (வச 19ஆ)

### 9. பிள்ளைகளும் சபையும்

''அவர்கள் பிள்ளைகள் முன்போலிருப்பார்கள்; அவர்கள் சபை எனக்கு முன்பாகத் திடப்படும்; அவர்களை ஒடுக்கின யாவரையும் தண்டிப்பேன்'' (வச 20)

### 10. பெருமையும் சிலாக்கியமும்

''நீங்கள் என் மக்களாயிருப்பீர்கள், நான் உங்கள் தேவனாயிருப் பேன்'' (வச 22)

*(இக்குறிப்புகளைக் கொண்டு இயற்றப்பட்ட ''ஆனந்த துதியொலி கேட்கும்'' என்ற ஆசீர்வாதப் பாடலைப் பாடி மகிழுங்கள்.)*



## 11

# ''தேவனே, என்னை ஆராய்ந்து பாரும்!''

**உன் சகோதரனோடு ஒப்புரவாகு! (மத் 5:23,24)**

❐ நான் கோபப்படுகிறேனா?

❐ நான் மற்றவர்களை இழிவாய்ப் பேசுகிறேனா?

❐ நான் யாரையாவது சாதுரியம் அற்றவன் என்று எண்ணி அலட்சியம் பண்ணுகிறேனா?

❐ நான் மற்றவர்களோடு அன்பற்ற வார்த்தைகளால் கடினமாய்ப் பேசுகிறேனா?

❐ மற்றவர்களைத் திட்டுகிறேனா?

❐ நான் என்னையே அறிவாளி என்று எண்ணிப் பிறரை முட்டாள் என்று சொல்வதுண்டா? (மத் 5:22)

❐ நான் யாரையாவது புண்படுத்தியதுண்டா?

❐ நான் புறங்கூறுகிறேனா?

❐ நான் யாரையாவது அவதூறாய்ப் பேசுகிறேனா? (எபே 4:31)

❐ நான் யாவருடைய பொருளையாவது திருடியிருக்கிறேனா?

❐ எனது அலுவலகத்திலிருந்தோ, வேலை செய்யுமிடத்திலிருந்தோ எனக்கு உரிமையில்லாததை எடுத்துக்கொண்டதுண்டா?

*''முதலாவதாக'' நல்மனம் பொருந்து!*
*உன் எதிராளியோடு ''சீக்கிரமாய்'' சமாதானம் பண்ணு!* (மத் 5:24,25)

**எதிராளிகளை நேசி! (மத் 5:44)**

❐ நான் எல்லோரையும் முழுவதுமாய் மன்னித்திருக்கிறேனா? அல்லது யார்மேலாவது உள்ளத்தில் பகையோடிருக்கிறேனா? (மத் 6:14,15)

❐ என்னைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதிக்கிறேனா? அல்லது அவர்களைச் சபிக்கிறேனா?

❐ என்னைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்கிறேனா? அல்லது அவர்களை விலக்கிவிடுகிறேனா?

❒ என்னுடைய கருத்துக்களோடு ஒத்துப்போகாதவர்களோடும் அன்பாயிருக்கிறேனா? (மத் 5:46,47)

❒ என்மேல் தீங்காய்ச் சொல்லுகிறவர்களுக்காய் ஜெபிக்கிறேனா?

❒ என்னைத் துன்புறுத்துகிறவர்களுக்காக எவ்வித மனப்பான்மை யோடு ஜெபிக்கிறேன்? (மத் 5:44)

❒ பழிவாங்கும் எண்ணம் எனக்குண்டா?

❒ நான் தீமையோடு எதிர்த்து நிற்கிறேனா? (மத் 5:38,39)

❒ என்னுடைய எதிரி துன்புறும்போது இரகசியமாய்க் களிகூருகிறேனா?

❒ சண்டைக்காரனான என் அயலகத்தான் தோற்றுப்போகும்போது அவனிடம் எப்படி நடந்துகொள்கிறேன்?

❒ என்னைவிட அதிக மதிப்பெண்கள் பெறும் உடன் மாணவன் மீதோ, வேலை உயர்வு பெற்ற உடன் ஊழியன் மீதோ பொறாமைப் படுகிறேனா? (நீதி 14:30)

**தாழ்மையாயிரு! (மத் 5:3)**

❒ நான் பின்பற்றுகிறவனாக இல்லாமல் எப்போதுமே தலைவனாகவே இருக்க விரும்புகிறேனா?

❒ நான் நிறருக்குத் தொண்டு செய்யாமல் நிறர் எப்போதும் எனக்குத் தொண்டு செய்ய ஜீரும்புகிறேனா?

❒ நான் பிறரால் முக்கியமானவன் என்று கருதப்படவேண்டுமென்று விரும்புகிறேனா? அப்படிக் கருதப்படாவிடில் அதற்காக வருந்து கிறேனா? (லூக் 22:24-27)

❒ மற்றவர்களைவிட உயர்ந்தவனென்று என்னைப்பற்றி எண்ணிக் கொள்கிறேனா? (பிலி 2:3)

❒ நான் இயேசுவைப்போல தாழ்மையுள்ளவனா? அல்லது பெருமைக் காரனா?

❒ நான் பரிசுத்தமாய் வாழ்வது என் சாமர்த்தியம் என எண்ணிக் கொள்ளுகிறேனா?

❒ நான் செய்கிற காரியங்களில் புகழ்ச்சியை நாடுகிறேனா?



❒ நான் பேரும், புகழும் பெற நாடுகிறேனா? (பிலி 2:5-8)

❒ மற்றவர்களை மதிக்கிறேனா? (ரோ 12:10)

❒ என்னுடைய கல்வியைப் பற்றியோ, செல்வாக்கைப் பற்றியோ, தோற்றத்தைப் பற்றியோ, சபைப்பிரிவைப் பற்றியோ, ஜாதியைப் பற்றியோ பெருமையுள்ளவனாய் இருக்கிறோனா?

❒ நான் ஜாதிவெறி உள்ளவனா?

❒ என்னுடைய தகுதிக்குக் குறைவானதென்று எந்த வேலையையாவது செய்ய மறுக்கிறேனா? (யாக் 4:6)

**தீர்ப்புச் செய்யாதே! (மத் 7:1)**

❒ நான் மற்றவர்களைக் குற்றவாளிகளாய்த் தீர்க்கிறேனா?

❒ நான் அன்பற்றவிதமாய்க் குறைகூறுகிறேனா?

❒ நான் குற்றம் பிடிப்பவனாகவே இருக்கிறேனா?

❒ நான் மற்றவர்களைவிட நல்லவன் என்ற எண்ணம் எனக்குண்டா? (மத் 7:1-4)

❒ நான் சொல்லுவதை வாழ்க்கையில் கடைப்பிடிக்கிறேனா?

❒ மற்றவர்கள் எனக்கு எதைச் செய்யவேண்டுமென்று விரும்பு கின்றேனோ? அதை நான் அவர்களுக்குச் செய்கிறேனா?

❒ நான் மாய்மாலக்காரனா? (மத் 7:5,12; ரோ 2:1-5)

❒ விசுவாசத்தில் பலங்குன்றியவரைப் புரிந்துகொண்டு அவர்களைத் தாங்குகிறேனா? (ரோ 14:1, 15:1)

**உண்மை பேசு! (மத் 5:37)**

❒ நான் பொய் பேசுகிறேனா?

❒ காரியத்தை மிகைப்படுத்திக் கூறுகிறேனா?

❒ மற்றவர்களை மகிழ்விப்பதற்காக நடந்ததைத் திரித்துக் கூறு கிறேனா? (மத் 5:37)

❒ எனது ஜெபம் உள்ளத்திலிருந்து வருகிறதா, அல்லது உதட்டளவில் ஜெபிக்கிறேனா?

❐ பிறரை மன்னியாமல் இருந்துகொண்டு கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்லி இவ்விதம் தேவனிடம் பொய் சொல்லுகிறேனா? (மத் 6:12)

❐ ''அல்லேலூயா'' என்றோ ''கர்த்தருக்கு ஸ்தோத்திரம்'' என்றோ சொல்லும்போது, அதன் பொருளை உணருகின்றேனா?

**வாலிப இச்சைகளுக்கு விலகி ஓடு! (2 தீமோ 2:22)**

❐ நான் எதிர்ப்பாலினரைத் துர் இச்சையோடு பார்க்கிறேனா? (மத் 5:28)

❐ நான் பிறனுடைய மனைவியை இச்சிக்கிறேனா? (யாத் 20:17)

❐ என்னிடத்தில் அசுத்தமான பழக்கங்கள் உண்டா?

❐ நான் பாலுணர்வைத் தவறாய்ப் பயன்படுத்துகிறேனா? (1 கொரி 6:9)

❐ நான் துர் இச்சையைத் தூண்டுகிறவற்றைப் பார்க்கிறேனா?

❐ பரிசுத்தத்திற்குச் சாதகமற்ற இடங்களுக்குப் போகிறேனா?

❐ கண்ணைப்போல் அருமையானதாகவும், கால் அல்லது கையைப் போல் அவசியமானதாகவும் தோன்றினாலும் பரிசுத்தமற்ற உறவு களை முறித்துக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறேனா? (மத் 5:29,30)

❐ என்னுடைய ஒழுக்கக்கேடான உடைகளால் பிறரைக் கவர்ச்சிக் கிறேனா?

❐ மறுபாலர் என்னைக் கவனிக்கவேண்டுமென்று விரும்புகிறேனா?

❐ எல்லாக் காவலோடும் என் இருதயத்தைக் காத்துக்கொள்ளு கிறேனா? (நீதி 4:23)

**தேவனுக்கு முதலிடம் கொடு! (மத் 6:33)**

❐ என்னுடைய எல்லாக் காரியங்களிலும் தேவ நீதி நிறைவேற்றப் படுவதையே பிரதானமாய் நாடுகிறேனா? (மத் 3:15)

❐ தேவனை எல்லாவற்றிலும் பிரியப்படுத்த விரும்புகிறேனா? (கொலோ 3:23)

❐ நான் என் பெற்றோரையோ, குடும்பத்தினரையோ தேவனைவிட அதிகமாய் நேசிக்கிறேனா?



❐ இனத்தாருக்குப் பயன்படுவதினால் திருமுழுக்கு பெற்றுக்கொள் ளவோ, அல்லது வேறு எந்தக் காரியத்திலும் தேவனுக்குக் கீழ்ப்படியவோ தயங்குகிறேனா? (மத் 10:37)

❐ தேவனுடைய சித்தத்தைச் செய்வதே என்னுடைய வாழ்வின் இலட்சியமாய் இருக்கிறதா? (மத் 7:21)

❐ உபவாசத்தையும், ஜெபத்தையும் நான் அலட்சியம் செய்கிறேனா?

❐ எனக்குத் தேவையான உணவைவிட வேத வசனத்தைத் தியானிப் பதை மிகவும் அவசியமானதென்று கருதுகிறேனா? (யோபு 23:12)

❐ நான் தேவனுக்கென்று தாராளமாய்க் கொடுக்கிறேனா?

❐ என்னுடைய பணப்பை 'குணப்பட்டு' விட்டதா? (மத் 6:19-21)

❐ ஏழை எளியவர்க்கு நான் உதவி செய்கிறேனா? (யாக் 2:14-16; 2 கொரி 9:1)

❐ என்னுடைய ஈகை இரகசியமாயிருக்கிறதா? (மத் 6:1-4)

❐ நான் மனிதர் முன்பாக இயேசு கிறிஸ்துவை அறிக்கை செய்து அவர்களை ஆதாயப்படுத்த வெட்கப்படுகிறேனா?(மத் 10:32,33)

❐ இயேசு கிறிஸ்துவின் பேராணையை நிறைவேற்ற என்னால் ஆன முயற்சி யாவும் எடுக்கிறேனா? (மத் 28:19,20)

**ஜெபம்**

> **''தேவனே, என்னை ஆராய்ந்து என் இருதயத்தை அறிந்துகொள்ளும். என்னைச் சோதித்து என் சிந்தனை களை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து நித்திய வழியிலே என்னை நடத்தும்.'' (சங் 139:23,24)**

## 12

# மும்மூன்று உதாரணச் சத்தியங்கள்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது பிரசங்கங்களிலும் உரையாடல் களிலும் சத்தான சத்தியங்களைப் போதிக்க எளிதான எடுத்துக்காட்டு களைப் பயன்படுத்தினார். சில வேளைகளில் ஒரே சத்தியத்திற்குப் பல உதாரணங்களைக் கொடுத்தார். கேட்போராது பின்னணி, படிப்பறிவு, அனுபவம் எப்படிப்பட்டதாயிருந்தாலும் அவர்கள் அச்சத்தியங்களைப் புரிந்துகொண்டு அப்பியாசிக்கவேண்டுமென்பதே அவரது நோக்கம். கிறிஸ்துவின் சீடர் ஒவ்வொருவருக்கும் தேவையான நித்திய சத்தியங் களில் மும்மூன்று உதாரணங்களினால் விளக்கப்பட்டவைகளின் தொகுப்பு ஒன்று இங்கு தரப்பட்டுள்ளளது.

**1. தூய்மை (மத் 23:23-28) SANCTIFICATION**

அ) ஒட்டகம்
ஆ) பாத்ணிரம்
இ) கல்லறை

**2. ஆவியின் வரம் (லூக் 11:9-13) SPIRIT-GIFT**

அ) அப்பம் / கல்
ஆ) மீன் / பாம்பு
இ) முட்டை / தேள்

**3. வசன ஆகாரம் (லூக் 14:15-20) SCRIPTURE STUDY**

அ) மண்
ஆ) பூண்
இ) பெண்

**4. ஜெபம் SUPPLICATION**

அ) ஒரு நண்பன் (லூக் 11:5-10)
ஆ) ஒரு விதவை (லூக் 18:1-8)
இ) ஒரு பெண் (மத் 15:21-28)



**5. ஆத்துமாதாயம் (லூக் 15:1-32) SOUL WINNING**

அ) ஆடு
ஆ) வெள்ளிக்காசு
இ) மகன்

**6. சேவை SERVICE**

அ) நல்ல சமாரியன் (லூக் 10:29-37)
ஆ) நல்ல மேய்ப்பன் (யோ 10:6,11-15)
இ) நல்ல ஊழியன் (லூக் 12:42-48)

**7. தியாகம் (லூக் 9:57-62) SACRIFICE**

அ) இல்ல வசதிகள்
ஆ) இல்லச் சடங்குகள்
இ) இல்லப் பிணைப்புகள்

**8. முதன்மை SUPREMACY**

அ) தாழ்த்துதல் (மத் 18:1-4)
ஆ) பதி செய்தல் (லூக் 22:24-27)
இ) பாதங்கழுஷிதல் (யோ 13:12-17)

**9. ஒற்றுமை (மத் 12:25,30) SOLIDARITY**

அ) நாடு
ஆ) நகர்
இ) வீடு

**10. இரண்டாம் வருகை (லூக் 17:30-37) SECOND COMING**

அ) கட்டிலில் இருவர்
ஆ) ஏந்திரத்தில் இருவர்
இ) வயலில் இருவர்

# 13
# இளைஞனாயிருக்கிறேன் என்று சொல்லாதே !

தேவன் எரேமியாவை அழைத்தபோது அவன், '''ஆ கர்த்தராகிய ஆண்டவரே, இதோ, நான் பேச அறியேன்; சிறுபிள்ளையாயிருக் கிறேன்'' என்றான் (எரே 1:6). ஆனால் தேவன், ''நான் சிறுபிள்ளை என்று நீ சொல்லாதே'' என்று அவனைத் திருத்தினார். தமது ஆணையை ஏற்றுக்கொள்ள அவன் ஏன் தயங்கக்கூடாதென்பதற்கு ஏழு காரணங்களைக் கொடுத்தார். ஏதோவொரு சாக்கைச் சொல்லிக் கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான இளைஞர் நம்மிடம் உண்டு. நீ ஒருவேளை அவர்களில் ஒருவராயிருக்கலாம். எரேமியா புத்தகத்தின் முதல் அத்தியாயம் முழுவதையும் வாசித்துவிட்டு, இன்னும் உன்னால் சாக்குப்போக்கு சொல்லமுடியுமா என்று பார்!

### 1. இளைஞனாயிருக்கிறேன் என்று சொல்லாதே

ஏனெனில் நான் உன்னைத் தெரிந்துகொண்டேன்!

*''நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்கு முன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படு முன்னே நான் உன்னைப் பரிசுத்தம் பண்ணி, உன்னை மக்களினங்களுக்குத் தீர்க்கதரிசியாய்க் கட்டளை யிட்டேன்''* (வச 5)

### 2. இளைஞனாயிருக்கிறேன் என்று சொல்லாதே

ஏனெனில் நான் உன்னை அனுப்புகிறேன்!

*''நான் உன்னை அனுப்புகிற எல்லாரிடத்திலும் நீ போ''* (வச 7)

### 3. இளைஞனாயிருக்கிறேன் என்று சொல்லாதே

ஏனெனில் நான் உனக்குத் துணை நிற்கிறேன்!

*''நீ அவர்களுக்குப் பயப்படவேண்டாம்; உன்னைக் காக் கும் படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன்''* (வச 8)



### 4. இளைஞனாயிருக்கிறேன் என்று சொல்லாதே

ஏனெனில் நான் உனக்குப் போதிக்கிறேன்!

*''கர்த்தர் தமது கரத்தை நீட்டி என் வாயைத் தொட்டு: இதோ என் வார்த்தைகளை உன் வாயில் வைக்கிறேன் என்றார்''* (வச 9)

### 5. இளைஞனாயிருக்கிறேன் என்று சொல்லாதே

ஏனெனில் நான் உனக்கு அதிகாரமளிக்கிறேன்!

*''பார், பிடுங்கவும் இடிக்கவும் அழிக்கஷிம் கவிழ்க்கவும் கட்டவும் நாட்டவும் உன்னை நான் இன்று மக்களினங்கள் மேலும் நாடுகள் மேலும் ஏற்படுத்தினேன்''* (வச 10)

### 6. இளைஞனாயிருக்கிறேன் என்று சொல்லாதே

ஏனெனில் நான் உன்னை வழிநடத்துகிறேன்!

*''எரேமியாவே, நீ என்ன காண்கிறாய் என்று கேட்டார்; வாதுமை மரத்தின் கிளையைக் காண்கிறேன் என்றேன். அப்பொழுது கர்த்தர்: நீ கண்டது சரியே; என் வார்த்தை யைத் தீவிரமாய் நிறைவேற்றுவேன் என்றார்''* (வச 11-16)

### 7. இளைஞனாயிருக்கிறேன் என்று சொல்லாதே

ஏனெனில் நான் உன்னைப் பலப்படுத்துகிறேன்!

*''இதோ, நான் உன்னை இன்று அரணிப்பான பட்டண மும், இருப்புத் தூணும், வெண்கல அலங்கமும் ஆக்கி னேன். அவர்கள் உனக்கு விரோதமாய் யுத்தம் பண்ணு வார்கள்; ஆனாலும் உன்னை மேற்கொள்ளமாட்டார்கள்; உன்னை இரட்சிக்கும்படி நான் உன்னுடனே இருக் கிறேன்''* (வச 17-19).

## 14
# வாலிபர் தேவை!

❒ தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து கடைசிவரை அவர்களுக்குச் செய்யவேண்டிய கடமையை நிறைவேற்றும் —

**இயேசு** போன்ற — வாலிபர் தேவை!
(லூக் 2:51; யோ 19:25-27)

❒ பாலிய இச்சைகளுக்கு மறுப்பு தெரிவித்து சோதிக்கும் இடத்தையும் நபரையும் விட்டே ஓடிவிடும் —

**யோசேப்பு** போன்ற — வாலிபர் தேவை!
(ஆதி 39:10-12)

❒ பொல்லாங்காய்த் தோன்றுகிற அத்தனையையும் விட்டு விலகும்—

**தீமோத்தேயு** போன்ற — வாலிபர் தேவை!
(1 தீமோ 5:23)
(சிகிச்சைக்காக கொஞ்சம் திராட்சரசம் எடுக்கக்கூட பவுல் அவனை வற்புறுத்தவேண்டியதிருந்தது.)

❒ வேதத்திற்கு அடிமையாகி தங்கள் வாழ்க்கைமுறையை வசனத்திற் கேற்ப அமைத்துக்கொள்ளும் —

**யோசேப்பு, தீமோத்தேயு** போன்ற — வாலிபர் தேவை!
(சங் 105:19; 2 தீமோ 3:15)

❒ உடலிலும், அறிவிலும், ஆன்மீகத்திலும், சமூக வாழ்விலும் ஒருங்கே சமநிலையோடு வளரும் —

**இயேசு** போன்ற — வாலிபர் தேவை! (லூக் 2:52)

❒ தேவ திட்டங்களும் தீர்மானங்களும் நிறைவேறப் பக்தியுள்ள தங்கள் பெற்றோரோடு ஒத்துழைக்கும் —

**ஈசாக்கு** போன்ற — வாலிபர் தேவை!
(ஆதி 22:6, 9-14)



❒ கேலியும் பயமுறுத்தலும் நிறைந்திருந்தாலும் கிறிஸ்துவுக்காய்த் தைரியமாய்ச் சாட்சிபகரும் —

**சவுல் பவுல்** போன்ற — வாலிபர் தேவை! (அப் 9:29)

❒ அதிகாரியின் தயவையோ, உடன் பணியாளர் நடுவில் பெயரையோ இழக்க நேர்ந்தாலும் தங்கள் விசுவாசத்தில் சமரசம்பண்ண மறுக்கும்—

**தானியேல் குழுவினர்** போன்ற — வாலிபர் தேவை!
(தானி 3:16-18; 6:10,11,16)

❒ முதியோருக்கும் தலைவர்களுக்கும் கீழ்ப்படிந்து அவர்களது நல் மாதிரியைப் பின்பற்றி கர்த்தர் தங்களை உயர்த்தும் வேளைக்காய்க் காத்திருக்கும் —

**யோசுவா** போன்ற — வாலிபர் தேவை!
(யாத் 24:13; எண் 27:18-20)

❒ தியாகம் செய்யவேண்டியதிருந்தாலும், அது தேவையிலுள்ளோருக்கு ஆசீர்வாதமாகப் பயன்படக் கூடுமானால், எதையும் தேவனுக்குக் கொடுத்துவிட ஆயத்தமாயிருக்கும் —

**பெயர் சொல்லப்படாத அச்சிறுவன்** போன்ற — வாலிபர் தேவை! (யோ 6:9-11)

❒ மாய்மாலத்தையம் குப்பை கூளங்களையும் தேவனுடைய வீட்டிலிருந்து அகற்றும் —

**அப்போஸ்தலர் 5இலுள்ள வாலிபர்** போன்ற — வாலிபர் தேவை! (வச 6:9,10)

❒ விஞ்ஞான உலகின் அசட்டையையும், பின்வாங்கின சபையின் உற்சாகமிழக்கச் செய்யும் வார்த்தைகளையும் கவனியாது கர்த்தருக்காய்ப் பெரிய காரியங்களைச் செய்யத் துடிக்கும் —

**தாவீது** போன்ற — வாலிபர் தேவை!
(1 சாமு 17:28,33,43,44)

- ❒ தேவன் அழைத்ததும் தங்கள் அலுவல்களையும் கட்டுகளையும் விட்டுவிட்டு முழுநேரமாய் அவருக்கு ஊழியம் செய்யப் புறப்படும்—

  யாக்கோபு, யோவான் போன்ற — வாலிபர் தேவை!

  (மத் 4:21,22)

- ❒ பரிசுத்த ஆவியின் வல்லமையோடும் உன்னதத் தரிசனத்தோடும் உலகை நற்செய்திமயமாக்கப் புறப்பட்டுச் செல்லும் —

  **யோவேல் தீர்க்கதரிசன வாலிபர், கன்னியர்**
  போன்ற — வாலிபர் தேவை! (அப் 2:16-18,21)



## 15

# ஓர் இளைஞர் முகாமிற்கு ஜெபம்

*பரமண்டலங் களிலிருக்கிற எங்கள் பிதாவே ...*

எங்கள் பரலோகப் பிதாவாகிய தேவனே, இதற்கு முந்திய முகாம்களில் நீங்கள் எங்கள் நடுவில் செய்தவைகளுக்காய் நன்றி நிறைந்த உள்ளங்களோடு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உமது கிருபாசனத்தண்டை வருகிறோம். ஜோதிகளின் பிதாவே, நன்மையும் பூரணமுமான எந்த ஈவிற்கும் உறைவிடமானவரே, நீர் விண்ணிலிருந்து எங்களை ஆசீர்வதிக்காவிடில் நாங்கள் எப்படி ஆசீவாதம் பெற முடியும்? வருகின்ற முகாமில் ஆசீர்வாதமான மழை பெய்யும் என்று பரத்திலிருந்து எங்களுக்கு வாக்கருளி யிருப்பதற்காய் உம்மைத் துதிக்கிறோம்.

*உமது நாமம் பரிசுத்தப் படுவதாக.*

சங்கீதங்கள் பாடி, ஆனந்த துதியொலி எழுப்பி, உமது நாமத்தை உயர்த்துவதற்காய் ஆயிரக்கணக்கான இளைஞர் உமது பிரசன்னத்தில் கூடிவரும்படி அவர் களை நீர் இம்முகாமிற்கு அழைத்துவர ஜெபிக்கிறோம், ஆண்டவரே. நாங்கள் அக்கார்டின், வயலின், கிட்டார், மத்தளம், ஜாலர் மற்றும் எலக்ட்ரானிக் சாதனங்களைப் பயன்படுத்தி உமது நாமத்தைத் துதிக்கையில் இசைப் போர் மற்றும் பாடுவோர் மீது உமது பரிசுத்த ஆவியான வர் வல்லமையாய் அசைவாட வேண்டுகிறோம்.

*உமது இராஜ்யம் வருவதாக.*

கர்த்தாவே, முகாமின் மூன்று நாட்களும் பரலோகம் பூலோகிற்கு வந்ததாயிருக்கட்டும். உமது இராஜ்யத் தைக் குறித்து உமது வசனத்தில் நாங்கள் வாசிக்கிறது போல எங்களை நீதியிலும், சமாதானத்திலும், வல்ல

மையிலும், பரிசுத்த ஆவியானவரின் சந்தோஷத்திலும் முழுக்க முழுக்க நனைத்தருளும். உமது மகிமையையும் பரிசுத்தத்தையும் குறித்து அதிரும் தரிசனங்களைத் தாரும். நாங்கள் உமக்கு முன்பாக நிற்கக்கூட முடியாத அளவு உமது மகிமைப் பிரசன்னத்தினால் எங்களை நிரப்பி முகங்குப்புற உமக்குமுன் விழுந்து பணியச்செய்யும்.

*பரமண்டலத்தில் உமது சித்தம் செய்யப்படுவது போல பூமியிலேயும் செய்யப்டுவதாக.*

முகாமில் உமது ஆவியானவர் முழு விடுதலையோடு அசைவாடுவாராக. உமது ஆவிக்கு ஆலோசகராயிருந்து அவரைப் போதித்து நடத்தக்கூடியது யார்? முகாம் அமைப்பாளர்கள் யாவரையும் ஒவ்வொரு படியிலும் தெளிவாய் நடத்தும் தலைமையையும் அதிகாரத்தையும் உமது ஆவியானவருக்கு மனப்பூர்வமாய்க் கொடுக்கிறோம். எங்கள் சிந்தனைகள் யாவையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்பிடித்து உம்மை — உம்மை மட்டுமே — இம்முகாமில் எல்லாவற்றிலும் பிரியப்படுத்த எங்களுக்கு உதவும். இந்த முகாம் பரலோகத்தை மகிழச் செய்யட்டும்.

*அன்றன்றுள்ள ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்.*

ஏசாயா 25:6இல் தேவனே நீர் வாக்குப்பண்ணியபடி கொழுப்பும் மதுரமுமான விருந்தை இம்முகாமில் எங்களுக்காய் ஆயத்தப்படுத்தும். உமது ஊழியர் பரத்திலிருந்து எங்களுக்குப் புதிய மன்னாவைக் கொண்டு வரட்டும். ''உமது'' சத்தத்தையே கேட்க விரும்புகிறோம், தேவா! அப்படியே இம்முகாமிற்கான எங்களது பொருளாதாரத் தேவைகள் யாவற்றையும் சந்தியும். முகாம் நடக்கும் நாட்களில் எங்களுக்காய் நல்லதொரு தட்பவெட்ப நிலையைக் கட்டளையிடும்.



*எங்களுக்கு விரோதமாய்க் குற்றம் செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் தப்பிதங்களை எங்களுக்கு மன்னியும்.*

முகாமில் பங்குபெறுபவர் ஒவ்வொருவரும் தங்களை ஆராய்ந்து சீர்தூக்கிப்பார்த்துக் கல்வாரியின் இரத்தத்தில் மாசறக் கழுவப்படும்படி ஊடுருவும் உமது வெளிச்சம் ஒவ்வொருவர்மீதும் வீசட்டும். உமக்கு முன்பாகவும் மனிதருக்கு முன்பாகவும் குற்றமற்ற மனச்சாட்சியுடன் வாழ ஒவ்வொருவரையும் வழிநடத்தும், ஆண்டவரே.

*எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல் எங்களைத் தீமையினின்று இரட்சித்துக் கொள்ளும்.*

அசுத்தமும் அக்கிரமமும் பெருகியுள்ள இக்காலங்களில் வாழும் எங்கள் ஒவ்வொருவரையும் பிசாசின் வஞ்சகங்களுக்கு எதிராய் நிமிர்ந்து நிற்கப் பலப்படுத்தும். ''நான் கீழே இறங்கி வரமாட்டேன்'' எனும் முழக்கத்தோடு உலகிலுள்ள ஒவ்வொரு சவாலையும் சந்திக்க முகாமியர் ஒவ்வொருவருக்கும் உமது தைரியத்தை அருளிச் செய்யும்.

*இராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.*

இம்முகாமில் பங்குபெற்றுச் செல்வோர் தங்கள் உயிரைப் பணயம் வைத்து வீரசேனையாய் எங்கும் புறப்பட்டுச் சென்று இந்தியாவிலும் உலகமெங்கிலும் உமது இராஜ்யம் பரவ முழுமூச்சாய் உழைப்பார்களாக. ''போ அத்துடன் அனுப்பு'' எனும் மிஷனரிக் கட்டளைக்கு அவர்கள் கீழ்ப்படிந்து நாடு முழுவதையும் நற்செய்தியினால் பரப்புவார்களாக. ஆணிச்சபையிலிருந்தது போல ஒவ்வொரு கிறிஸ்தவனும் தீவிர ஆத்துமாதாயகனாயிருக்கட்டும். இவையெல்லாவற்றிலும் எங்களுக்கு அல்ல, கர்த்தாவே, எங்களுக்கு அல்ல, உமது நாமத்ணிற்கே மகிமை வரப்பண்ணும். ஆமென்.

## 16

# மாணவருக்குப் பரீட்சை டானிக்!

- ''நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன்'' (ஏசா 41:10)

- ''உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிரு'' (நீதி 3:5)

- ''உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்'' (யாக் 1:5)

- ''தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும், அன்பும், தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்'' (2 தீமோ 1:7)

- ''அமரிக்கையும் நம்பிக்கையுமே உங்கள் பலம்'' (ஏசா 30:15)

- ''(தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா ஆகிய) நாலு வாலிபருக்கும் தேவன் சகல எழுத்திலும் ஞானத்திலும் அறிவையும் சாமர்த்தியத்தையும் கொடுத்தார்'' (தானி 1:17)

- ''முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்'' (மத் 6:33)

- ''என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை'' (யோவே 2:26)

- ''அவர்கள் விருதாவாய் உழைப்பதில்லை'' (ஏசா 65:23)

- ''கர்த்தர் நீ கையிடும் எல்லா வேலையிலும் உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார்'' (உபா 28:8)



- ''என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்'' (எரே 33:3)

- ''குதிரை யுத்த நாளுக்கு ஆயத்தமாக்கப்படும்; ஜெயமோ கர்த்தரால் வரும்'' (நீதி 21:31)

- ''என்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பலமுண்டு'' (பிலி 4:13)

- ''அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாய் நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்'' (ரோ 8:28)

- ''என் கிருபை உனக்குப் போதும்'' (2 கொரி 12:9)

## 17

# உனக்கு வேதம் கூறுவது...

### 1. நீ வழி தப்பிய பாவி!

வேதம் கூறுவது:

''வித்தியாசமே இல்லை. எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமை யற்றவர்களானார்கள்'' (ரோ 3:22,23)

''நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது'' (1 யோ 1:8)

''நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து அவனவன் தன் தன் வழியிலே போனோம்'' (ஏசா 53:6)

### 2. நீ மரித்தபின் நியாயத்தீர்ப்பைச் சந்திக்கவேண்டும்!

வேதம் கூறுவது:

''ஒரே தரம் மரிப்பதும், நின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனிதருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது'' (எபி 9:27)

''ஒவ்வொரு செயலையும், இரகசியமான ஒவ்வொரு காரியத்தை யும், நன்மையானாலும், தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டு வருவார்'' (பிர 12:14)

### 3. நீ கெட்டு அழிந்துபோகத் தேவையில்லை!

வேதம் கூறுவது:

''தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்'' (யோ 3:16)



### 4. கிறிஸ்து உனக்காய் மரித்தார்!

வேதம் கூறுவது:

''நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காய் மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்'' (ரோ 5:8)

''மெய்யாகவே, அவர் நமது பாடுகளை ஏற்றுக்கொண்டு, நமது துக்கங்களைச் சுமந்தார்; நமது மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நமது அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட் டார்'' (ஏசா 53:4,5)

### 5. நீ உன் பாவங்களை அறிக்கைசெய்து விட்டுவிட்டு இப் பொழுதே மனந்திரும்பு!

வேதம் கூறுவது:

''அறியாமைஜிள்ள காலங்களைத் தேவன் காணாதவர்போலிருந் தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனிதரெல்லா ருக்கும் கட்டளையிடுகிறார்'' (அப் 17:30)

''தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்'' (நீதி 28:13)

''அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்'' (1 யோ 1:7)

### 6. கிறிஸ்துவை விசுவாசித்து அவரை உன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்!

வேதம் கூறுவது:

''கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்'' (அப் 16:31)

''அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்'' (யோ 1:12)

''இயேசு: நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்றார்'' (யோ 14:6)

## 7. திருமுழுக்கில் கர்த்தருக்குக் கீழ்ப்படி!

வேதம் கூறுவது:

''விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்டுவான்'' (மாற் 16:16)

''பரிசேயரும் நியாய சாஸ்திரிகளுமோ அவனாலே ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்குக் கேடுண்டாக தேவனுடைய ஆலோசனையைத் தள்ளிவிட்டார்கள்'' (லூக் 7:30)

## 8. மனிதரோடு ஒப்புரவாகு!

வேதம் கூறுவது:

''நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன் பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவு கூறுவாயாகில், அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய் முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து'' (மத் 5:23,24)

''தேவனுக்கும் மனிதருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாயிரு'' (அப் 24:16)

## 9. பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்!

வேதம் கூறுவது:

''இயேசு அவர்களிடத்தில் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்றார்'' (யோ 20:22)



''பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பலமடைந்து ...எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்'' (அப் 1:8)

''அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்'' (அப் 2:4)

## 10. தீய சகவாசகங்களை அகற்று!

வேதம் கூறுவது:

''அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக... நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்து போய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள்'' (2 கொரி 6:14,17)

''துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும் பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும் ... இருக்கிற மனிதன் பாக்கியவான்'' (சங் 1:1)

## 11. தேவனுடைய பிள்ளைகளோடு ஐக்கியப்படு!

வேதம் கூறுவது:

''சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுதுகொள்ளுகிறவர்களுடனே நீதியையும், விசுவாசத்தையும், அன்பையும், சமாதானத்தையும் அடையும்படி நாடு'' (2 தீமோ 2:22)

''இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவில் இருக்கிறேன்'' (மத் 18:20)

## 12. ஒழுங்கான ஜெப வாழ்க்கையைத் துவங்கு!

வேதம் கூறுவது:

''இயேசு அதிகாலையில் இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப் போய், அங்கே ஜெபம் பண்ணினார்'' (மாற் 1:35)

''அந்தி, சந்தி, மத்தியான வேளைகளிலும் நான் தியானம் பண்ணி முறையிடுவேன்; அவர் என் சத்தத்தைக் கேட்பார்'' (சங் 55:17)

''நீங்கள் சோதனைக்குட்படாதபடி விழித்திருந்து ஜெபம்பண்ணுங் கள்'' (மத் 26:41)

''நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல், எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத் தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங் கள்'' (பிலி 4:6)

## 13. தேவனுடைய வசனத்தைத் தினமும் தியானி!

வேதம் கூறுவது:

''நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப் பாலின்மேல் வாஞ்சையா யிருங்கள்'' (1 பேது 2:2)

''அவர் வாயின் வார்த்தைகளை எனக்கு வேண்டிய ஆகாரத்தைப் பார்க்கிலும் அதிகமாய்க் காத்துக்கொண்டேன்'' (யோபு 23:12)

''உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும் என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது'' (சங் 119:105)

## 14. பரிசுத்த வாழ்க்கை நடத்து!

வேதம் கூறுவது:

''யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களா யிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே'' (எபி 12:14)

''உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்'' (1 பேது 1:15)



''ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்'' (கலா 5:22,23)

## 15. ஆத்துமாக்களை ஆதாயம் செய்!

வேதம் கூறுவது:

''இயேசு அவர்களைக் கண்டு, என் பின்னே வாருங்கள், உங்களை மனிதரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார்'' ( மத் 4:19)

''ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக்கொள்ளுகிறவன் ஞான முள்ளவன்'' (நீதி 11:30)

''நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத் தைப் பிரசங்கியுங்கள்'' (மாற் 16:15)

## 16. தேவனுக்கு உதாரத்துவமாய்க் கொடு!

வேதம் கூறுவது:

''உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம்பண்ணு'' (நீதி 3:9)

''வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்'' (அப் 20:35)

''உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக் கிறார்'' (2 கொ 9:7)

## 17. ஏழைகளுக்கும் தேவையுள்ளோருக்கும் உதவி செய்!

வேதம் கூறுவது:

''சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்; தீங்கு நாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார்'' (சங் 41:1)

''ஒரு சகோதரனாவது, சகோதரியாவது ஆடையில்லாமலும், அனுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, உங்களில் ஒருவன்

அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர் காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், உடலுக்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பயனென்ன?''
(யாக் 2:15,16)

**18. கர்த்தரின் வருகைக்கு ஆயத்தமாயிரு!**

வேதம் கூறுவது:

''உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்''
(அப் 1:11)

''நீங்கள் நினையாத நேரத்தில் மனுக்குமாரன் வருவார்; ஆகையால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள்'' (லூக் 12:40)



# 18
# புனித மலையில் ஏறுவது எப்படி?

**சங்கீதம்** 15:2-5; 24:4,5

*1.''உத்தமனாய் நடந்து''*

உன் வாழ்க்கையைக் குறித்து 'சரியாயிருக்கிறது' என்று தேவன் எழுத முடியுமா? (எண் 12:7)

*2. ''நீதியை நடப்பித்து''*

சுயநீதி என்னும் கந்தையை எறிந்துவிட்டு நொறுங்கிய இதயத்தோடு தேவனிடம் வந்திருக்கிறாயா? (ஏசா 64:6; லூக் 18:13,14)

*3. ''மனதாரச் சத்தியத்தைப் பேசுகிறவன்தானே.''*

உன் வாயின் வார்த்தைகள் யாவும் மாய்மாலமற்றிருக்கின்றனவா?
(மத் 15:8)

*4. ''அவன் தன் நாவினால் புறங்கூறாமலும்''*

புறங்கூறுகிறாயா? (லேவி 19:16)

*5. ''தன் தோழனுக்குத் தீங்கு செய்யாமலும்''*

உன்னைப்போல் பிறனை நேசிக்கிறாயா? நீ தவறிழைத்த ஒவ்வொருவரோடும் ஒப்புரவாகிவிட்டாயா?
(மத் 7:12; 22:39; 5:23,24)

*6. ''தன் அயலான் மேல் சொல்லப்படும் நிந்தையான பேச்சை எடுக்காமலும் இருக்கிறான்.''*

பிறரைப் பற்றிய அவதூறான பேச்சைக் கேட்க உன் செவிகள் திறந்திருக்கின்றனவா? (1 கொரி 13:6; நீதி 24:17)

*7. ''ஆகாதவன் அவன் பார்வைக்குத் தீழ்ப்பானவன்''*

உலக சிநேகத்தையும், அவிசுவாசிகளின் ஐக்கியத்தையும் இன்னும் விடாதிருக்கிறாயா? (யாக் 4:4; 2 கொரி 6:14; சங் 1:1)

8. *''கர்த்தருக்குப் பயந்தவர்களையோ கனம்பண்ணுகிறான்.''*

உன் சபைப்பிரிவைச் சேராத விசுவாசிகளைக் கிறிஸ்துவின் உடலின் உறுப்புகள் என அங்கிகரிக்கத் தயங்குகிறாயா? (1 கொரி 1:10-13)

தேவப் பிள்ளைகளின் ஐக்கியத்தை அசட்டை செய்கிறாயா? (2 தீமோ 2:22)

9. *''ஆணையிட்டதில் தனக்கு நஷ்டம் வந்தாலும் தவறாதிருக் கிறான்''*

தேவனுக்கும் மனிதருக்கும் முன்பாக உன் வாக்குறுதிகளைக் காத்துக்கொண்டாயா? (பிர 5:4,5; அப் 24:16). உன் கடமைகளில் கவனமாயிருக்கிறாயா? (எபே 6:5-9; நீதி 22:29)

10. *''தன் பணத்தை வட்டிக்குக் கொடாமலும்''*

தேவையுள்ளோர்க்கும், துன்புறுவோர்க்கும் உன்னால் இயன்ற அளவு உதவுகிறாயா? (நீதி 19:17; யாக் 2:15,16)

11. *''குற்றமில்லாதவனுக்கு விரோதமாய்ப் லஞ்சம் வாங்காமலும் இருக்கிறான்''*

பொருளாதார நிலை, சமூக அந்தஸ்து, ஜாதி பேதம் போன்றவை பிறரோடு உனக்குள்ள உறவைப் பாதிக்கின்றனவா? (யாக் 2:1-4)

12. *''கைகளில் சுத்தமுள்ளவனும்''*

பணக் காரியத்தில் நீ உண்மையாயிருக்கிறாயா? தேவனையோ, மனிதரையோ ஏமாற்றியிருக்கிறாயா? (லூக் 16:11; அப் 5:1-3)

13. *''இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து''*

இருதயத்திலிருந்து புறப்பட்டுவரும் பொல்லாத சிந்தனை, விபச்சாரம், வேசித்தனம், கொலை பாதகங்கள், களவுகள்,



பொருளாசைகள், துஷ்டத்தனங்கள், கபடு, காமவிகாரம், வன்கண், தூஷணம், பெருமை, மதிகேடு ஆகிய பொல்லாங்குகளினால் உன்னைக் கெடுத்துக்கொண்டிருக்கிறாயா?
(மாற் 7:21-23; மத் 5:28-30; 1 கொரி 6:18,19; 3:17; யாக் 4:6)

14. *''தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாமலும்''*

உன் ஆத்துமாவை தேவனுடைய வார்த்தையினால் போஷிக் கிறாயா? அது ஜெப ஆவியில் நனைந்திருக்கிறதா? அல்லது அழிந்துபோகும் உலகச் சிற்றின்பங்களை நாடி அலைகிறாயா? (சங் 1:2; எரே 2:13; நிர 11:9)

15. *''கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே.''*

திருமுழுக்கு, திருமணம் போன்ற முக்கிய சந்தர்ப்பங்களில் நீ செய்து கொண்ட உடன்படிக்கைகளைக் காத்து வருகிறாயா? முதல் விசு வாசம், ஆதி அன்பு இவைகளை விட்டு இறங்கி வந்திருக்கிறாயா? (1 தீமோ 5:12; வெளி 2:4)

**''இப்படிச் செய்கிறவன் என்றென்றும் அசைக்கப் படுவதில்லை ... அவன் கர்த்தரால் ஆசீர்வாதத்தையும் தன் இரட்சிப்பின் தேவனால் நீதியையும் பெறுவான்''**
**(சங் 15:5; 24:5)**

19

# நான் மட்டும் பிசாசாயிருந்தால் ...

*1. நான் பிசாசாயிருந்தால்,*

மரணத்திற்குப் பின் வாழ்வேதுமில்லை; எனவே விருப்பம் போல் வாழலாம் என்று மனிதருக்குச் சொல்லுவேன்.

*2. நான் பிசாசாயிருந்தால்,*

எம்மதமும் சம்மதம்; எதை நம்புகிறோமோ அதில் உண்மையாயிருக்கவேண்டும், அவ்வளவுதான் என்ற தத்துவத்தைப் பரப்புவேன்.

*3. நான் பிசாசாயிருந்தால்,*

நிறையப் பிரசங்கியுங்கள்; கொஞ்சம் தியானியுங்கள்; அதிலும் குறைவாய் ஜெபியுங்கள் என்று பிரசங்கிகளுக்கு அறிவுறுத்துவேன்.

*4. நான் பிசாசாயிருந்தால்,*

நற்செய்திக் கூட்டங்களில் முன்வருவோர் காதுகளில் அவர்கள் இரட்சிக்கப்பட முடியாத கொடும்பாவிகள் என்று ஓதுவேன்.

*5. நான் பிசாசாயிருந்தால்,*

கிறிஸ்தவ வாழ்வு மிக அரிது; அதுவும் இன்றையச் சமுதாயத்தில் அது சாத்தியமேயில்லை என்று வெற்றி வாழ்வு வாழ முயலுவோரை மனம் தளரப்பண்ணுவேன்.

*6. நான் பிசாசாயிருந்தால்,*

பாவம், நியாயத்தீர்ப்பு, நரகம் ஆகியவை குறித்தெல்லாம் அதிகம் பேசாது, தங்கள் செய்தியில் சாதகமாயிருக்கவேண்டுமென்று சுவிசேஷகருக்குப் போதிப்பேன்.



*7. நான் பிசாசாயிருந்தால்,*

வேதம் குழப்பம் நிறைந்த ஒரு சரித்திரப் புத்தகம்; அதை தேவ வசனம் என்று சொல்லமுடியாது என இறையியல் கல்லூரி மாணவருக்குச் சொல்லுவேன்.

*8. நான் பிசாசாயிருந்தால்,*

ஒரு மிஷனரிக் கன்வென்ஷன் விடாது பங்குபெற்று, வாலிபரிடம் தங்கள் வாழ்வை மிஷனரிப் பணிக்கு அர்ப்பணிக்க எண்ணுவது அர்த்தமற்றது; யார்தான் உலகை இரட்சிக்க முடியும் என்று முணுமுணுத்துக்கொண்டிருப்பேன்.

*9. நான் பிசாசாயிருந்தால்,*

சபையை எவ்வளவு பிரிக்க முடியுமோ அவ்வளவு பிரித்து, ஒவ்வொரு பிரிவின் தலைவரிடமும் அவர் சத்தியத்திற்காகத் தானே நிற்கிறார் என்று உற்சாகப்படுத்துவேன்.

*10. நான் பிசாசாயிருந்தால்,*

மோட்சம் நரகம் என்றெல்லாம் ஒன்றும் கிடையாது; மதமானது மக்களைக் கவர்ந்து தன்னகத்தே வைத்துக்கொள்ள கண்டுபிடித்த கற்பனைக் கதைதான் அது என்று மக்களிடம் திட்டமாய்ச் சொல்லுவேன்.

*11. நான் பிசாசாயிருந்தால்,*

பணம்தான் பத்தும் செய்யும்; எனவே எவ்வளவு முடியுமோ அவ்வளவு சம்பாதித்துச் சேர்க்கவேண்டுமென்று மக்களை ஊக்குவிப்பேன்.

*12. நான் பிசாசாயிருந்தால்,*

திருமணத்திற்குப் பிறகு விருப்பம்போல் போக முடியாது, வயதும் ஆகிவிடும், எனவே இப்பொழுதே விருப்பமான பாலுறவு இன்பங்கள் அத்தனையையும் எப்படி வேண்டுமானாலும் அனுபவித்துக்கொள்ள வேண்டுமென்று இளைஞரைத் தட்டிக் கொடுப்பேன்.

*13. நான் பிசாசாயிருந்தால்,*

டேவிட் லிவிங்ஸ்டன், C.T. ஸ்டட், ஹட்சன் டெய்லர் போன்றோரெல்லாம் தேவையில்லா வெறியர்கள்; இவர்களது சரிதைகளையெல்லாம் வாசித்து நேரத்தை வீணடிக்கக்கூடா தென்று கிறிஸ்தவருக்குச் சொல்லுவேன்.

*14. நான் பிசாசாயிருந்தால்,*

இனி முயற்சித்துப் பயனில்லை என்று பின்மாற்றக்காரர் செவிகளில் சொல்லிக்கொண்டேயிருப்பேன்.

*15. நான் பிசாசாயிருந்தால்,*

தற்கொலைதான் மேல், அதுதான் எளிய வழி; மரணத்திற்குப் பின்னர்தான் ஒன்றுமில்லையே என்று பிரச்னைகளில் சிக்கியுள்ளோருக்கு ஆலோசனை கூறுவேன்.

*16. நான் பிசாசாயிருந்தால்,*

பிள்ளைகளுக்கு வேதத்தைப் போதிக்கக்கூடாது; வளரும் போது அவர்களாகவே தங்களுக்கு விருப்பமானதைத் தெரிந்து கொள்ள விட்டுவிடவேண்டுமென்று பெற்றோருக்குப் போதிப்பேன்.

*17. நான் பிசாசாயிருந்தால்,*

ஏதோ அவ்வப்போது புகைப்பது, குடிப்பது, போதை மருந்தெடுப்பது எல்லாம் தவறல்ல என்று மக்கள் மனதில் போட்டுவிடுவேன்.

*18. நான் பிசாசாயிருந்தால்,*

இன்றைக்கு வயிற்றுக்கே உணவில்லாதிருக்கும்போது மரணத் துக்குப் பின்னுள்ள வாழ்வைப் பற்றிப் பேசிப் பயனென்ன? எனவே சுவிசேஷ ஊழியத்தைவிட சமூக சேவையே அதிகம் செய்யவேண்டுமென்று சபைகளை உற்சாகப்படுத்துவேன்.



*19. நான் பிசாசாயிருந்தால்,*

பிரசங்கிகள் மகாராஜாவை அல்லவோ சேவிக்கிறார்கள்; எனவே உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றிற்கு டாம்பீக மாய்ச் செலவழிக்க அவர்களை நடத்துவேன்.

*20. நான் பிசாசாயிருந்தால்,*

திருமுழுக்கு வெறும் வெளிச்சடங்குதான்; எனவே அது அவசியமில்லை என்று போதிப்பேன்.

*21. நான் பிசாசாயிருந்தால்,*

அற்புதங்கள் மற்றும் இரத்த சாட்சிகளின் காலமெல்லாம் கடந்துவிட்டது, எனவே இன்று பெரிய காரியங்களை எதிர் பார்க்கவோ, முயற்சிக்கவோ கூடாதென்று கிறிஸ்தவரிடம் சொல்லுவேன்.

*22. நான் பிசாசாயிருந்தால்,*

இன்று அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகளெல்லாம் கிடையாது; நவ நாவுகளில் பேசுதல் போன்ற வரங்களெல்லாம் நின்று போயின என்று உத்தமக் கிறிஸ்தவர் மனதில் பதிப்பேன்.

*23. நான் பிசாசாயிருந்தால்,*

பூரணர் ஒருவருமில்லை; பாவத்தில் விழுவது இயற்கைதான்; பரிசுத்தமாய் வாழ முயலுவதில் பயனென்ன என்று விசுவாசி களுக்குப் போதிப்பேன்.

*24. நான் பிசாசாயிருந்தால்,*

களங்களில் கனியில்லாதிருக்கச் செய்து மிஷனரிகளுக்குச் சோர்புண்டாக்கி, திரும்பிவிடுவது மேல், அல்லது இறையியல் கல்லூரிக்குச் சென்று இன்னொரு பட்டம் பெற்றுப் பார்க்கலா மென ஆலோசனை கூறுவேன்.

*25. நான் பிசாசாயிருந்தால்,*

குடும்ப ஜெபம் போன்றவையெல்லாம் பழங்காலப் பழக்கங்கள், இன்றைக்குப் பொருந்தாதவை. அது ஓய்வு நாள் பள்ளிக்குரிய வேளையாயிருந்தாலும் பொது அறிவைப் பெருக்கிக்கொள்ள பிள்ளைகள் தொலைக்காட்சி பார்க்கலாமென ஆலோசனை கூறுவேன்.

*26. நான் பிசாசாயிருந்தால்,*

மக்களைக் கவர சபை ஆராதனைகளில் கலை நிகழ்ச்சிகள், வேடிக்கை விளையாட்டுகள் ஆகியவற்றைத் தயங்காது கூட்டிக்கொள்ளும்படி மேய்ப்பர்களுக்குச் சொல்லுவேன்.

*27. நான் பிசாசாயிருந்தால்,*

ஒரு கமிட்டி மீட்டிங் விடாது பங்குபெற்று, அங்கத்தினரை முடிவில்லாத ஜெபமற்ற விவாதங்களுக்குள் நடத்திக் கொண்டேயிருப்பேன்.

*28. நான் பிசாசாயிருந்தால்,*

ஆண்டு முழுவதும் ஊழியரைப் பயணங்களிலும், கூட்டங்களிலுமே நேரத்தைச் செலவழிக்கச் செய்து, குடும்பத்திற்கும் தனி ஜெபத் தியானத்திற்கும் நேரமேயில்லை எனும் நிலைக்குக் கொண்டுவருவேன்.

*29. நான் பிசாசாயிருந்தால்,*

கிறிஸ்து திரும்ப வருகிறார் என்றெல்லாம் விசுவாசிக்கக்கூடாதென்று மக்களுக்குச் சொல்லி, உலகம் இன்று போல் என்றும் இருக்கும் என்று அவர்களுக்கு வாக்குப்பண்ணுவேன்.

*30. நான் பிசாசாயிருந்தால்,*

என்னைத் தள்ளி எறிந்துவிட்ட தேவனது தீர்மானங்களைச் சிதறடிக்கப் புதுப் புதுத் திட்டங்களைத் தீட்டிக்கொண்டேயிருப்பேன்!



## 20

# ஆவியானவரை நான் என்ன செய்யவேண்டும் ?

''கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்யவேண்டும்?'' என்று பிலாத்து கேட்டதற்கு, மக்கள் பிரதான ஆசாரியராலும் மூப்பராலும் ஏவப்பட்டு, ''அவனைச் சிலுவையில் அறையவேண்டும்'' என்று சொன்னார் கள். சரித்திரம் திரும்பும். மார்க்கபக்தியான பழைய ஏற்பாட்டு யூதர்கள் தேவனது முதலாம் தேற்றரவாளனாகிய இயேசு கிறிஸ்துவைத் தள்ளிவிட்டதுபோல, புதிய ஏற்பாட்டு யுகத்ணில் வாழும் கிறிஸ்தவர்கள் தேவனது இரண்டாம் தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரைத் தள்ளிவிடுகின்றனர். சபையின் எல்லாச் சாபங்களுக்கும் காரணம் பரிசுத்த ஆவியானவரைக் குறித்த அறிவு பற்றாக்குறைதான். கிறிஸ்தவ நண்பரே, பின்வரும் கோர்வையை வாசித்து, தாழ விழுந்து, ''பரிசுத்த ஆவியானவரை நான் என்ன செய்யவேண்டும்?'' என்ற வினாவிற்கு விடை கூறுவீர்.

1. பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் பெறுங்கள் (மத் 28:19)
2. பரமபிதா உங்களுக்குப் பரிசுத்த ஆவியை அருளும்படி கேளுங்கள் (லூக் 11:13)
3. பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள் (யோ 20:22; அப் 19:2)
4. எவ்வளஷி சீக்கிரம் முடியுமோ அவ்வளஷி சீக்கிரம் ஆவியினால் நிரப்பப்படுங்கள் (லூக் 1:15)
5. தேவனது அக்கினியினால் சுத்திகரிக்கப்படப் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள் (மத் 3:11,12)
6. அறிவுக்கு முன்னாக ஆவியின் வல்லமைக்கும் அபிஷேகத்திற்கும் வாழ்க்கையில் இடமளியுங்கள் (அப் 1:7,8)
7. ஆவியினாலே தேவனைத் துதித்து ஆராதியுங்கள் (யோ 4:24; அப் 2:4,11 ; 10:46; 1 கொரி 12:3)

8. பரிசுத்த ஆவியில் களிகூருங்கள் (ரோ 14:17; 15:13)

9. பரிசுத்த ஆவிக்குக் கீழ்ப்படியுங்கள் (எபி 3:7,8)

10. பரிசுத்த ஆவியின் ஏவுதலுக்குச் சாதகமாய்ச் செயல்படுங்கள் (லூக் 2:25-27)

11. ஆவியின் புதிய அபிஷேகத்தைத் தினமும் அனுபவிக்கக் கீழ்ப் படிதலின் ஆவியினால் நிறைந்திருங்கள் (அப் 5:32)

12. ஆவியினால் நடத்தப்படுங்கள் (ரோ 8:14)

13. பரிசுத்தமாகுதலுக்கு அழைப்பை ஏற்றுக்கொண்டு பரிசுத்த ஆவி யினாலே அனுகூலமாக்கப்பட்டு அவரது கனியைக் கொடுங்கள் (1 தெச 4:7,8; கலா 5:22,23)

14. உலகத்தின் சிற்றின்பங்கள் பின்னே ஓடாமல் பரிசுத்த ஆவி யினாலே நிறைந்திருங்கள் (லூக் 1:15; எபே 5:18)

15. உங்கள் உடல் தேவனுடைய ஆலயம் என்றுணர்ந்து பாலியல் பாவங்களுக்கு உடலை விலக்கிக் காத்துக்கொள்ளுங்கள் (1 கொரி 6:18-20)

16. ஆவியினாலே உடலின் பாவச் செய்கைகளை அழியுங்கள் (ரோ 8:13)

17. பரிசுத்த ஆவிக்குள் மனச்சாட்சியைச் சுத்தமாயும் குற்றமின்றியும் காத்துக்கொள்ளுங்கள் (ரோ 9:2)

18. பரிசுத்த ஆவிக்கு எதிர்த்து நிற்காதீர்கள் (அப் 7:51)

19. சாத்தானுக்குச் செவிகொடுத்து பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லாதீர்கள் (அப் 5:3)

20. கெட்ட வார்த்தையினாலும் தூஷணத்தினாலும் பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள் (எபே 4:29-31)

21. அவரது ஆறுதலளிக்கும் ஊழியத்தை மறந்து கலகம்பண்ணி பரிசுத்த ஆவியை விசனப்படுத்தாதீர்கள் (ஏசா 63:9,10)

22. ஆவியை அவித்துப்போடாதிருங்கள் (1 தெச 5:19)



23. ஆவியானவருக்கு விரோதமாய்ப் பேசாதிருங்கள் (மத் 12:31,32)

24. ஆவியானவரின் விளங்காத செயல்களைக் கண்டனம்பண்ணி விடாதிருங்கள். (மத் 1:20; அப் 2:12)

25. ஆவியினாலே போதிக்கப்பட்டிருங்கள் (யோ 14:26; 1 கொரி 2:10-14)

26. உங்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட தேவனுடைய ஆரோக்கியமான வசனங்களைப் பரிசுத்த ஆவியினாலே காத்துக்கொள்ளுங்கள் (2 தீமோ 1:14)

27. இயேசுவுக்காய்ச் சாட்சி சொல்லும்போது பரிசுத்த ஆவியின் வல்ல மையைச் சார்ந்துகொள்ளுங்கள் (அப் 1:8; 4:31)

28. பரிசுத்த ஆவி உங்கள் வாழ்க்கையில் அற்புதங்களை நடப்பிக்க எதிர்பாருங்கள் (மத் 1:18; லூக் 1:34,35)

29. மக்களுக்கு நன்மைசெய்து, ஆவியின் வல்லமையினால் அவர் களைப் பிசாசின் பிடியிலிருந்து விடுவியுங்கள் (அப் 10:38)

30. ஆவிக்குரிய வரங்களைக் குறித்து அறியாமையிலிராமல் அவற்றை விரும்பி நாடுங்கள் (1 கொரி 12:1; 14:1)

31. ஊழியத்தில் தீர்மானங்களை எடுக்க ஆவியின் சத்தத்தைக் கவனித்திருங்கள் (அப் 13:2; 15:28; 16:6)

32. உங்கள் சாட்சிக்காய்க் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்படும்போது பரிசுத்த ஆவியானவர் வார்த்தைகளை அருள அவரை முழுவது மாய்ச் சார்ந்திருங்கள் (மாற் 13:11; அப் 4:8)

33. துன்பப்படும்போது ஆவியின் நிறைவை நாடுங்கள் (அப் 7:54,55; 13:51,52)

34. சபையில் ஊழியங்கள், ஆளுகைகள் யாவும் பரிசுத்த ஆவியினா லேயே என்பதை மறந்துவிடாதிருங்கள் (அப் 20:28)

35. ஆவியின் அனுகூலத்தினாலே எல்லா வேலைகளிலும் ஞானமும் நற்சாட்சியும் விளங்க நடந்துகொள்ளுங்கள் (அப் 6:3 )

36. ஆவியினாலே ஜெபியுங்கள் (யூதா 20: 1 கொரி 14:15; ரோ 8:26-28)

37. பிதாவைத் தைரியமாய் அணுகச் செய்யும் புத்திர சுவிகார ஆவியின் சாட்சியில் மகிழுங்கள் (ரோ 8:15-17)

38. எதிரிக்கு விரோதமாய் ஆவியின் பட்டயத்தைக் கையாளுங்கள் (எபே 6:17)

39. ஆவியான வார்த்தைகளினாலும் ஜெபங்களினாலும் பிறருக்குப் பரிசுத்த ஆவியைப் பகிர்ந்தளியுங்கள் (லூக் 1:41; அப் 8:15)

40. கிறிஸ்துவை மகிமைப்படுத்தி ஆவியானவரோடு சேர்ந்து கொண்டு, ''கர்த்தராகிய இயேசுவே வாரும்'' எனக் கூப்பிடுங்கள்! (யோ 16: 13,14; வெளி 22:20)



# 21

# ஆவியானவர் எப்போது துக்கப்படுகிறார்?

1. நாம் நமது உடலைப் பாவத்திற்குக் கொடுக்கும்போது ...
   ஏனெனில், அவர் பரிசுத்தத்தின் ஆவியானவர்!
   (1 கொரி 3:16,17; 6:19,20; சங் 51:11; ரோ 1:4)

2. நாம் உலகத்தோடு நெருங்கிய சிநேகங்கொள்ளும்போது ...
   ஏனெனில், அவர் வைராக்கிய வாஞ்சையின் ஆவியானவர்!
   (யாக் 4:4,5)

3. நாம் சந்தேகத்திற்கும் அவிசுவாசத்திற்கும் இடங்கொடுக்கும்போது...
   ஏனெனில், அவர் விசுவாசத்தின் ஆவியானவர்!
   (2 கொரி 4:13; ரோ 15:13)

4. நாம் நிறரை நேசிக்கத் தவறும்போது ...
   ஏனெனில், அவர் அன்பின் ஆவியானவர்!
   (எபே 4:2,3,26-32; கலா 5:22; ரோ 5:5; 15:30)

5. நாம் ஜெபத்தில் தன்னலமாயிருக்கும்போது ...
   ஏனெனில், அவர் மன்றாட்டின் ஆவியானவர்!
   (ரோ 8:26,27)

6. நாம் வேத வசனங்களுக்குக் கீழ்ப்படியாதிருக்கும்போது ...
   ஏனெனில், அவர் சத்திய ஆவியானவர்!
   (யோ 16:13)

7. நாம் வேதத்தை நமது விருப்பம்போல் வியாக்கியானப்படுத்தும் போது ...
   ஏனெனில், அவர் போதிக்கிற ஆவியானவர்!
   (1 கொரி 2:10-14)

8. நாம் நமது சொந்த புத்தியின்மீது சாரும்போது ...
   ஏனெனில், அவர் ஞானத்தின் ஆவியானவர்!
   (ஏசா 11:2; 1 கொரி 12:8)

9. நாம் தேவ நடத்துதலை நாடாதிருக்கும்போது ...
ஏனெனில், அவர் ஆலோசனையின் ஆவியானவர்!
(ஏசா 11:2; ரோ 8:14)

10. நாம் எழுதப்பட்ட/சொல்லப்பட்ட தீர்க்தரிசனங்களை அற்பமாய் எண்ணும்போது ...
ஏனெனில், அவர் தீர்க்கதரிசன ஆவியானவர்!
(2 பேது 1:19-21; 1 தெச 5:19-22; வெளி 2:29)

11. நாம் ணிரும்ப பயாயப்நிரமாணத்ணிற்குப் போய்விடும்போது ...
ஏனெனில், அவர் புது உடன்படிக்கையின் ஆவியானவர்!
(2 கொரி 3:1-18)

12. நாம் நமது சொந்த பலத்தில் சாரும்போது ...
ஏனெனில், அவர் வல்லமையின் ஆவியானவர்!
(சக 4:6; லூக் 24:49; 1 கொரி 2:3,4)

13. நாம் கிறிஸ்துவுக்குச் சாட்சிபகரத் தவறும்போது ...
ஏனெனில், அவர் கிறிஸ்துவின் ஆவியானவர்!
(1 பேது 1:10-12; வெளி 1:9,10)

14. நாம் பிதாவானவரின் இரக்கங்களை மறக்கும்போது ...
ஏனெனில், அவர் பிதாவின் ஆவியானவர் !
(ஏசா 63:8-10; யோ 14:16)

15. நாம் பாடுகளின் வேளையில் முறுமுறுக்கும்போது ...
ஏனெனில், அவர் மகிமையின் ஆவியானவர் !
(1 பேது 4:12-16)



# 22
# அந்நிய பாஷையில் பேசுதல்

## இதைப்பற்றி வேதம் கூறுவது யாது?

### *1. இது பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனமாய்க் கூறப் பட்டுள்ளது.*

ஏசாயா 28:11, ''பரியாச உதடுகளினாலும் அந்நிய பாஷையினாலும் இந்த ஜனத்தோடே பேசுவார்.'' பவுல் அப்போஸ்தலன், அந்நிய பாஷையையும், தீர்க்கதரிசனத்தையும் பற்றிக் கூறும் அத்தியாயத் தில் இத்தீர்க்கதரிசனத்தைக் குறிப்பிடுகிறான் (1 கொரி 14:21).

### *2. இது இயேசு கிறிஸ்துவினால் முன்னறிவிக்கப்பட்டது.*

மாற்கு 16:17, ''விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங் களாவன: என் நாமத்தினாலே ... நவமான பாஷைகளைப் பேசு வார்கள்.''

### *3. இது ஆதிச்சபையிலுள்ள கிறிஸ்தவர்களின் வழக்கமான அனுபவம்.*

அ) பேதுருவும், யாக்கோபும், யோவானும், அந்திரேயாவும், பிலிப் பும், தோமாவும், பர்த்தொலொமேயுவும், மத்தேயுவும், அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபும், செலோத்தே என்னப்பட்ட சீமோனும், யாக்கோபின் சகோதரனாகிய யூதாவும், இயேசுவின் தாயாகிய மரி யாளும், அவருடைய சகோதரரும், மற்றும் பலரும், பரிசுத்த ஆவி யினால் நிரப்பப்பட்டபோது அந்நிய பாஷையில் பேசினார்கள். அவர்களெல்லாரும் ஏறக்குறைய 120 பேராயிருந்தார்கள் (அப் 1:13,14; 2:4).

ஆ) பவுல் அப்போஸ்தலன் பரிசுத்த ஆவியின் உதவியினால் அந்நிய பாஷையில் பேசினான் (அப் 9:17; 1 கொரி 14:18).

இ) இத்தாலியா பட்டாளத்து நூற்றுக்கதிபதியாகிய கொர்நெலி யுவும், அவனது இனத்தாரும், அவனது நெருங்கிய நண்பரும், ஒரு

சுவிசேஷக் கூட்டத்தில்தானே பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மேல் இறங்கியபோது அந்நிய பாஷையில் பேசினார்கள் (அப் 10:1,24, 44-46).

ஈ) எபேசுவிலுள்ள 12 சீடர்மேல் பரிசுத்த ஆவி வந்தபோது அவர்கள் அந்நிய பாஷையில் பேசினார்கள் (அப் 19:1,6,7).

## 4. இது இன்று நமக்கு ஓர் ஆசீர்வாதமான அனுபவம்.

அ) இது துதியையும், தொழுகையையும் மேம்படுத்துகிறது. 120 சீடரும் மேலறையில் அந்நிய பாஷையில் பேசியபோது, தேவனுடைய மகத்துவங்களையே பேசினார்கள் (அப் 2:11). ''நான் ஆவியோடும் பாடுவேன் ... நீ ஆவியோடு ஸ்தோத்திரம் பண்ணும் போது ... நீ நன்றாய் ஸ்தோத்திரம் பண்ணுகிறாய்'' (1 கொரி 14:15-17).

ஆ) இது ஜெபத்தை ஆழப்படுத்துகிறது.

''அந்நிய பாஷையில் பேசுகிறவன் ,.. மனிதனிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான்'' (1 கொரி 14:2).

''நான் அந்நிய பாஷையிலே விண்ணப்பம்பண்ணினால், என் ஆவி விண்ணப்பம் பண்ணும் ... நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன்'' (1 கொரி 14:14,15).

அந்நிய பாஷையில் ஜெபிக்கும்போது நமது அறிவின் வரம்பையும் கடந்து செல்லுகிறோம்.

இ) இது நமது சொந்த பக்திவிருத்திக்காய்க் கிடைத்த பெரிய ஈவு.

''அந்நிய பாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்; ... உங்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பாஷைகளைப் பேசுகிறேன்.'' (தனிமையில் பேசினான் என்பது சொல்லாமலே விளங்கும்) (1 கொரி 14:4,18).

ஈ) இது நம்மைப் புத்துணர்வுடன் வைத்துக்கொள்கிறது.



அந்நிய பாஷையைக் குறித்து ஏசாயா 28:11,12இல், ''இதுவே நீங்கள் இளைத்தவனை இளைப்பாறப்பண்ணத்தக்க இளைப்பாறுதல் (rest), இதுவே ஆறுதல் (refreshing)'' என்று விளக்கம் தருகிறது.

தாவீதின் முன்னடையாள அனுபவமாக இது அப் 2:25,26இல் கூறப்பட்டுள்ளது.

உ) இது ஊழியத்தில் அற்புதப் பயனுள்ளது.

(i) அந்நிய பாஷையைக் கேட்கும் அவிசுவாசிகளுக்கு இது ஓர் அடையாளம்.

''அந்நிய பாஷைகள் அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கின்றன'' (1 கொரி 14:22).

(ii) அர்த்தம் சொல்லக்கூடுமானால் விசுவாசிகளுக்குப் பக்தி விருத்திக்கான ஓர் ஏது.

''அந்நிய பாஷையில் பேசுகிறவன் அதின் அர்த்தத்தையும் சொல்லத்தக்கதாய் விண்ணப்பம் பண்ணக்கடவன் ... சபைக்குப் பக்தி விருத்தி உண்டாகும்படிக்கு ...'' (1 கொரி 14:1,3,5). கிறிஸ்துவின் உடலாகிய சபையில் எல்லாருக்கும் ஆசீர்வாதமாக அளிக்கப்பட்டிருக்கும் ஆவியின் 9 வகை வெளிப்பாடுகளில் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வியாக்கியானம் பண்ணுதலும் அடங்கியுள்ளன (1 கொரி 12:7-10).

## *5. இதின் துர்ப்பிரயோகம் தவிர்க்கப்பட சில ஒழுங்குமுறைகள் கையாளப்படவேண்டும்.*

அ) அந்நிய பாஷையும், அர்த்தம் சொல்லுதலும்

''யாராவது அந்நிய பாஷையிலே பேசுகிறதுண்டானால், அது இரண்டு பேர் மட்டில், அல்லது மிஞ்சினால் மூன்று பேர் மட்டில் அடங்கவும், அவர்கள் ஒவ்வொருவராய்ப் பேசவும், ஒருவன் அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும். அர்த்தம் சொல்லுகிறவனில்லாவிட்டால், சபையிலே பேசாமல், தனக்கும் தேவனுக்கும் தெரியப் பேசக்கடவன்'' (1 கொரி 14:27,28).

ஆ) அந்நிய பாஷையும் ஒழுங்கும்

''சகோதரரே, தீர்க்கதரிசனஞ்சொல்ல நாடுங்கள், அந்நிய பாஷைகளைப் பேசுகிறதற்கும் தடைபண்ணாதிருங்கள். சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது ... தேவன் கலகத்திற்குத் தேவனாயிராமல், சமாதானத்திற்குத் தேவனாயிருக்கிறார். பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லாவற்றிலேயும் அப்படியே இருக்கிறது'' (1 கொரி 14:39,40,33).

இ) அந்நிய பாஷையும் அன்பும்

''நான் மனிதர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன்'' (1 கொரி 13:1).

### *6. இது கிறிஸ்து திரும்ப வரும்வரை செயல்பட நியமிக்கப்பட்டுள்ளது.*

''தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம். நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனம் சொல்லுதலும் குறைவுள்ளது. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்'' (1 கொரி 13:8-10).

கிறிஸ்துவின் வருகையின்போது நாம் நிறைவடைந்து பூரணப்படுகிறோம்.

''அவர் வெளிப்படும்போது ... அவருக்கு ஒப்பாயிருப்போம்'' (1 யோ 3:2).

## 23

# சபை அன்றும் இன்றும் !

| | *அன்றையச் சபை* | *இன்றையச் சபை* |
|---|---|---|
| 1. | விசுவாஞிகளுக்கு மட்டும் திருமுழுக்கு. | விளையாட்டுப் பிள்ளை களுக்கும் வெறுந்தெளிப்பு. |
| 2. | தேவனிடமிருந்து வரும் பலமே ஊழியத்திற்கு அடிப்படைத் தேவை. | வேதக்கல்லூரி தரும் பட்டமே அடிப்படைத் தகுதி. |
| 3. | ஜெபம், உபவாசம், இவை மூலமே தலைவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர். | பிரச்சாரம், லஞ்சம், இவை மூலமே பிரமுகர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். |
| 4. | உதவிக்காரர்கூட ஆவியினால் நிறைந்திருக்க வேண்டிய திருந்தது. | சில மேய்ப்பர்கள் ஆவியினால் பிறக்கக்கூட இல்லை. |
| 5. | ஜெபத்தையும் வசன ஊழியத் தையும் அப்போஸ்தலர் விடமாட்டோம் என்றனர். | நிர்வாகத்தையும் பிற விவகாரங்க ளையும் ஆயர்களும் பிரசங்கிக ளும் விடமாட்டோம் என்கின்றனர். |
| 6. | அவர்களுக்குப் பொன்னும் வெள்ளியுமில்லை, மகிமை இருந்தது. | நமக்குப் பொன்னும் வெள்ளியும் உண்டு, மகிமை இல்லை. |
| 7. | பணம் அப்போஸ்தலரின் பாதத்திலிருந்தது. | பணம் மேய்ப்பரின் பாக்கெட்டிலிருக்கிறது. |
| 8. | அவர்கள் தங்களது சொந்த உடைமைகளைப் பங்கிட்டுக் கொண்டனர். | நாமோ சபையின் சொத்துக் களைப் பதுக்கிக்கொள்ளு கிறோம். |
| 9. | மாய்மாலம் உடனே தண்டிக்கப்பட்டது. | பீடத்திலும் கூடத்திலும் மாய்மாலம் உல்லாசமாய்த் தாண்டவமாடுகிறது. |
| 10. | அவர்கள் உலகத்திற்குச் சாட்சியாயிருந்தனர். | நாமோ உலகத்தைக் காட்சி கண்டுகொண்டிருக்கிறோம். |
| 11. | அவர்கள் உலகைத் தலைகீழாய் மாற்றினர். | நாமோ உலகத்தை மேலும் கீழுமாய்ச் சுற்றுகிறோம். |
| 12. | துன்புறுத்தப்பட்டபோது தேவனிடம் முறையிட்டனர் | தொந்தரவு வந்ததும் போலிசாரிடம் விரைகிறோம். |
| 13. | ஈஸ்டர் செய்தியை எங்கும் சொல்ல விரைந்தனர். | கிறிஸ்துமஸ் பண்டிகையில் எல் லாம் செவழித்து வீணடிக்கிறோம். |
| 14. | அற்புதங்களே அவர்கள் செய்திக்கு நிரூபணம்; அன்று தெருக்களில் ''நடபடிகள்.'' | பத்திரிகைகளே நமது கூட்டங் களுக்கு விளம்பரம்; இன்று மேடைகளில் நடிப்புகள். |
| 15. | அவர்களுக்குப் பட்டமில்லை, அங்கியில்லை; ஆனால் பிசாசுகளை விரட்டினர். | நமக்குப் பட்டமுண்டு, அங்கி ஆனால் பிசாசுகள் நம்மை விரட்டுகின்றன. |
| 16. | உசிதமான ஊழியரை மிஷனரிப் பணிக்கு அனுப்பிவிட்டனர். | உதவாக்கரைகளையே அனுப்ப ஆயத்தம். |
| 17. | கட்டிடங்கள் இல்லை; எனவே சபை முன்னோக்கி நடந்துகொண்டே இருந்தது. | கட்டிடங்கள் ஏராளம்; சபை எங்கும் நகர மறுக்கிறது. |
| 18. | அவர்கள் பெருகிக் கொண்டே போனார்கள். | நாமோ பிரிந்துகொண்டே இருக்கிறோம். |
| 19. | விசுவாசிகள் அனைவரும் ஆத்துமாதாயகராய் இருந்தனர். நற்செய்திப்பணியே அவர்கள் இதயத் துடிப்பு. | மேய்ப்பர்தான் எல்லாம்! சபையில் ஒருவர் நற்செய்திப் பணியில் தீவிரம் காட்டிவிட்டால் மேய்ப்பனின் இதயம் வேகமாய் அடிக்கிறது. |
| 20. | பூமியின் கடைசிவரை செல்ல எருசலேமை விட்டனர்; எல்லா வற்றையும் செலவழித்தனர். | எப்படியாவது எருசலேமைப் போய்ப் பார்த்து வர எல்லா வற்றையும் சேமிக்கிறோம். |

**''வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்து மாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்''** (எரே 6:16)



## 24

# அப்போஸ்தலர் நடபடிகளில் வல்லமை

1 : 8 ... வல்லமைக்கு வாக்குத்தத்தம்
2 : 8 ... பேசுவதற்கு வல்லமை
3 : 8 ... துதிப்பதற்கு வல்லமை
4 : 8 ... பதில் கொடுக்க வல்லமை
5 : 8 ... அறிந்துகொள்ள வல்லமை
6 : 8 ... அற்புதங்களுக்கு வல்லமை
7 : 8 ... பிரசங்கிக்க வல்லமை
8 : 8 ... ஆனந்திக்க வல்லமை
9 : 8 ... எதிர்ப்புக்கெதிரான வல்லமை
10 : 8 ... கீழ்ப்படிய வல்லமை
11 : 8 ... தரிசனத்திற்கு வல்லமை
12 : 8 ... விடுதலைக்கு வல்லமை
13 : 8 ... வித்தைக்கெதிரான வல்லமை
14 : 8 ... முடியாதவற்றிற்கு வல்லமை
15 : 8 ... விசுவாசத்திற்கு வல்லமை
16 : 8 ... முன்செல்ல வல்லமை
17 : 8 ... கிளர்ச்சிக்கு வல்லமை
18 : 8 ... மனமாறுதலுக்கு வல்லமை
19 : 8 ... புத்திசொல்ல வல்லமை
20 : 8 ... ஐக்கியத்திற்கு வல்லமை
21 : 8 ... சுவிசேஷப்பணிக்கு வல்லமை
22 : 8 ... சாட்சிபகர வல்லமை
23 : 8 ... உயிர்த்தெழுதலுக்கு வல்லமை
24 : 8 ... பழிப்புக்கெணிரான வல்லமை
25 : 8 ... குற்றமின்மைக்கு வல்லமை
26 : 8 ... நம்பிக்கைக்கு வல்லமை
27 : 8 ... பாதுகாப்புக்கு வல்லமை
28 : 8 ... குணமாக்க வல்லமை

# 25
# நிறைவு! நிறைவு! நிறைவு!

நாமனைவரும் கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலும் நிறைவுள்ளவர்களாய் இருக்கவேண்டுமென்பதே நம்மைக் குறித்த தேவ சித்தமாகும். இதோ, பிலிப்பியர் நிருபத்தில் மட்டும் எத்தனை நிறைவுகளைக் குறித்து வாசிக்கிறோம் பாருங்கள்!

1. நான் பண்ணுகிற ''ஒவ்வொரு'' விண்ணப்பத்திலும் ... (1:4)
2. உங்கள் ''அனைவருக்காகவும்'' சந்தோஷத்தோடே விண்ணப்பம் பண்ணி ... (1:4)
3. ''எப்பொழுதும்'' ... முதல் நாள் முதல் இதுவரைக்கும் ... இயேசு கிறிஸ்துவின் நாள்வரை ... (1:3-5)
4. நான் உங்களை நினைக்கிற ''பொழுதெல்லாம்'' என் தேவனை ஸ்தோத்ததிக்கிறேன். (1:6)
5. ''எல்லா'' நிலையிலும் — என் கட்டுகளிலும், நான் சுவிசேஷத்திற்காய் உத்தரவு சொல்லி அதைத் திடப்படுத்தி வருகிறதிலும் (1:7)
6. உங்கள் அன்பானது ''எல்லா'' உணர்விலும் இன்னும் அதிகமதிகமாய்ப் பெருகவும் ... (1:9)
7. அரண்மனை ''எங்கும்'' உள்ளவர்களுக்கும் மற்ற ''யாவருக்கும்'' (1:13)
8. ''எப்படியாவது'' கிறிஸ்து அறிவிக்கப்படுகிறார். (1:18)
9. நான் ''ஒன்றிலும்'' வெட்கப்பட்டுப் போகாமல் ... (1:20)
10. ''எப்பொழுதும்'' போல இப்பொழுதும் ... ஜீவனாலாகிலும், சாவினாலாகிலும் ... (1:20)
11. நீங்கள் ''ஒன்றிலும்'' மருளாதிருக்கிறீர்களென்று உங்களைக் குறித்து நான் கேள்விப்படும்படி ... (1:28)
12. ''ஒன்றையும்'' வாதினாலாவது வீண் பெருமையினாலாவது செய்யாமல் ... (2:3)



13. இயேசுவின் நாமத்தில் முழங்கால் ''யாவும்'' முடங்கும் (2:10)
14. இயேசுவே கர்த்தரென்று நாவுகள் ''யாவும்'' அறிக்கைபண்ணும் (2:11)
15. நீங்கள் ''எப்பொழுதும்'' கீழ்ப்படிகிறபடியே ... (2:12)
16. ''எல்லாவற்றைஜிம்'' முறுமுறுப்நில்லாமலும், தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள் (2:16)
17. மற்றவர்கள் ''எல்லாரும்'' தங்களுக்குரியவைகளையே தேடுகிறார்கள் (2:21)
18. என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுஷிக்காக ... ''எல்லாவற்றையும்'' நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன் (3:8)
19. ''எப்படியாயினும்'' நான் உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கு ... (3:10)
20. ''எந்தக்'' காரியத்திலாவது நீங்கள் வேறே சிந்தையாயிருந்தால் தேவன் வெளிப்படுத்துவார் (3:15)
21. கர்த்தருக்குள் ''எப்பொழுதும்'' சந்தோஷமாயிருங்கள். (4:4)
22. உங்கள் சாந்தகுணம் ''எல்லா'' மனிதருக்கும் தெரிந்திருப்பதாக (4:5)
23. நீங்கள் ''ஒன்றுக்கும்'' கவலைப்படாமல் ... (4:6)
24. ''எல்லாவற்றையும்'' குறித்து ... ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் ... (4:6)
25. ''எல்லாப்'' புத்திக்கும் மேலான தேவ சமாதானம். (4:7)
26. உண்மையுள்ளவைகள் ''எவைகளெல்லாமோ'' (whatever) (4:8)
27. ஒழுக்கமுள்ளவைகள் ''எவைகளெல்லாமோ'' (4:8)
28. நீதியுள்ளவைகள் ''எவைகளெல்லாமோ'' (4:8)
29. கற்புள்ளவைகள் ''எவைகளெல்லாமோ'' (4:8)
30. அன்புள்ளவைகள் ''எவைகளெல்லாமோ'' (4:8)
31. நற்கீர்த்ணிஜிள்ளவைகள் ''எவைகளெல்லாமோ'' (4:8)

32. நான் ''எந்த'' நிலைமையிலிருந்தாலும் ... ''எல்லாவற்றிலும்'' மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன். (4:11,12)

33. ''எவ்விடத்திலும்'' ... பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன் (4:12)

34. கிறிஸ்துவினாலே ''எல்லாவற்றையும்'' செய்ய எனக்குப் பலமுண்டு, (4:13)

35. ''எல்லாம்'' எனக்குக் கிடைத்தது. (4:18)

36. என் தேவன் உங்கள் குறைவை ''எல்லாம்'' நிறைவாக்குவார். (4:19)

37. தேவனானவருக்கு '''என்றென்றைக்கும்'' மகிமைஜிண்டாவதாக. (4:20)

38. பரிசுத்தவான்கள் ''யாவருக்கும்'' வாழ்த்துதல் சொல்லுங்கள். (4:21)

39. பரிசுத்தவான்கள் ''அனைவரும்'' வாழ்த்துதல் சொல்லுகிறார்கள். (4:22)

40. கிறிஸ்துவினுடைய கிருபை உங்கள் ''அனைவரோடும்'' இருப்பதாக! (4:23)



# 26

# சபையில் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டும்?

❒ சபை என்பது ஒரு **குடும்பம்** (எபே 3:15; 4:6)

எனவே நாம் ஒருவரோடொருவர் நம்பிக்கையோடும், மதிப்போடும், ஒத்துழைப்போடும் வாழவேண்டும்.

❒ சபை என்பது ஒரு **ஐக்கியம்** (அப் 2:42-45; 1 யோ 1:3)

எனவே நாம் சிலாக்கியங்களையும் நன்மைகளையும் மற்றவர்களோடு பகிர்ந்துகொண்டு, இடுக்கண்களிலும் துக்கங்களிலும் ஒருவரையொருவர் தாங்க வேண்டும்.

❒ சபை என்பது ஓர் **உடல்** (1 கொரி 12:12,27; எபே 4:16)

எனவே நாம் தன்னலமின்றி ஒருவரையொருவர் கவகித்து, பலங்குன்றியவருக்குக் கருணையோடும் கரிசனையோடும் உதவவேண்டும்.

❒ சபை என்பது ஒரு **கட்டிடம்** (எபே 2:19-22; 1 கொரி 3:9)

எனவே நாம் தேவன் நம்மை வைத்துள்ள இடத்தில் மகிழ்வோடும் பணிவோடும் தரித்திருந்து, நம்மைக் குறித்து மேன்மை பாராட்டாமலும் எவரையும் அசட்டை பண்ணாமலும் இருக்கவேண்டும்.

❒ சபை என்பது ஒரு **பாடசாலை** (எபே 3:18,19; 4:11-14)

எனவே நாம் பக்திவிருத்திக்காகவும், படித்துக்கொள்ளவும், பரிசுத்தவான்கள் கிரமமாய்க் கூடிவருவதை அசட்டை செய்யாதிருக்கவேண்டும்.

❒ சபை என்பது ஒரு **மந்தை** (1 பேது 2:25; 5:25)

எனவே நாம் சுயாதீனமாய் இராமல் நமது ஆத்துமாக்களின் பிரதான மேய்ப்பரைப் பின்பற்றி எல்லாவற்றையும் சகச் சார்புடனும் கூட்டு முயற்சியுடனும் செய்யவேண்டும்.

❒ சபை என்பது ஓர் **இல்லம்** (1 தீமோ 3:15; எபி 3:6)

எனவே நாம் அங்கு வசிப்போர் ஓய்வெடுத்துப் புத்துணர்வடையும்படி அதைக் கிறிஸ்துவை அறிகிற அறிவின் வாசனையால் நிரப்பவேண்டும்.

❒ சபை என்பது ஒரு **பண்ணை** (1 கொரி 3:9; எபி 6:7-12)

எனவே நாம் ஆவியின் அருள்மாரியை அதிகமதிக மாய்க் கேட்டுப் பெற்றனுபவித்து, பிரதிபலனாக ஏராளம் கனிகளைக் கொடுக்கவேண்டும்.

❒ சபை என்பது ஒரு **படை** (எபே 6:12; 2 கொரி 10:3-6)

எனவே நாம் எதிரியின் தாக்குதலுக்கெதிராக எப்பொழுதும் விழிப்பாயிருந்து மக்களைப் பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்க தைரியத்தோடும் ஒற்றுமையோடும் முன்செல்லவேண்டும்.

❒ சபை என்பது ஒரு **விளக்கு** (மத் 5:14-16; பிலி 2:14-16)

எனவே நாம் உலகத்தாருக்கு முன்பாக எடுத்துக் காட்டாக வாழ்ந்து, உலகின் ஒளியாகிய இயேசுவைப் பற்றி இடையறாது சாட்சி பகர்ந்து இருளை அகற்ற வேண்டும்.



## 27
# சபை மேய்ப்பருக்குத் தற்பரிசோதனை

1. ஜெப வாழ்வில் ஒழுங்குள்ளவனாய் இருக்கிறேனா?
(அப் 3:1; லூக் 5:15,16)
2. வேதத் தியானத்தில் கிரமமானவனாய் இருக்கிறேனா?
(எஸ்றா 7:10; லூக் 4:16,17)
3. சிந்தையில் பரிசுத்தமுள்ளவனாய் இருக்கிறேனா?
(நீதி 4:23; மத் 15:18,19)
4. எனது வார்த்தையில் கவனமுள்ளவனாய் இருக்கிறேனா?
(யாக் 3:1,2; எபே 5:4)
5. சாப்பிடுவதில் தன்னடக்கமுள்ளவனாய் இருக்கிறேனா?
(நீதி 23:1,2; 1 கொரி 6:12,13)
6. எளிய வாழ்க்கையில் திருப்தியுள்ளவனாய் இருக்கிறேனா?
(1 தீமோ 6:6-8; பிலி 4:11-13)
7. எனது மனைவிக்கு உண்மையுள்ளவனாய் இருக்கிறேனா?
(1 தீமோ 3:2அ; ரோ 2:22அ)
8. தகப்பனது கடமைகளை பறைவேற்றுகிறவனாய் ஹிருக்கிறேனா?
(1 தீமோ 3:4,5; உபா 6:6,7)
9. அரசின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்தவனாய் இருக்கிறேனா?
(மத் 17:25-27; ரோ 13;1-7)
10. பணக்காரியங்களில் ஒளிவுமறைவில்லாதவனாய் இருக்கிறேனா?
(2 கொரி 9:20-22; அப் 20:33,34)
11. எனது மந்தையை நேசிக்கிறவனாய் இருக்கிறேனா?
(2 கொரி 12:15; 1 கொரி 13:1,2)
12. விசுவாசிகளைப் பயிற்றுவிக்க அர்ப்பணித்தவனாய் இருக்கிறேனா?
(லூக் 11:1,2; எபே 4:11-13)
13. எளியோரிடம் பரிவுடன் நடக்கிறவனாய் இருக்கிறேனா?
(கலா 2:9,10; அப் 20:35)

14. பட்சபாதம் இல்லாதவனாய் இருக்கிறேனா?
(1 கொரி 5:21; 2 நாளா 19:5-9)

15. இனவெறி, இடவெறி போன்றவற்றிற்கு மரித்தவனாய் இருக் கிறேனா? (கொலோ 3:9-11; வெளி 7:9,10)

16. நற்செய்தியறிவிப்பு, மிஷனரி ஊழியங்களில் உற்சாகமுள்ளவனாய் இருக்கிறேனா? (யோ 10:16; மத் 9:36-38)

17. நடந்தவைகளை அறிவிப்பதில் மிகைப்படுத்தாதவனாய் இருக் கிறேனா? (ரோ 15:18; மாற் 6:5)

18. பிறர்க்குக் கணக்கொப்புவிக்க வேண்டியவனாய் இருக்கிறேனா?
(2 கொரி 8:18,19,22-24; அப் 15:22)

19. திருத்தப்படுவதற்கு ஆயத்தமுள்ளவனாய் இருக்கிறேனா?
(கலா 2:11-14; நிர 4:13)

20. விரோதமாய்ப் பேசப்படும்போது அமைதியுள்ளவனாய் இருக் கிறேனா? (1 பேது 2:21-23; மத் 5:11,12)

21. பிறரது பெயர் புகழை மதிக்கிறவனாய் இருக்கிறேனா?
(நீதி 17:9; 2 சாமு 1:19,20)

22. எனது உடன் ஊழியருக்கு நண்பனாய் இருக்கிறேனா?
(யோ 15:15; அப் 20:17, 36-38)

23. மற்ற ஊழியங்களோடு ஒத்துழைக்கிறவனாய் இருக்கிறேனா?
( லூக் 5:5-7; கலா 2:7-9)

24. கடின உழைப்பாளியாய் இருக்கிறேனா?
(1 கொரி 15:10,58; யோ 9:4,5)

25. சுய மறுப்பை அப்பியாசிக்கிறவனாய் இருக்கிறேனா?
( லூக் 9:23; யோ 3:30)



# 28

# ஊழியருக்குப் பத்துக் கட்டளைகள்

**1**

உன்னை ஊழியத்திற்குப் புறப்படப்பண்ணின
உன் தேவனாகிய கர்த்தர் நானே.
என்னையன்றி உனக்கு வேறே
ஆண்டவன்மார் உண்டாயிருக்கவேண்டாம்.

**2**

நீ உனக்குப் பேர் புகழ் உண்டாக்க வேண்டாம்.
நீ பொருளாசையை நமஸ்கரிக்கவும் உலகுக்கடுத்தவற்றைச்
சேவிக்கவும் வேண்டாம்.

**3**

உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைப் பிரசங்கத்திலோ
உரையாடலிலோ வீணிலே வழங்காதிருப்பாயாக;
கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத்
தண்டியாமல் விடார்.

**4**

ஓய்வெடுக்கவேண்டிய நாளை ஓய்வுக்காய் ஆசரிக்க நினைப்பாயாக;
ஆறு நாளும் நீ வேலைசெய்து,
உன் ஊழியங்களையெல்லாம் நடப்பிப்பாயாக;
அடுத்த நாளோ ஓய்ந்திருக்கவேண்டிய நாள்.
உன் குமாரன், குமாரத்தி, குடும்பத்தோடு செலவழிக்க வேண்டிய
அந்த நாளில் நீ ஊழியத்திற்கென வெளியே போகவேண்டாம்.
கர்த்தர் ஆறு நாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும்
சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும்
உண்டாக்கும் ஊழியத்தை முடித்துப் பின் ஓய்ந்திருந்தார்.

**5**

உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே
உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு
உன்னை ஊழியத்திற்குக் கொடுத்துவிட்ட
உன் தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவாயாக.

**6**

கர்த்தருடைய ஊழியர் எவரையும்
உன் நாவினாலோ, பேனாவினாலோ கொலை செய்யாதிருப்பாயாக.

**7**

பார்வையிலோ, சிந்தையிலோ, செயலிலோ
விபசாரம் செய்யாதிருப்பாயாக.

**8**

அடுத்த ஊழியனின் ஆடுகளையோ அவனுக்குரிய மதிப்பையோ
களவு செய்யாதிருப்பாயாக.

**9**

உனது ஊழியத்தைக் குறித்துப்
பொய்யான அறிக்கை கொடாதிருப்பாயாக.

**10**

பிறனுடைய ஊழியத்தை இச்சியாதிருப்பாயாக;
பிறனுடைய சொத்தையும், அவனுடைய புகழையும்,
அவனுடைய ஊழியரையும், பின்னும் பிறனுக்குள்ள
யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக.



# 29
# திருவசனத்தை எப்படிப் பிரசங்கிக்கவேண்டும்?

1. திருவசமானது ஓர் **அக்கினி!** (எரே 5:14;20:9)

   அதை எரிக்கும் ஓர் அவசர உணர்வோடும் தீவிரக் கவனத்தோடும் பிரசங்கிக்க வேண்டும்.
   கேட்கிறவர்கள் விறகைப்போல் தேவனுக்காய் எரிய வேண்டும்.

2. திருவசனமானது ஒரு **சம்மட்டி!** (எரே 23:29)

   அதை ஓங்கி அடித்துப் பிரசங்கிக்க வேண்டும்.
   கேட்கிறவர்களின் இருதயங்கள் எவ்வளவு கடினமாயிருந்தாலும் பரிசுத்த கன்மலைக்குமுன் நொறுக்கப்பட வேண்டும்.

3. திருவசனமானது ஒரு **பட்டயம்!** (எபே 6:17; எபி 4:12)

   அதைத் தைரியமாகவும் நேரடியாகவும் பிரசங்கிக்க வேண்டும்.
   கேட்கிறவர்கள் கடவுளின் வெளிப்படுத்தும் பார்வைக்கு முன் உருவக் குத்தப்படவேண்டும்.

4. திருவசனமானது ஒரு **கண்ணாடி!** (யாக் 1:22,23)

   அதைத் தீர்க்கத்தரிசனத் தெளிவோடு பிரசங்கிக்க வேண்டும்.
   கேட்கிறவர்கள் தங்கள் உள்ளான நிலையை உணர்ந்து எல்லாவித மாய்மாலத்தையும் ஒழித்துக்கட்ட வேண்டும்.

5. திருவசனமான ஒரு **விதை!** (லூக் 8:11)

   அதைக் கண்ணீரோடும் எதிர்பார்ப்போடும் பிரசங்கிக்க வேண்டும்.
   கேட்கிறவர்கள் அதைத் தங்கள் இருதயங் களில் மறைத்து வைத்துக் கனி கொடுக்க வேண்டும்.

6. திருவசனமானது **பனி!** (உபா 32:2; எபே 5:26)

அதைக் கனிவோடும் மனதுருக்கத்தோடும் பிரசங்கிக்க வேண்டும்.
கேட்கிறவர்கள் கழுவப்பட்டு, புத்துணர்வடைந்து ஆறுதல் பெறவேண்டும்.

7. திருவசனமானது **பால்!** (1 பேது 2:2)

அதைக் கலப்படமின்றி நிறைவாய்ப் பிரசங்கிக்க வேண்டும்.
கேட்கிறவர்கள் சமநிலையாய் வளர்ந்தோங்கவேண்டும்.

8. திருவசனமானது **ஆவி!** (யோ 6:63)

அதைப் பிரசங்கிப்போர் உற்சாகமாய்த் தங்களையே பிரசங்கத்தில் ஊற்றிப் பிரசங்கிக்க வேண்டும்.
கேட்கிறவர்கள் புத்துயிர் பெற்றுச் செயல்படச் சவால்பெற வேண்டும்.

9. திருவசனமானது **தேன்!** (சங் 119:103)

அதைப் பக்திவிருத்தியற்ற வார்த்தைகளின்றி மகிழ்வுடன் பிரசங்கிக்க வேண்டும்.
கேட்கிறவர்கள் அதை நன்கு ருசித்து தங்கள் நடக்கையில் இனியவர்களாகவேண்டும்.

10. திருவசனமானது ஒரு **ஜீளக்கு!** (சங் 119:105)

அதை வெளிப்பாட்டுடனும் தகுந்தாற்போலவும் பிரசங்கிக்க வேண்டும்.
கேட்கிறவர்கள் தங்கள் வாழ்க்கைக்கு வழிநடத்துதல் பெற வேண்டும்.

**''என் வாயிலிருந்து புறப்படும் என் வார்த்தை**
**வெறுமையாய் என்னிடம் திரும்பாது''**
**என்று கர்த்தர் சொல்லுகிறார்!**
**(ஏசா 55:11)**



# 30
# திருவசனம் நம்மைத் திருத்தட்டும்!

வேத வாக்கியங்களை நாம் வெறுமனே ஆராய்ந்து பார்த்துவிட்டு, வேத வாக்கியங்கள் நம்மை ஆராய்ந்து பார்க்க விடாவிட்டால் பெருமையும் வஞ்சகமும்தான் விளைவாகும். வேதத்தின் ஒவ்வொரு புத்தகத்திலிருந்தும் ஒன்றென, இங்கே 66 தற்பரிசோதனைக் கேள்விகள் தொகுக்கப்பட்டுள்ளன. ''ஆம்'' என்ற பதில் பாவத்தைக் குறிக்கும். இப்பொழுதே இரத்தத்தாலும் ஆவியானவராலும் முற்றிலும் கழுவப்படுவோம்.

1. இச்சையான விருப்பங்களுக்கு இணங்கிவிடுகிறேனா? (ஆதி 6:3)
2. தேவன் திரும்பத் திரும்ப எச்சரித்தும் என் இருதயத்தைக் கடினப்படுத்துகிறேனா? (யாத் 10:3)
3. எனது தனி மற்றும் குடும்ப ஜெபப் பலிபீடத்தின் அக்கினி அவிந்துகொண்டிருக்கிறதா? (லேவி 6:12,13)
4. தேவ ஊழியர் எவரையாவது புறங்கூறியிருக்கிறேனா? (எண் 12:1-9)
5. வேதத்தைத் தியானிப்பதில் ஒழுங்கீனமாயிருக்கிறேனா? (உபா 4:8; 30:11-16)
6. சபையிலோ ஐக்கியத்திலோ ஏதாவது இடையூறு உண்டாக்கியிருக்கிறேனா? (யோசு 7:24,25)
7. பரிசுத்தமற்ற தொடர்புகளை அறுத்தெறியத் தயங்குகிறேனா? (நியா 16:4,19,20)
8. எனது உடன்படிக்கை அல்லது அர்ப்பணிப்பில் பின்திரும்பியிருக்கிறேனா? (ரூத் 1:14-17)
9. எனது பிள்ளைகளைக் கண்டிப்புடன் வளர்க்கத் தவறுகிறேனா? (1 சாமு 2:29; 3:13)
10. இன்னொருவருடைய மனைவி அல்லது கணவனை இச்சிக்கிறேனா? (2 சாமு 11:2-4, 27)
11. எனது மனைவி அல்லது கணவனைப் பிரியப்படுத்தவேண்டுமென்று ஏதாவதொன்றில் ஆண்டவரைத் துக்கப்படுத்துகிறேனா? (1 இரா 21:25)

12. அழியும் ஆத்துமாக்களுக்குப் பதிலாக பணத்திற்குப் பின் செல்லு கிறேனா? (2 இரா 5:26)

13. கர்த்தருடைய வல்லமைக்குப் பதிலாக மனித பலத்தில் சார்ந்திருக் கிறேனா? (1 நாளா 21:1-8)

14. தேவனுக்காய் ஏதோவொன்றைச் சாதித்துவிட்டதால் பெருமை யடித்துக்கொள்ளுகிறோனா? (2 நாளா 6:18)

15. எழுப்புதலுக்காய் ஜெபிக்கும்போது எனது சொந்த மனந்திரும்பு தலைக் குறித்து அக்கறையற்றிருக்கிறேனா? (எஸ்றா 10:1)

16. பயமுறுத்தல்கள், எதிர்ப்புகளினால் எண்ணில் சோர்ந்துபோகி றேனா? (நெகே 4:14; 6:9,11)

17. நாட்டிற்குச் சேவை செய்வதற்கு எனது சுயநலக் கண்ணோட்டம் தடையாயிருக்கிறதா? (எஸ்தர் 4:13-16)

18. எனது பாடுகளிலும் இழப்புகளிலும் தேவனைத் துதிக்கத் தவறு கிறேனா? (யோபு 1:20-22; 2:9,10)

19. ஆராதனையில் உற்சாகம் இழந்திருக்கிறேனா? (சங் 122:1)

20. இரகசியங்களை வெளிப்படுத்தி மக்களைப் பாழாக்குகிறேனா? (நீதி 11:13)

21. பரிசுத்தவான்களின் ஐக்கியத்தை அலட்சியம் பண்ணுகிறேனா? (பிர 4:9-12)

22. எனது வாழ்க்கைத் துணையின் பாலுணர்வுத் தேவைகளைத் திருப்தி செய்யத் தவறுகிறேனா? (உன் 2:7; 3:5; 8:4)

23. துதிந்து பாவம் செய்து சிலுவையை அவமதிக்கிறேனா? (ஏசா 53:1,4,5)

24. தேவ வல்லமையை மட்டுப்படுத்துகிறேனா? (எரே 32:27)

25. மனந்திரும்புவதற்குப் பதிலாக, எனது பாவங்களுக்கான தண்ட னையைக் குறித்து முறையிடுகிறேனா? (புல 3:39-41)

26. தாமதிக்கிறது என்பதால் தேவ வாக்குகளைச் சந்தேகிக்கிறேனா? (எசேக் 12:21-25)

27. நான் வேலை செய்யுமிடத்தில் உண்மையும் நேர்மையுமின்றி இருக்கிறேனா? (தானி 6:3-5)



28. நிளீத்தெடுக்கப்பட்ட வாழ்க்கை ஹில்லாணிருக்கிறேனா? (ஓஞி 7:8,9)

29. உபவாச ஜெபத்தை அசட்டை செய்கிறேனா? (யோவேல் 1:12-16)

30. அவணிப்படும் சகோதர சகோதளீகளைக் குறித்துக் கவலைழீன்றிச் சுகபோகமாய் வாழ்கிறேனா? (ஆமோ 6:1,3-6)

31. என்வீடத்ணில் பெருமைஜிண்டா? (ஓப 3:4)

32. தேவனுக்குக் கீழ்ப்படியத் தவறியதற்குச் சாக்குப் போக்குகள் சொல்லுகிறேனா? (யோனா 1:1-3; 4:2)

33. தேவனுக்குக் கொடுக்க வேண்டிய ஹிடத்தை குடும்பத்ணிற்கோ நண்பர்களுக்கோ கொடுக்கிறேனா? (மீகா 7:5-7)

34. ஆத்துமாதாயத்திலும் நற்செய்திப்பணியிலும் ஏனோதானோ வென்று இருக்கிறேனா? (நாகூம் 1:15)

35. எனது வேலையையும் வியாபாரத்தையும்தான் தொழுதுகொள்ளு கிறேனா? (ஆப 1:15,16)

36. திருத்தங்களை ஏற்றுக்கொள்ள மறுக்கிறேனா? (செப் 3:1,2)

37. தேவனுடைய ஊழியத்தை நிறைவேற்றக் காலந்தாழ்த்துகிறேனா? (ஆகாய் 1:2-5)

38. எனது நண்பர்களைக் காட்டிக் கொடுத்திருக்கிறேனா? ஏமாற்றி யிருக்கிறேனா? (சக 13:6)

39. மீந்தவைகளைத்தான் கர்த்தருக்குக் கொடுக்கிறேனா? (மல் 1:7,8,12-14)

40. யாரோடாவது ஒப்புரவாக வேண்டியதைத் தள்ளிப்போடுகிறேனா? (மத் 5:23,24)

41. எனது பாவத்தைச் சுட்டிக்காட்டிய யார் மீதும் கோபமாயிருக் கிறேனா? (மாற் 6:17-19)

42. வேலையோ, ஊழியமோ அதிகமென்று ஜெபத்தைக் குறைத்திருக் கிறேனா? (லூக் 5:15,16)

43. பணக்காரியங்களில் உண்மையில்லாதிருக்கிறேனா? (யோ 12:6)

44. எனது பிரதான அழைப்பிலிருந்து சற்று விலகியிருக்கிறேனா? (அப் 6:1-4)

45. அரசை ஏமாற்றி, அதற்குக் கீழ்ப்படியாமலிருக்கிறேனா? (ரோ 13:1-7)

46. எந்தப் பிரசங்கியாரையும் கதாநாயகனாக வணங்குகிறேனா? (1 கொரி 3:1-7)

47. எனது வரங்களையும், சாதனைகளையும் குறித்து மேன்மை பாராட்டுகிறேனா? (2 கொரி 12:1,6,7)

48. விழுந்துபோனவர்களிடம் கடுமையாயிருக்கிறேனா? (கலா 6:1)

49. ஆபாசக் கேலிச் சிரிப்புகளில் ஈடுபடுகிறேனா? (எபே 5:4)

50. பிறரைவிட என்னை மேலாகக் கருதுகிறேனா? (பிலி 2:3)

51. எனது பெற்றோருக்குக் கீழ்ப்படியாதிருக்கிறேனா? (கொலோ 3:20)

52. ஆவியானவரின் வரங்களை அலட்சியம் பண்ணுகிறேனா? (1 தெச 5:19,20)

53. பிறர் காரியங்களில் தேவையின்றித் தலையிடுகிறேனா? (2 தெச 3:11)

54. வேலை, ஊழியம் என்று குடும்பத்தைப் போதுமான அளவு கவனிக்கத் தவறுகிறேனா? (1 தீமோ 3:4,5)

55. அரட்டையடிக்கிறேனா, கோள் சொல்லுகிறேனா? (2 தீமோ 3:3)

56. என்னிடம் பிரிவு மனப்பான்மை உண்டா? (தீத் 3:10,11)

57. பிறரைத் திரும்பக் கட்டியெழுப்புவதில் ஈடுபாடு கொள்ளத் தயங்குகிறேனா? (பிலே 15-18)

58. விசுவாசத்தில் துதிந்து செயல்படத் தயங்குகிறேனா? (எபி 11:8)

59. எளியவரைவிடப் பணக்காரரை அதிகம் மதிக்கிறேனா? (யாக் 2:1-4)

60. எனது கணவனுக்குக் கீழ்ப்படியாமலிருக்கிறேனா; எனது மனைவியை மதியாதிருக்கிறேனா? (1 பேது 3:5-7)



61. கிறிஸ்தவப் பண்புகளில் வளருவதைக் குறித்துக் கவலையீனமாயிருக்கிறேனா? (2 பேது 1:5-9)

62. எந்தச் சகோதரன், சகோதரியையாவது வெறுக்கிறேனா? (1 யோ 3:15)

63. துர்வுபதேசத்தைப் பிரசங்கிக்கும் ஊழியரைத் தாங்குகிறேனா? (2 யோ 10,11)

64. முதன்மையை விரும்புகிறேனா? (3 யோ 9,10)

65. தலைவர்களுக்கு எதிராய் முரட்டாட்டம் பண்ணுகிறேனா? (யூதா 11)

66. நேரத்தை வீணடிக்கிறேனா? (வெளி 22:10,20)

# 31
# இயேசு விடும் மிஷனசிச் சவால்!

☛ நிலம் **உலகம்.**

☛ ஜீதை தேவனுடைய **வசனம்.**

☛ தேவனுடைய ராஜ்யம் ஒரு கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கிறது; அது **பூமியில் விதைக்கப்படும்போது** பூமியிலுள்ள சகல விதைகளிலும் சிறியதாயிருக்கிறது; விதைக்கப்பட்ட பின்போ, அது வளர்ந்து, சகல பூண்டுகளிலும் பெரிதாகி ஆகாயத்துப் பறவைகள் அதனுடைய நிழலின் கீழ் வந்தடையத்தக்க பெரிய கிளைகளை விடும்.

☛ இதோ, வயல் பலங்கள் **இப்பொழுதே அறுப்புக்கு** விளைந்திருக்கின்றனவென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள். அறுக்கிறவன் கூலியை வாங்கி நித்திய ஜீவனுக்காய்ப் பலனைச் சேர்த்துக்கொள்ளுகிறான்.

☛ நீங்கள் ... சும்மா நிற்கிறதென்ன? நீங்களும் திராட்சத்தோட்டத்துக்குப் **போங்கள்.**

☛ தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனைத் தந்தருஹீ, இவ்வளவாய் **உலகத்தில்** அன்புகூர்ந்தார்.

☛ நான் மக்களுக்காய்ப் **பரிதபிக்கிறேன்.**

☛ என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கி **வந்தேன்.**

☛ கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் **சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி** என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் **குணமாக்கவும்,** சிறைப்பட்டவர்களுக்கு **விடுதலையையும்,** குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொருங்குண்டவர்களை



விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும் என்னை அனுப்பினார். பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய வேலைகளைச் செய்யவேண்டும்; ஒருவனும் வேலை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது.

☛ அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆகையால் எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை **வேண்டிக்கொள்ளுங்கள்.** புறப்பட்டுப் **போங்கள்;** ... இதோ, நான் உங்களை அனுப்புகிறேன்.

☛ உங்களை மனிதரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்.

☛ விபச்சாரமும் பாவமுமுள்ள இந்தச் சந்ததியில் என்னைக் குறித்தும் என் வார்த்தைகளைக் குறித்தும் எவன் வெட்கப்படுவானோ, அவனைக்குறித்து மனுக்குமாரனும் தமது பிதாவின் மகிமை பொருந்தினவராய் பரிசுத்த தூதர்களோடுங்கூட வரும்போது வெட்கப்படுவார்.

☛ நீ உன் **இனத்தாரிடத்தில்** உன் வீட்டிற்குப்போய் ... அவர்களுக்கு அறிவி.

☛ நீங்கள் **வழிச்சந்திகளில்** போங்கள்.

☛ உங்களுக்கு எதிரே இருக்கிற **கிராமத்துக்குப்** போங்கள்.

☛ நீ பயப்படாமல் **பேசு,** மவுனமாயிராதே; நான் உன்னுடனேகூட இருக்கிறேன், உனக்குத் தீங்கு செய்யும்படி ஒருவனும் உன்மேல் கை போடுவதில்லை.

☛ நீங்கள் **உலகமெங்கும்** போய், **சர்வசிருஷ்டிக்கும்** சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்஽ிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.

☛ இராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல மக்களினங்களுக்கும் சாட்சியாய்ப் பிரசங்கிக்கப்படும், அப்பொழுது முடிவு வரும்.

32

# உங்களுக்கு அக்கறையில்லையா ?

**அஞ்ஞான திரள் கூட்டம் கேட்கிறது ...**

நாங்கள் இருளில் மடிகிறோம். கடவுளைக் கண்டடைவது எப்படி என்று எங்களுக்குத் தெரியாது. நாங்கள் கடவுளைச் சந்திக்கப் பயப்படுவதால், மரணத்திற்கும் பயப்படுகிறோம். பாவமும் மூட நம்பிக்கையும் எங்களை அரசாளுகின்றன. எங்களுக்கு வழி காட்டுவோர் யாருமிலர். இதைக்குறித்து உங்களுக்கு அக்கறை யில்லையா?

**மிஷனரிகள் கேட்கிறார்கள் ...**

நாங்கள் மிகவும் பலங்குன்றி, களைப்புற்று, சோர்புறும் அநேக வேளைகளில் எங்களுக்காய் நாங்கள் ஜெபிக்கக்கூட முடிவ தில்லை. நீங்கள் எங்களுக்காய்ப் போராடி ஜெபிக்கிறீர்களா? சுவிசேஷ ஊழியத்திற்குப் போதுமான துணைக்கருவிகள் எங்களிடம் இல்லை. இந்தப் பகுதிகளில் எங்கள் குழந்தை களுக்குப் பால்கூட கிடைப்பதில்லை. காட்டு மிருகங்களுட னும், விஷப்பூச்சிகள் நடுவிலும் நாங்கள் வசிக்கிறோம். கிறிஸ்துவுக்காகவே நாங்கள் இங்கே இருக்கிறோம். இதைக் குறித்து உங்களுக்குக் அக்கறையில்லையா?

**மனந்திரும்பிய ஆதிவாசிகள் கேட்கிறார்கள் ...**

கிறிஸ்துவைப் பின்பற்றும்படி எங்கள் குலதெய்வங்களை நாங்கள் விட்டுவிட்டபடியால், எங்கள் சமுதாயம் எங்களைத் தள்ளி ஒதுக்கிவிட்டது. எங்களைக் கேலி செய்து, துன்பப்படுத்து கிறார்கள். எங்கள் கிராமத்திலுள்ள கிணற்றிலிருந்துகூட தண்ணீர் எடுக்க எங்களை விடமாட்டோம் என்கிறார்கள். நாங்கள் கூடி ஆராதிக்க எங்களுக்கு தொழுகைக்கூடம் இல்லை. நாங்கள் மிகவும் நெருக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டிருக்கிறோம். இதைக் குறித்து உங்களுக்கு அக்கறையில்லையா?



**ஆத்தும ஆதாயம் செய்யும் வாலிபர்கள் கேட்கிறார்கள் ...**

அழிந்துகொண்டிருக்கிறவர்களுக்கு சுவிசேஷத்தைக் கொடுக்க சந்திக்கப்படாத இடங்களுக்கு நாங்கள் செல்லுகிறோம். ஆனால் எங்களிடம் போதுமான நற்செய்திப் பிரதிகளும், தேவையான துணைக்கருவிகளும், ஏற்ற வாகனங்களும், போதிய பண வசதி யும் இல்லாததால் திருப்தியான முறையில் எங்களால் ஊடுருவிச் செல்ல முடியவில்லை. நிமிடத்திற்கு 1,20,000 மக்கள் இந்த உலகத்தை விட்டு நித்தியத்திற்குள் சென்றுகொண்டிருக்கிறார் கள் என்பதை அறிந்த நாங்கள் ஒரு நிமிடத்தைக்கூட வீணடிக்க விரும்பவில்லை. இதைக்குறித்து உங்களுக்கு அக்கறை யில்லையா?

**கிறிஸ்து ,யேசு கேட்கிறார் ...**

அனைத்துலகத்தின் பாவத்திற்காகவும் நான் பாடுபட்டு மரித் தேன் உனக்காக மட்டுமல்ல, இந்த உலகத்திலுள்ள ஒவ்வொரு வருக்காகவும் நான் மரித்தேன். பாவத்தின் அகோரத்தையும், தண்டனையையும் நான் வீணாய்ச் சகித்தேனோ? காரணமில் லாமல் நான் காயப்பட்டு நொறுக்கப்பட்டேனோ? நான் உங்க ளுக்குக் கொடுத்த இறுதி ஆணை சுவிசேஷத்தை எடுத்துக் கொண்டு உலகமெங்கும் போங்கள் என்பதே. நான் பரிசுத்த ஆவியானவரை உங்களிடத்தில் அனுப்பிய நோக்கத்தை மறந்து விட்டீர்களோ? மடிந்து மாளும் கோடிக்கணக்கானோருக்காய் என் இருதயம் ததும்பிக் கதறுகிறது. இதைக்குறித்து உங்களுக்கு அக்கறையில்லையா?

## 33
# ஆத்தும ஆதாயகன்

கிறிஸ்து முழுக்க முழுக்க ஆத்தும ஆதாயகராகவே இருந்தார். அப்படியே ஒவ்வொரு கிறிஸ்தவனும் இருக்கவேண்டும்.

ஆத்தும ஆதாயகனை வேதம் கீழ்க்கண்டவாறு சித்திரிக்கிறது —

1. பின்பற்றுபவன் (Follower)
2. மீனவன்ர (Fisherman)
3. பயிரிடுபவன் (Farmer)
4. படைவீரன் (Fighter)
5. தகப்பன், நண்பன் (Father, Friend)

### 1. பின்பற்றுபவன்

மத் 4:19 — புதிய ஏற்பாட்டில் ஆத்தும ஆதாயத்தைப் பற்றிய முதல் குறிப்பு:

''என் பின்னே வாருங்கள்''

பின்செல்பவனே சீடனாவான். (அடுத்த முறை அவர்கள் ''அவருடைய சீடர்கள்'' என அழைக்கப்படுகின்றனர். 5:1)

சீடத்துவத்தில் ஒழுங்கு, கிரமம், கட்டுப்பாடு ஆகியவை சேரும்.

(அ) ஜெபத்தில் ஒழுங்கு

| | |
|---|---|
| தாவீது | சங் 55:17 |
| தானியேல் | தாவீ 6:10 |
| சீடர்கள் | அப் 3:1 |

(ஆ) வேதத் தியானத்தில் ஒழுங்கு

| | |
|---|---|
| காலைத் தியானம் | யாத் 16:4 |
| கிரமமான ஆராய்ச்சி | 2 தீமோ 3:15-17 |
| மனனம் செய்தல் | சங் 119:11; கொலோ 3:16 |



(இ) காலம், கடமையில் ஒழுங்கு

| | |
|---|---|
| நேரத்தை வீணடிக்காதிருங்கள். | எபே 5:15-16 |
| சுறுசுறுப்பாயிருங்கள். | நீதி 5:6-11; 22:29 |
| ஒத்திப்போடாதிருங்கள் | நீதி 27:1; நிர 9:10 |

(ஈ) குடும்ப வாழ்வில் ஒழுங்கு

| | |
|---|---|
| மனைவி | எபே 5:28,29; 1 சாமு 1:8 |
| பிள்ளைகள் | எபே 6:4; யோபு 1:5 |
| பணக்காரியம் | ரோ 13:8; 1 தீமோ 6:6,8 |

(உ) பொது வாழ்வில் ஒழுங்கு

| | |
|---|---|
| ஆள் தோற்றம் | பிர 9:8 |
| பேச்சு, வார்த்தை | எபே 5:4; யாக் 3:2 |
| அரசாங்கம் | ரோ 13:1,7 |

### 2. மீனவன் (மத் 4:19)

(அ) பாவிகளைத் தேடி ''நீங்கள்'' செல்லவேண்டும்.

பாவிளைச் சந்திக்க இயேசு தாமே பரத்திலிருந்து இகம் வந்தார். 1 தீமோ 1:15; யோ 10:10

பாவிகள் இருக்கும் இடத்திலேயே இயேசு அவர்களைச் சந்தித்தார்.
யோ 4:8; 5:6; 9:1

தம்மைப் பின்பற்றுகிறவர்களை இயேசு புறப்பட்டுப் ''போகச்'' சொன்னார்,
மாற் 5:19; லூக்14:23; மத் 21:2; மாற் 16:15

(ஆ) பாவிகளோடு உங்களை இணைத்துக்கொள்ளப் பழகவேண்டும்.

இயேசு பிலி 2:6,7; எபி 2:14,15
பவுல் 1 கொரி 9:19-23
மிஷனரிகள் சிவகாசி ராக்லண்டு, நெல்லை வாக்கர்

(இ) திறமையில் வளருங்கள்.

வசனத்திலிருந்து புதிய படிப்பினைகளைக் கற்றுக்கொள் வதின் மூலம் லூக் 5:4-6

பிற மீனவர்களின் ஒத்துழைப்பை நாடுவதின் மூலம் லூக் 5:7,10

விசுவாசத்தால் குதிப்பதின் மூலம் மத் 14:28,29; 17:27

### 3. பயிரிடுபவன்

(அ) சாதகச் சூழ்நிலைகளுக்காய்க் காத்திராதேயுங்கள். பிர 11:1-6
(ஆ) பெருக விதையுங்கள் 2 கொரி 9:6

எத்தனை ஆத்துமாக்களோடு பேச முடியுமோ அத்தனை பேரோடு பேசுங்கள்; எவ்வளவு நற்செய்திப் பிரதிகளை வழங்கமுடியுமோ அவ்வளவு வழங்குங்கள்; இது போல.

(இ) சிறிதாய்த் தோன்றும் தொடர்புகள் அல்லது வாய்ப்புகளை அற்பமாய் எண்ணாதேயுங்கள். மத் 13:31,32

(ஈ) உங்கள் வசதிகளைத் தியாகம் செய்து, கண்ணீரோடு விதை யுங்கள். (கடின உழைப்பு இங்கு குறிப்பு) சங் 126:5,6

(உ) கிரமமாய்ப், பொருத்தமாய்ப் பின்தொடருங்கள்.

அப்பொல்லோ 1 கொரி 3:6
தோட்டக்காரன் லூக் 13:8

(ஊ) விழித்திருங்கள். மத் 13:24-25

(எ) பொறுமையாயிருங்கள். யாக் 5:7

வாளா அமர்ந்திருப்பதல்ல.
நம்பிக்கையுடன் எதிர்நோக்கியிருப்பது.

### 4. படைவீரன்

(அ) பரிசுத்த ஆவியின் வல்லமையினால் பிசாசின் பிடியிலிருந்து ஆத்துமாக்களைப் பிடுங்கிட உபவாசித்து ஜெபியுங்கள். மத் 17:21



(ஆ) நன்கு திட்டமிட்டுக் கிரமமாய் முன்செல்லுங்கள். 2 தீமோ 2:5; நீதி 20:18; ரோ 15:19

(இ) அச்சமில்லாது இருங்கள் 2 தீமோ 1:7,8; நியா 5:18

(ஈ) பாடுபட ஆயத்தமாயிருங்கள் 2 தீமோ 2:3; 4:5

(உ) ஆரோக்கியமான சுவிசேஷத்தைக் கொண்டு துர் உபதேசங்களை யும் வஞ்சகர்களையும் எதிர்த்திடுங்கள். 1 கொரி 15:32; யூதா 3

(ஊ) எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள் எபே 6:11,12,15

### 5. தகப்பன், நண்பன்

#### (i) தகப்பன்

(அ) உயரிய மாதிரியாயிருங்கள் 1 கொரி 4:15,16

(ஆ) தேவையான வேளையில் கண்டிப்பாயிருங்கள் 1 கொரி 4:15,21

(இ) செலவு பண்ணவும், செலவு பண்ணப்படவும் சந்தோஷமாய் விரும்புங்கள் 2 கொரி 12:14,15

#### (ii) நண்பன்

இயேசு பாவிகளுக்குச் சிநேகிதராய் இருந்தார் மத் 11:19

(அ) பாடுகள், உபத்திரவங்களின்போது கனிவுடனிருங்கள் சங் 35:13,14; நீதி 17:17; யோ 11:11,35
(ஆ) தாராளமாய் உரையாடுங்கள் யாத் 33:11
(இ) பகிரப்பட்ட இரகசியங்களைப் பத்திரமாய் வைத்திருங்கள் நீதி 20:19; 11-13

**''ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப் போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போலவும் என்றென்றைக்கு முள்ள சதா காலங்களிலும் பிரகாசிப்பார்கள்''**
**(தானி 12:3)**

## 34

# மிஷனரி பாக்கிய வசனங்கள்

ஆத்தும பாரமுடையோர் பாக்கியவான்கள்;
பரலோக இராஜ்யம் அவர்களுடையது!

அழியும் மாந்தருக்காய்க் கண்ணீர் சிந்துவோர் பாக்கியவான்கள்;
அவர்கள் அறுவடை நாளில் களிகூருவர்!

கீழ்ப்படிந்து செல்லுவோர் பாக்கியவான்கள்;
அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவர்!

தங்கள் பிள்ளைகளை மிஷனரி ஊழியத்திற்கு அர்ப்பணிப்போர்
பாக்கியவான்கள்;
அவர்கள் பலனடைவர்!

தாராளமாய்க் கொடுப்போர் பாக்கியவான்கள்;
அவர்கள் நித்தியத்தில் பன்மடங்காய்ப் பெறுவர்!

மிஷனரிச் சிந்தையுள்ள சபைகள் பாக்கியமுள்ளவை;
அவை தேவனது புன்னகையால் பொலிவு பெறும்!

தங்கள் ஜீவனைப் பணயம் வைப்போர் பாக்கியவான்கள்;
அவர்கள் தேவனது படைவீரர் என்னப்படுவர்!

துன்புறுத்தப்படுவோர் பாக்கியவான்கள்;
அவர்கள் கனம்பெறுவர்!

பெயர்க் கிறிஸ்தவர்கள் உங்களை அசட்டைசெய்து உங்கள்
மிஷனரிப் பணியைக் குறைகூறுவரானால் நீங்கள்
பாக்கியவான்களாயிருப்பீர்கள்; சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள்,
பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்.
உங்களுக்கு முன்னிருந்த மிஷனரிகளையும்
அப்படியே துன்பப்படுத்தினார்களே!



## 35

# நான் ஒரு மிஷனரிக் கிறிஸ்தவன்தானா?

*மிஷனரிப் பணியில் ஈடுபாடு கொள்வது விருப்பு வெறுப்பைப் பொறுத்ததல்ல, அது ஒவ்வொரு கிறிஸ்தவனின் தலையாய கடமையாகும். தொலைந்துபோனோரைக் கிறிஸ்துவுக்காய்ச் சந்திக்கும் பணியில் நமது பங்கை நாம் நிறைவேற்றுகிறோமா என்று சீர்தூக்கிப் பார்க்க இதோ பத்து கேள்விகள் —*

1. இன்னும் சுவிசேஷத்தினால் சந்திக்கப்படாதோருக்காய் தினமும் ஜெபிக்கும்படி குறிப்பிட்டதொரு நேரத்தைப் பிரித்துவைத்திருக் கிறேனா? (1 தீமோ 2:1,4)

2. மிஷனரி இயக்கப் பத்திரிகைகளில் வெளிவரும் களச் செய்திகளை யும் ஜெபக் குறிப்புகளையும் கருத்தோடும் கரிசனையோடும் வாசிக்கிறேனா? உலகமெங்கும் பல்வேறு துன்பங்களில் அவதி யுறுவோரைப்பற்றிச் செய்தித்தாள்களில் வரும் தகவல்கள் என்னை அசைக்கின்றனவா? (நெகே 1:2,3)

3. உள்ளூர்க் கிறிஸ்தவரோடு சேர்ந்து திறந்தவெளிப் பிரசங்கத் திற்கும், கைப்பிரதி வினியோகத்திற்கும், கிராம ஊழியத்திற்கும் செல்ல சோம்பலையும் தடைகளையும் மேற்கொள்ளுகிறேனா? (பிர 11:4-6)

4. நோயுற்றோர், துன்பத்திலிருப்போர் மற்றும் சிறையிலிருப்போரைக் கடவுளின் அன்பின் செய்தியால் ஆற்றித்தேற்றுவதற்கான வாய்ப்பு களைத் தீவிரமாய்ப் பயன்படுத்துகிறேனா? (மத் 25:31-46)

5. எனது அயலகத்திலும் வேலைத்தலத்திலும் எனது வாழ்க்கையின் மூலமாகவும் எனது வார்த்தையின் மூலமாகவும் கிறிஸ்துவுக்காய்ச் சாட்சிபகர தைரியங்கொண்டிருக்கிறேனா? (மாற் 8:34-38)

6. முன்னோடி மிஷனரிப்பணி, வேதாகம மொழிபெயர்ப்புத் திட்டங் கள், மற்றும் வாலிபர், போதை மருந்துக்கு அடிமையானோர், எய்ட்ஸ் நோயுற்றோர் போன்றோருக்கான சிறப்பு ஊழியங்களுக் காய்த் தாராளமாய்க் காணிக்கை கொடுக்கிறேனா? (லூக் 8:1-3)

7. ஏழைகளுக்கு உதவவும், சிலாக்கியமற்றோர் மற்றும் கவனிக்கப் படாதோரைத் தாங்குவதற்குச் செய்யப்படும் மருத்துவ ஊழியங்கள், நிவாரணப்பணிகள் போன்றவற்றிற்காகவும் எனது சொத்திலிருந்தும் சம்பாத்தியத்திலிருந்தும் கணிசமானதொரு பங்கைப் பிரித்து வைக்கிறேனா? (லூக் 19:8; அப் 10:2)

8. மிஷனரி ஜெபக் கூடுகைகளில் தவறாது பங்கு பெறுகிறேனா? தனி ஜெபத்திலும் குடும்ப ஜெபங்களிலும் சுயநலமற்றிருக் கிறேனா? (அப் 12:5; 16:13)

9. முன்னோடி மிஷனரிப் பணியின் பிரச்னைகளையும் சவால்களையும் நேரடியாய்த் தெரிந்துகொள்ள முடிந்த வேளைகளிலெல்லாம் குழுக்களோடு சேர்ந்து மிஷனரிப் பணிக்களங்களுக்குச் செல்லு கிறேனா? (நெகே 2:12-18; யோ 4:35)

10. கடஷிஹீன் லீஷனளீ அழைப்நிற்கு எனது வாழ்க்கையை ஒப்புக்கொடுக் கிறேனா? எனது நிள்ளைகஹீல் ஒருவரையாவது லீஷனளீப் பதிக்குச் செல்லும்படி ஏஜீ உற்சாகப்படுத்துகிறேனா? ( அப் 26:19,20; 1 சாமு 1:27,28 )



36

# மிஷனரிகளுக்குத் தடுப்பு ஜெபம்

*வருமுன் காப்பது மேல்! மிஷனரிப்பணியில் பொதுவாக இப்பழமொழியைக் கடைப்பிடிப்பதில்லை. மிஷனரிகள் பலவிதப் பிரச்னைகளில் சிக்கித் தவிக்கும்போதுதான் அவர்களது விடுதலைக்காய் ஜெபிக்கத் துவங்குகிறோம். தடுப்பு ஜெபம் அதைவிட மேலானதல்லவா? மிஷனரிகள் அடிப்படையாகத் தடுக்கப்படவேண்டிய ஐந்து காரியங்கள் இதோ —*

### *அசுத்தம் தடுப்பு* (Defilement)

அவர்களது சாட்சியைக் கெடுக்க சத்துருவின் அம்புகள் மிஷனரிகளைக் குறிவைக்கின்றன. தனிவாழ்வில் பரிசுத்தமிழப்பு ஊழியத்தை உருக் குலையச் செய்யும். மறுபாலரோடுள்ள உறவுகளில் அதிகக் கவனம் தேவை.

### *வியாதி தடுப்பு* (Diseases)

மாறுபட்ட தட்பவெப்ப பலை, சுகாதாரக் குறைவு, சமநிலை உணவின்மை, ஓய்வில்லா அலைச்சல், இதுபோன்ற காரணங்களால் பெரும்பாலான மிஷனரிகள் ஆரோக்கியமிழக்கின்றனர். உடல் பாதிப்பினால் ஊழியனது வேகம் குறைவது பிசாசுக்குப் பேரானந்தம்.

### *சோர்பு தடுப்பு* (Depressions)

பிள்ளைகள் மற்றும் இனத்தாரைவிட்டுத் தூரம் செல்லுதல், பிள்ளைகளின் பிரச்னைகள், ஊழியத்தில் கனியின்மை, கனிவிரக்கமற்ற தலைவர்கள், பண நெருக்கடி, ஆன்மீக ஐக்கியமும் ஆகாரமும் கிடையாமை, இது போன்றவை மிஷனரியைச் சோர்புக்குள் நடத்துகின்றன. உற்சாக ஆவியில்லாத ஊழியம் எப்படியிருக்கும்?

### *பிரிவினை தடுப்பு* (Divisions)

ஊழியரிடையே உறவுப் பிரச்னைகளில்லாத பணித்தளங்களைக் காண்பதரிது. ஒருமனமும் குழுச்சிந்தையும் குலைந்துவிட்டால் ஊழியத்தில்

ஆசீர்வாதமிருக்காது. சிந்தையிலும், சொல்லிலும், செயலிலும் மிஷனரி கள் ஒன்றித்துக் கர்த்தரை மகிமைப்படுத்த இடைவிடா ஜெபம் தேவை.

### *ஆபத்து தடுப்பு (Dangers)*

விபத்துக்கள், விஷக்கடி, தொற்றுநோய் போன்றவற்றால் மிஷனரிகள் மரிக்கிறார்கள். மாற்கு 16:18 போன்ற வாக்குகளை அவர்களுக்காகத் தினமும் உரிமைபாராட்டவேண்டும். வெளியூர் ஊழியங்களுக்குச் செல்லும்போது சிலவேளைகளில் அவர்களது வீடுகள் சூறையாடப்படு கின்றன. இவை தவிர்த்து சுவிசேஷத்தின் விரோதிகளால் உண்டாகும் பயமுறுத்தல்களும் உண்டு.

தினமும் மேற்குறிப்பிட்ட ஐந்து காரியங்களை மனதில் வைத்து ஜெபியுங்கள். முழங்கால்களிலேயே பணிக்களம் செல்ல உங்களுக்கு இது ஒரு வாய்ப்பு!



# 37
# கிறிஸ்துமஸ் தியானங்கள்

**பயப்படாதிருங்கள்!**

☺ யோசேப்பு (மத் 1:19-21)
— உனது குழப்பங்கள் தெளியும்.

☺ சகரியா (லூக் 1:13)
— உனது ஜெபம் கேட்கப்பட்டது.

☺ மரியாள் (லூக் 1:30)
— உனது தாழ்வி நினைக்கப்பட்டது.

☺ மேய்ப்பர்கள் (லூக் 2:10)
— உங்களுக்கு இரட்சகர் அருளப்பட்டுள்ளார்.

**யோசேப்பு**

| | |
|---|---|
| நீதிமான் | (மத் 1:19) |
| இரக்கமுள்ளவன் | (மத் 1:19) |
| கீழ்ப்படிதலுள்ளவன் | (மத் 1:24) |
| தன்னடக்கமுள்ளவன் | (மத் 1:25) |
| தேவ நடத்துதலுள்ளவன் | (மத் 2:13,14,19-22) |
| உத்தமக் குடிமகன் | (லூக் 2:1-5) |
| வசன மார்க்கத்தான் | (லூக் 2:22-24,41) |

**தேவன்பு: ''தேவன் இவ்வளவாய் உலகில் அன்புகூர்ந்தார்'' (யோ 3:16)**

தேவன்பின் உயரம்:
''தமது ஒரே பேறான குமாரனைத் தந்தருளி''

தேவன்பின் அகலம்:
''விசுவாசிக்கிறவன் எவனோ''

தேவன்பின் ஆழம்:
''அவன் கெட்டுப்போகாமல்''

தேவன்பின் நீளம்:
''நித்திய ஜீவனை அடையும்படி''

### *மரியாளின் கீதம் (லூக் 1:46-55)*

- ☆ தேவன் என் ஆண்டவர் (வச 46)
- ☆ தேவன் என் ஹிரட்சகர் (வச 47)
- ☆ தேவன் என்னை உயர்த்துகிறவர் (வச 48,52)
- ☆ தேவன் என்னை ஆசீர்வணிக்கிறவர் (வச 48,49)
- ☆ தேவன் என்னைப் பளீசுத்தம்பண்ணுகிறவர் (வச 49)
- ☆ தேவன் எனக்கு உதஷிகிறவர் (வச 50,54)
- ☆ தேவன் என் ஹிராஜா (வச 51,52)
- ☆ தேவன் என்னைத் ணிருப்ணியாக்குகிறவர் (வச 53)
- ☆ தேவன் எனக்கு உடன்படிக்கை காக்கிறவர் (வச 55)

### *மரியாளை வணங்கக்கூடாது.*

- தூதன் மரியாளை வாழ்த்தினான்,
  வணங்கவில்லை (லூக் 1:28,29)
- எலிசபெத்து மரியாளை வாழ்த்தினாள்,
  வணங்கவில்லை (லூக் 1:42)
- மேய்ப்பர்கள் பாலகனுக்காய்த் தேவனைத் துதித்தார்கள்,
  மரியாளை வணங்கவில்லை (லூக் 2:17,20)
- ஞானிகள் பிள்ளையைத் தொழுதுகொண்டனர்,
  மரியாளை வணங்கவில்லை (மத் 2:11)

### *கூடாததை அனுபவிப்போம்!*

''தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை'' (லூக் 1:37)

இவ்வாக்கை அனுபவிப்பது எப்படி?

மரியாளிடமிருந்து படிப்பினைகள் —

- இயேசு கிறிஸ்துவின் ஆளுகையை ஏற்றுக்கொள்ளுங்கள்.
  (லூக் 1:38அ)
- தேவ வசனத்தின் அதிகாரத்திற்கு அடிபணியுங்கள்.
  (லூக் 1:38ஆ)
- பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
  (லூக் 1:35)



### *பக்தரே வாரும், தொழுதுகொள்ளுவோம்!*

- கிறிஸ்து எனும் இரட்சகர் (லூக் 2:11)
- கிறிஸ்து எனும் கர்த்தர் (லூக் 2:11)
- கிறிஸ்து எனும் இராஜா (லூக் 2:2,6)
- கிறிஸ்து எனும் இம்மானுவேல் (மத் 2:2,6)
- கிறிஸ்து எனும் மேய்ப்பர் (மத் 2:6)
- கிறிஸ்து எனும் பரிசுத்த குமாரன் (லூக் 1:35)
- கிறிஸ்து எனும் அருணோதயம் (லூக் 1:78)

### *நடத்துதல்*

- வசனத்தின் மூலம் (மத் 1:5,6)
- ஆவியின் மூலம் (லூக் 2:26,27)
- சூழ்நிலைகள் மூலம் (லூக் 2:1-4 மத் 2:22)
- சொப்பனங்கள் மூலம் (மத் 1:20; 2:12)
- அடையாளங்கள் மூலம் (லூக் 2:12; மத் 2:9)

### *கிறிஸ்துவை யாவருக்கும் பிரசங்கியுங்கள்!*

- ''எல்லா ஜனத்துக்கும் நற்செய்தி'' (லூக் 2:10)
- ''பூமியில் சமாதானம், மனிதர்மேல் பிரியம்'' (லூக் 2:14)
- ''சகல ஜனங்களுக்கும் இரட்சணியம்'' (லூக் 2:31,32)
- ''புறவினத்தாருக்கு ஒளி'' (லூக் 2:30)

### *கிறிஸ்துவை எப்படிச் சேஜீக்கவேண்டும்:*

- ❒ மிகுந்த பயபக்தியோடு
  அவரைத் தொழுதுகொள்ளுங்கள் (மத் 2:11அ)
- ❒ மிக அருமையானவற்றை
  அவருக்குக் கொடுங்கள் (மத் 2:11ஆ)
- ❒ மிகுந்த அவசரத்தோடு
  அவரை அறிவியுங்கள் (லூக் 2:15-18)

- ✞ தள்ளப்பட்ட இரட்சகர் (லூக் 2:11 / மத் 27:22)
- ✞ கேலிசெய்யப்பட்டட இராஜா (மத் 2:2 / மத் 27:37-44)
- ✞ பலியாக்கப்பட்ட குமாரன் (லூக் 1:35 / மாற் 15:34; ரோ 8:32)
- ✞ ஊடுருவப்பட்ட ஆத்துமா (லூக் 2:35 / யோ 19:25)
- ✞ வெட்டப்பட்ட மேய்ப்பன் (மத் 2:6 / மத் 26:31)



## 38
# அனுதினக் கிறிஸ்தவன்

கிறிஸ்துமஸ், புத்தாண்டு மற்றும் ஈஸ்டர் தினங்களுக்கு மட்டும் ஆலயம் செல்வோரைப் பண்டிகைக் கிறிஸ்தவர் என்றழைப்பர். ஒரு ஞாயிறு தவறாமல் ஆலயம் சென்றுவிட்டு வார நாட்களில் ஆண்ட வரையே சிந்திக்காதோரை ஞாயிறுக் கிறிஸ்தவர்கள் அல்லது ஆலயக் கிறிஸ்தவர்கள் எனக் குறிப்பிடுவர். தேவனோ நாம் தினந்தோறும் அவர் பாதையில் நடந்து அவரைச் சேவிக்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறார். கீழ்க்கண்ட கடமைகளை நாம் களிப்புடன் நிறைவேற்றினால் நாம் அனுதினக் கிறிஸ்தவராவோம்.

### *1. அனுதினத் தொழுகை*

> ''அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய்த் தேவாலயத்ணிலே அனுணினமும் தளீத்ணிருந்து... தேவனைத் துணித்து மக்களெல்லாளீடத்ணிலும் தயஷி பெற்றிருந்தார்கள்''
> (அப் 2:46,47)

### *2. அனுதினத் தியானம்*

> ''அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு ,.. தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தார்கள்'' (அப் 17:11)

### *3. அனுதின சாட்சி*

> ''இரட்ளிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார் ... சபைகள் விசுவா சத்தில் திடப்பட்டு நாளுக்குநாள் பெருகின''
> (அப் 2:47; 16:5)

### *4. அனுணின ஆகாரம்*
(அதற்கான விசுவாசம்)

> ''எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை அன்றன்று எங்க ளுக்குத் தாரும்'' (லூக் 6:13; 11:13)

### *5. அனுதினச் சிலுவை*

(சுயவெறுப்பு)

''இயேசு எல்லாரையும் நோக்கி: ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்'' (லூக் 9:23-26)

### *6. அனுதின மரணம்*

(நெருக்கம், நம்பிக்கையிழக்கச் செய்பவை)

''நான் அனுதினமும் சாகிறேன் ... கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?... மரணமானாலும் ஜீவனானாலும் ... கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவ அன்பை விட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக் கிறேன்'' (1 கொரி 15:31; ரோ 8:36-39)

### *7. அனுதினம் புத்திசொல்லுதல்*

''உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சகத்தினாலே கடினப்பட்டுப்போகாதபடி, இன்று என்னப்படுமளவும் நாள்தோறும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள்'' (எபி 3:12இ13)



# 39
# மலைப் பிரசங்க உடன்படிக்கை

**தேவனது வாக்குத்தத்தங்களும் (மத்தேயு 5:3-12)**
**எனது வாக்குறுதிகளும்**

***ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்;***
***பரலோக இராஜ்யம் அவர்களுடையது.***

1. எனக்கு உள்ளவைகளில் திருப்தியாய் இருப்பேன்; பணக்காரனாக முயற்சிக்க மாட்டேன் (யாக் 2:5).
2. தாழ்ந்த நிலையிலிருப்போரோடு சகவாசம் கொள்வேன்; எனக்கு மிஞ்சியதும் அகம்பாவமுமான சிந்தைகொள்ள மாட்டேன் (ரோ 12:16; சங் 131:1,2).
3. சிறு பிள்ளைகளை நேசித்துக் கண்ணியமாய் நடத்துவேன்; அவர்களுக்கு எவ்விதத்திலும் இடறலாயிருக்க மாட்டேன் (மத் 18:6,10; 19:14).

***துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்;***
***அவர்கள் ஆறுதலடைவார்கள்.***

4. பாடுபடும்போது என் இருதயத்தை ஆராய்ந்து பார்ப்பேன்; தேவனைக் கேள்விகேட்கவோ மனிதரைக் குற்றஞ் சாட்டவோ மாட்டேன் (புல 3:39-41).
5. வேதனையில் தவிப்போரோடு நானும் அழுவேன்; அவர்களுக்கு என்னை மறைத்துக்கொள்ள மாட்டேன் (யோபு 30:25; சங் 35:13,14,15).
6. எனது குறைபாடுகளை உணர்ந்து நொறுங்கிய உள்ளத்துடன் நடந்துகொள்வேன்;
திருத்தங்களை ஏற்றுக்கொள்ள மறுக்க மாட்டேன் (யாக் 4:8-10).

***சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்;***
***அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்.***

7. கர்த்தரே என் யுத்தங்களை நடத்த அவர்மீது நம்பிக்கையா யிருப்பேன்;
மாம்சீக முறைகளைக் கையாள மாட்டேன் (சங் 37:7-11).

8. அநியாயத்தையும் மோசமாய் நடத்தப்படுவதையும் பொறுத்துக்கொள்வேன்;
எனது உரிமைகளுக்காய்ப் போராட மாட்டேன் (1 பேது 2:18-23; 1 கொரி 6:7)

9. எனது வார்த்தைகளில் கனிவாகவும் நிதானமாகவும் இருப்பேன்;
விவாதத்தில் என் சத்தத்தை உயர்த்தமாட்டேன் (மத் 12:18-19; நீதி 15:1).

***நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்;***
***அவர்கள் திருப்தியடைவார்கள்.***

10. நீதியின் கனிகளை என் வாழ்வில் பெருக்குவேன்;
அந்தகாரச் செயல்களில் ஈடுபட மாட்டேன் (எபே 5:7-12).

11. தேவனது வசனத்தில் தவறாது மேய்ந்துகொள்ளுவேன்;
எனது ஜெபத் தியான வேளையை எதுவும் களவாடவிட மாட்டேன் (யோபு 23:12).

12. எப்பொழுதும் பரிசுத்த ஆவியால் நிறைந்திருப்பேன்;
தவறான சிற்றின்பங்களில் சிக்கிக்கொள்ள மாட்டேன் (எபே 5:15-18).

***இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்;***
***அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.***

13. தேவையிலிருப்போருக்கு ஒரு நல்ல சமாரியனாயிருப்பேன்;
உதவி பெறத் தகுதியுள்ளோருக்கு அதை மறுக்க மாட்டேன் (சங் 41:1; நீதி 3:27).



14. மற்றவர்களைத் தயாளமாய் மன்னிப்பேன்;
அவர்களிடம் என் பொறுமையை இழக்கமாட்டேன் (மத் 18:23-35)

15. எனது வேலைக்காரரையும் உதவி ஊழியரையும் பட்சமாய் நடத்துவேன்;
எனக்கும் ஓர் எஜமான் பரத்தில் உண்டென்பதை மறக்கமாட்டேன் (எபே 6:9).

***இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்;***
***அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.***

16. கிறிஸ்துவின் இரத்தத்தால் இடையறாது கழுவப்பட நாடுவேன்;
எனது நற்குணங்களைக் குறித்துப் பெருமையடிக்க மாட்டேன் (1 யோ 1:7-9).

17. தூய எண்ணங்களாலேயே என் மனதை பரப்புவேன்;
பக்திவிருத்தியற்ற காரியங்களைச் சிந்திக்கமாட்டேன் (பிலி 4:7-9).

18. முற்றும் பரிசுத்தமாக்கப்படுதலைத் தீவிரமாய் வாஞ்சிப்பேன்;
அதற்குக் குறைவானதில் திருப்ணியடைய மாட்டேன் (1 தெச 5:22-24).

***சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்;***
***அவர்கள் தேவ புத்திரர் எனப்படுவர்கள்***

19. தவறிழைக்கப்பட்டவரோடு ஒப்புரவாவேன்;
எவருக்கும் விரோதமாக வைராக்கியமாய் இருக்கமாட்டேன் (மத் 5:23,24).

20. பிரிவினை இருக்குமிடத்தில் ஒற்றுமையைக் கொண்டுவருவேன்;
குடும்பம், சபை, சமுதாயம் எங்கும் பிளவுண்டாக்க மாட்டேன் (நீதி 6:12-15,19).

21. உலகச் சமாதானத்திற்காய்த் தவறாது ஜெபிப்பேன்;
நடக்கும் காரியங்களைக் கேட்டு நம்பிக்கையிழக்க
மாட்டேன் (1 தீமோ 2:1-4).

***நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்;
பரலோக ராஜ்யம் அவர்களுடையது.***

22. எங்குமுள்ள மக்களைத் தைரியமாய் நீதிக்குட்படுத்துவேன்;
விசாரிக்கப்படும்போது சத்தியத்தைத் தளர்த்தமாட்டேன்
(தானி 12:3; 3:16-18).

23. உலகெங்கிலுமுள்ள துன்புறும் சபைக்காய் மறவாது
ஜெபிப்பேன்;
கிறிஸ்தவரல்லாதோருக்குமுன் கிறிஸ்தவர்களைக் காட்டிக்
கொடுக்க மாட்டேன் (எபே 6:18-20; மத் 24:9,10).

24. புதிய இடங்களில் நடக்கும் பணிகளுக்குத் தாராளமாய்க்
கொடுப்பேன்;
ஆசீர்வாதங்களைத் தன்னலமாய் அனுபவித்துக்கொண்டி
ருக்க மாட்டேன் (பிலி 4:3,15,16).

25. **இவ்வுடன்படிக்கையை அவ்வப்போது வாசித்து,
தேவ மகிமைக்காகவும் மனித நலனுக்காகவும் அதைக்
காத்துக்கொள்ளுகிறேனா என்று ஆராய்ந்து பார்ப்பேன்.**

.................................... ....................................................

நாள் கையொப்பம்



## 40

# காலமோ செல்லுதே !

- ஆகையால் இப்பொழுதே
  உங்கள் வழிகளைச் சீர்ப்படுத்துங்கள்!
  (எரே 26:13; யோவேல் 2:12,13)

- ஆகையால் இப்பொழுதே
  விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்!
  (மாற் 13:33; லூக் 21:36)

- ஆகையால் இப்பொழுதே
  எல்லா வசனத்துக்கும் கீழ்ப்படியுங்கள்!
  (அப் 10:33; ஆமோஸ் 8:11,12)

- ஆகையால் இப்பொழுதே
  ஒருவரையொருவர் பக்திவிருத்தியாக்குங்கள்!
  (எபி 10:24,25)

- ஆகையால் இப்பொழுதே
  நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்!
  (2 இரா 7:9; 2 கொரி 6:1-3)

- ஆகையால் இப்பொழுதே
  தாராளமாய்க் கொடுங்கள்!
  (2 கொரி 8:9-11; லூக் 12:20,21)

- ஆகையால் இப்பொழுதே
  கர்த்தரை அண்டிக்கொள்ளுங்கள்!
  (சங் 2:12)

»¿°jt thœéš
ãiwthŒ tsu cztë¡F«
xU Âdrç¤ Âahd üš...



*சகோதரன் ஸ்டான்லி நாற்பது ஆண்டுகளில்
எழுதியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டது.*

***அனைத்துச் சபையினரும்...
அனைத்து வயதினரும்...
அனைத்துத் துறையினரும்...
விரும்பி வாசிக்கும்
ஒரு புதிய படைப்பு!***

432 பக்கங்கள்; விலை ரூ. 150/- அனுப்பச் செலவு ரூ. 30/-
10 பிரதிகளுக்குமேல் 30% தள்ளுபடி

ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம், குஜராத்தி, பெங்காலி,
மராத்தி, மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளிலும் உண்டு.

ஆசிரியராலேயே தமிழில் வாசிக்கப்பட்ட
365 தினசரித் தியானங்களும் அன்றன்றுள்ள
வேத வாசிப்புப் பகுதிகளும் ஓர் ஒலித்தட்டில் உண்டு.
விலை ரூ. 150/- அனுப்பச் செலவு ரூ. 30/-

*கிடைக்குமிடம்:*

R. STANLEY
13 Church Colony, Vellore 632 006, India
*Tel: 00 91 98437 07600*
*<stanleyonbible@hotmail.com>*



# ‘‘பைபிள் புதையல்கள்’’

by **R. ஸ்டான்லி**



ஆன்மீக வாழ்வின் துவக்கமுதல்
இவ்வுலக வாழ்வின் முடிவுவரை
200 திருத்துதல் திருமறைப் பாடங்கள்

■

832 பக்கங்கள்;
உறையுடன் தடித்த அட்டை; ரூ. 500/-
அனுப்பச் செலவு ரூ. 50/-
*ஆங்கிலத்திலும் உண்டு.*

■

இப்புத்தகத்திலுள்ள 200 பாடங்களும்
ஒலித்தட்டுகளாகவும், ஒளித்தட்டுகளாகவும் உண்டு.
*ஆங்கிலத்திலிருந்து தமிழ்.*

□

40 ஒளித்தட்டுகள்
ஒவ்வொன்றும் 2 மணி 30 நிமிடம் ஓடக்கூடியது.
ஒரு தொகுப்பின் விலை ரூ. 1500/-
அனுப்பச் செலவு ரூ. 100/-

□

2 MP3 ஒலித்தட்டுகள்
ஒவ்வொன்றும் 50 மணி நேரம் ஓடக்கூடியது.
ஒரு தொகுப்பின் விலை ரூ. 100/-
அனுப்பச் செலவு ரூ. 30/-

■

***100 மணி நேரத் திடமான வேத போதனை***

■

தனித்தியானத்திற்கும் குழு ஆராய்ச்சிக்கும் ஏற்றது.
புத்தகத்துடன் ஒலி-ஒளித்தட்டுகளைப் பயன்படுத்துவது
3-ஆண்டு வேதக் கலாசாலைப் படிப்பிற்குச் சமம்!

*இவை ஆசிரியரிடம் கிடைக்கும்.*

**<u>ஆசிரியரது பிற நூல்கள்</u>**

- ❐ *அறிவூட்டும் அகவுணர்வுகள்*
- ❐ *ஆவியின் அபிஷேகம் பெறுவது எப்படி?*
- ❐ *ஆனந்த அறுவடை*
- ❐ *இரட்சிக்கப்படுவது எப்படி?*
- ❐ *இன்னும் நேர்த்தியாய்ப் பிரசங்கிப்பது எப்படி?*
- ❐ *உயர்ந்த வழிகள் உயர்ந்த எண்ணங்கள்*
- ❐ *ஊழியரும் மக்களும்*
- ❐ *எதிர்நீச்சல் வாலிபர்*
- ❐ *எழுப்புதல் வரும்போது ...*
- ❐ *கண் திறக்கும் கட்டுரைகள்*
- ❐ *காட்டுத் தேன்*
- ❐ *கீழ்ப்படிதலே மேல்படி!*
- ❐ *சமநிலைக் கிறிஸ்தவன்*
- ❐ *சிறு நரிகள்*
- ❐ *திறந்த வானம் (எபிரெயர் நிருப விளக்கம்)*
- ❐ *திரும்பிய மனிதன் (ரோமர் நிருப விளக்கம்)*
- ❐ *நெஞ்சில் நெருப்பு*
- ❐ *பொறுமை இருந்தால் மனிதன் ஆகலாம்!*
- ❐ *பொற்பழங்கள்*
- ❐ *பைபிள் பதில்கள்*
- ❐ *மாணவ மணிகளுக்கு...*
- ❐ *வல்லமை தேவனுடையது!*
- ❐ *விசுவாச வாழ்வு*

விலைப் பட்டியலுக்கு எழுதுங்கள்.

இப்புத்தகங்களும், ஆசிரியரது திருமறைச்செய்திகள்
அடங்கிய ஒலி-ஒளித்தட்டுகளும் கிடைக்குமிடம்—


Blessing Literature Centre
21/11 West Coovam Road
Chintadripet, Chennai 600 002, India
*Tel: 00 91 44 28450411 <blc@bymonline.org>*




**StanleyOnBible.com**

***A WEBSITE FOR BIBLE LOVERS***

## <u>CONTENTS</u>

- ❐ ***General Messages***
  Enlightening Articles for Christian Growth
- ❐ ***Sermon Outlines***
  Outlines on miscellaneous subjects for
  Personal Meditation and Pulpit Preaching
- ❐ ***Bible Studies***
  Studies on specific themes
  and select books of the Bible
- ❐ ***Doctrinal Essays***
  Corrective Teaching to uphold
  Sound Doctrines of the Bible
- ❐ ***Youth Matters***
  Practical Guidelines to Young Men
  and Young Women for Successful Living
- ❐ ***Leaders Column***
  Biblical Insights and Practical Lessons
  on Christian Leadership
- ❐ ***Missionary Challenge***
  Calling Christians to obey
  the Great Commission of Christ
- ❐ ***My Answers***
  Answers to Questions
  frequently asked but rarely answered
- ❐ ***Quotable Quotes***
  Stanley's analytical Statements
  about Christian Life and Ministry
- ❐ ***Video Talks***
  Stanley's Bible Sermons
  in Video & Audio format, freely downloadable

Register your e-mail id in this website
to receive updates instantly.

# *ஆசீர்வாத இளைஞர் இயக்கம்*

***எழுப்புதலுக்கும் நற்செய்தி அறிவிப்பிற்கும் அர்ப்பணிக்கப்பட்டு 1971 முதல் இயங்கிவரும், சபைப்பிரிவு பாகுபாடில்லாத, ஒரு திருப்பணி***

❐

எழுப்புதல் முகாம்கள், திருமறைப் பாடங்கள்,
பயிற்சித் திட்டங்கள் நடத்துதல்.

❐

பள்ளிகள், கல்லூரிகளில் மாணவ மாணவியருக்கு
ஜெபக்குழுக்கள் உருவாக்குதல்.

❐

முழுநேர ஊழியரல்லாத சகோதர சகோதரிகளின்
குழுக்கள் மூலம் கிராமங்கள், குடிசைப் பகுதிகள்,
மருத்துவமனைகள் முதலியவற்றைச் சந்தித்தல்.

❐

ஏறத்தாழ 350 முழுநேர மிஷனரிகள் மூலம் அசாம்,
ஆந்திரப் பிரதேசம், இராஜஸ்தான், உத்திரப் பிரதேசம், ஒரிசா, கர்நாடகம், குஜராத்,
கேரளம், சத்தீஸ்கார், மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம்,
மேற்கு வங்கம், டில்லி, தமிழகம் மற்றும் ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களிலுள்ள
கவனிப்பாரற்ற கிராமங்களிலும் ஆதிவாசிப் பகுதிகளிலும் சபைகள் நிறுவுதல்.

❐

அசாமி, ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம்,
குஜராத்தி, தமிழ், தெலுங்கு, பெங்காலி, மராத்தி, மலையாளம்
ஆகிய மொழிகளில் *"ஆசீர்வாதம்"* எனும் பத்திரிகை, புத்தகங்கள்
மற்றும் ஒலி-ஒளித்தட்டுகள் வெளியிடுதல்.

❐

மருத்துவப்பணி, நிவாரணப்பணி மற்றும் எழுத்தறிவு கற்பித்தல்
மூலம் எளியோர், ஒதுக்கப்பட்டோருக்கு உதவுதல்.

*ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்! ஆதரியுங்கள்!*

**ஆசீர்வாத இளைஞர் இயக்கம்**
**சர்ச் காலனி, வேலூர் 632 006**
*தொலைபேசி: 00 91 416 2242943, 2248943*
*<hq@bymonline.org>   www.bymonline.org*